

மாதப் பத்திரிகை

ஆசிரியர் :

கா. வே. ராமசந்திரன்

மூன்ருவது வால்யூம் பிரமாதி வருஷம் மாசிப் பகுதி

15—2—1940.

ஒரு விண்ணப்பம்.

இந்த சஞ்சிகை 'சில்பஸ்ரீ'யின் முதல் வருஷத்தைப் பூர்த்தி செய்வது. புகழோடு தோன்றிய போதிலும், கேவலம் புகழுக்காகவோ பொருளுக்காகவோ, 'சில்பஸ்ரீ' நடத்தப் படவில்லை என்பதை அன்பர்கள் அறிவார்கள். 'சில்பஸ்ரீ' இயற்றிய தமிழ்த் தொண்டை நாம் பாராட்டுவதும் உசிதமன்று. குறைந்தபக்ஷம் ஐந்நூறு அபிமானிகள் 'சில்பஸ்ரீ'யை ஆதரித்தால், 'சில்பஸ்ரீ' நீடித்து உழைக்க இயலும். தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், புஸ்தகசாலைகள், சங்கங்கள் முதலியவற்றின் ஆதரவே போதுமானது. ஆனால், இதுவரை, ஐந்நூறு அபிமானிகளேனும் கிட்டவில்லை என்பதை இச்சமயம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் அபிமானிகள் ஒவ்வொருவரையும் தலைக்குப் பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்குமாறு பிரார்த்திக்கிறோம். பங்குனிக்குள் சந்தாதாரர்கள் கிடையாவிடின், எப்போது கிடைக்கிறார்களோ அதுவரை, 'சில்பஸ்ரீ' நிறுத்திவைக்கப்படும்.

அப்படி நிறுத்தாமல், தொடர்ச்சியாகவே நடைபெறுமாறு தமிழன்பர்கள் உதவுவார்களாக.

விஷய ஸூசிகை.

விஷயம்:

கவிதா விமர்சம்

1.	ரேடியோவும், ரேடியோ நாடகமும், ஒரு விமர்சகரும்	... கா. வே. ராமசந்திரன்	 65
2.	சிவஞான சுவாமிகள்	... 'ஜனகருமாரி'	... 71
3.	மூன்று குட்டிக் கதைகள்	... பி. கோதண்டராமன்	... 72
4.	மர்ம மலர்	... 'இளையவாதூலன்'	 74
5.	தகுதி	... வெ. திருப்பதி நாயுடு	... 75

புதுக்கல்பனைகள்

1.	மகராசாவின் வெள்ள நாக்குட்டி	... மா. கிருஷ்ணன்	 77
2.	சங்கங்கள்	... 'கட்டி பூசியடிகள்'	... 80
3.	சந்திரகுப்தன்	... K. வரதாச்சாரி, B.A., B.L.,	... 81
4.	கோயிற் கபாடம்	... ரா. ஸ்ரீ. தேசிகன்	... 94
5.	ராமனும் ஸீதையும்	... 'ஸ்ரீ ராஜநாயகி'	... 95
6.	வாழ்த்துப்பா	... ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்	 105

கீதப் பகுதி

1.	தியாகராஜ ஸ்வாமிகள்	... கா. வே. ராமசந்திரன்	... 106
2.	கேசவ கீர்த்தனம்	.... டி. கே. கோவிந்தையர்	... 112
3.	சாரங்கபாணி கீதம்	... ,, ,,	... 112
4.	ஸ்ரீ ராமகீதம்	... ,, ,,	... 113
5.	சரபம் முத்துசாமிக் கவிராயர்	... ,, ,,	... 115

நாடகப் பகுதி

1.	தியாகராஜ ஸ்வாமிகள் அனுபந்தம்	... கா. வே. ராமசந்திரன்	... 116

அனுஷ்டானப் பகுதி.

1.	சதாசிவப் பிரமேந்திரர்	... வஸிஷ்டபாரதி	... 120
2.	வரகூர் ஸ்ரீ கோபால பாகவதர்	... வ. வேணுகோபாலன்	 122

புஸ்தக விமர்சனம்

1.	தமிழ்ப் புலவர்கள் வரலாறு	... அகஸ்திய தாஸன்	... 127

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்யூம்தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி விலை அணா 4.

வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட) ரூ. 3.



கவிதா விமர்சம்.

ரேடியோவும், ரேடியோ நாடகமும், ஒரு விமர்சகரும்

(கா. வே. ராமச்சந்திரன்.)

I

ரேடியோவைக் காது வாயிலாக உகைவர்த்தமானங்களை அறிவுறுத்தும் பத்திரிகை என்று கூறலாம். பத்திரிகையைப்போல ரேடியோவிற்கும், கட்டுரை கதை முதலியன முக்கிய அம்சங்களாம். ஆனால் பத்திரிகைக்கு இல்லாத ஒரு தனி வசதி ரேடியோவிற்கு உண்டு. பாட்டைப் பாடின க்ஷணமே உலகெங்கும் ரேடியோவில் கேட்கலாம். தொனிகளைக்கொண்டே பல பல ஸம்பவங்களை ரேடியோவில் வர்ணிப்பது இயலும். காதினாலேயே கிரஹிக்கக்கூடிய ஒரு அற்புத உலகத்தை நமக்கு ரேடியோ தந்துள்ளது. இதுவரையில், நாம் படங்களைக்கொண்டு வீடுகளையும் பிம்பங்களைக்கொண்டு நந்தவனங்களையும், வேறு வெற்றிடங்களையும் அலங்கரித்து வந்தோம். இனி, ருதுக்களையும், மஹாபுருஷர் அவதார தினங்களையும், ரேடியோவினால் அலங்கரிப்போமாக. நமது காலைகளையும், மாலைகளையும் விசித்திரமான ராகதோரணங்களாலும், கவிகளின் கற்பனைகளாலும் அழகுபடுத்துவோமாக.

ரேடியோவுக்கு விஷயதானம் செய்பவரும், பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் எழுத்தாளர்களே. வாசகர்களுள்ளும் எழுத்தாளர்களுள்ளும் இரண்டு வகைகள் உள. இங்கிலீஷ் பாஷையில் உள்ள 'Classical, 'Popular' என்ற விபாகத்தை அனுசரித்து' இவ்வகைகளை நிஷ்டூரமில்லாமல் 'கற்றோர்' (The wise) என்றும் 'மற்றோர்' (The otherwise) என்றும் பிரிக்கலாம். 'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கிதயம் களியாதே' என்பது ஒரு பழைய பாடல். கவிக்கு சமானமான ஹ்ருதயத்தை உடையவராதலால், கற்றோருக்கு ஸஹ்ருதயர் என்று பெயர். 'கற்றுத்தெளிந்தார் உவக்கும் வரைக்கும் காணுற்ற கலைஞான மாண்பென்றெணேனால்' என்பர் காளிதாஸர். பவபூதியைப்போல ஷெல்லியும் ஒருசமயம் 'தனக்குச் சமானமான மனோதர்மத்தை யுடையவரே தன்னை ரஸிக்கத் தகுந்தவர்' என்றார். கற்றார் காமுறும் விஷயங்களாவன: கீதம், நாட்டியம், காவ்யம்முதலிய சிற்பங்களே. பாட்டையோ கூத்தையோ சீர்தூக்குமிடத்து, இவர்கள் குணதோஷங்களைக்கொண்டே நிர்ணயிப்பதல்லாமல், அபிமானத்தைக்கொண்டாவது துவேஷத்தைக்கொண்டாவது நிர்ணயிப்பவரல்லர். இந்த கக்ஷியில் எழுதுவோர், வாசித்து ரஸிப்பவர் இருவரும்

விதத்தர்களே. இவர்களது லக்ஷ்யமும் ரஸானுபவமே; ராஜீயமன்று. ஆனால், இவர்கள் தேசவிரோதிகளல்லர். இவர்களது பாஷாபிமானமும், பாஷாபிவிருத்திக்காக இவர்கள் செய்துள்ள திருப்பணியுமே, இவர்களது தேசபக்திக்கு அடையாளமாவன. ஸ்வராஜ்யத்தைக் கோரியபோதிலும், அது கிட்டுமுன்னர், வழியில், விலையற்ற நமது கலைச்செல்வங்களை இழக்கச் சம்மதியாதவர் இவர். இப்பகுதியினரது பத்திரிகையே சில்பஸ்ரீ.

விதத்தர்களல்லாத 'மற்றவர்' என்ற பகுதியினரது லக்ஷ்யம் ராஜீய இயக்கமே; ரஸானுபவமன்று. ராஜீய இயக்கத்துக்குத் தமிழ் நாட்டில் தமிழைவிடச் சிறந்த ஸாதனம் எது? இவர்கள் 'தமிழர் தமிழிலேயே பாடவேண்டும்; தமிழிலேயே கீதங்களைக் கவனம் செய்ய வேண்டும்' என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இவர்களுள் பெரும்பாலர் நவீனர்களே. ஆனால் ரேடியோவுக்கு உயிர்நிலையான கானமோ மிகப் புராதனமான கலையாகும். ரேடியோ பாடகர்களும், வாத்தியக்காரர்களும், அக்கலையில் 'கற்றவ'ரே. ரேடியோ என்பது கேட்கப்படும் பத்திரிகையானதால், 'மற்றவர்'களது பத்திரிகைகளுக்கு தாயாதி ஸ்தானத்தில் உள்ளது. அவிதத்தர்களும், நவீனருமான 'மற்றவர்', தாயாதியினால் வெளியிடப்பட்டுவரும் புராதனமான ஒரு வித்தையைப் பயின்றவருமான 'கற்றவரை' எப்படிப் புகழுவது? எந்த ரேடியோவிலும், பத்திரிகையிலும் கற்றவர்கள் அதிகமாயுள்ளார்களோ, அந்த ரேடியோவும், பத்திரிகையும் இவர்கள் துவேஷத்துக்கு விஷயமாவதும் இயல்பே.

ஆனால் கானம் ராஜீயமன்று; அது தைவீகமானதொரு வரம்; விலைக்கு வாங்கமுடியாதது; பிறவியில் பெறாதவர், அதைப் பெறுவதரிது. ஆனால் கானத்தைத் தமிழ்ப்பத்திரிகைகளில் விமர்சனம் செய்யும் சிலர், வெகுவாய் கானம் என்பது இன்னது என்றறியாத 'மற்றவர்களே.' இப்படியிருக்க, இவர்களால் பாட்டின் குணதோஷங்களை எப்படி அறிய முடியும்? தமது அபிமான த்வேஷங்களை ஆதாரமாய்க் கொள்ளாமல், எப்படி, பாட்டைப்பற்றி நடுநிலையான அபிப்ராயங்களைச் சொல்ல முடியும்? ஆனாலும் இவர்களது அட்டஹாஸங்களால், மெய் பொய்யாய்விடாது; பொய் மெய்யாய்விடாது; நல்ல பாட்டு கெட்டுவிடாது; கெட்ட பாட்டு ஓங்கிவிடாது.

ரேடியோ என்பது மத்யஸ்தமானதொரு பத்திரிகை ஆனதால், 'கற்றவர்', 'மற்றவர்' என்ற இருவகுப்பினருக்கும் அங்கு இடமுண்டு. பிற விஷயங்களுக்கு 'மற்றவ'ரே போதுமானபோதிலும், கானம், சில்பம் முதலியவற்றை எடுத்துரைக்க ரேடியோ 'கற்றவ'ரைக் கோருகிறது. இக்காரணத்தால், தியாகராஜ உற்சவத்தைத் திருச்சி ரேடியோவில், சில்பஸ்ரீயின் பிரதிநிதியாக நான் நடத்த நேர்ந்தது.

பொது ஜனங்களுள் பெரும்பாலர் 'மற்றவர்'களாயிருந்தபோதிலும், தமிழ் நாட்டில் 'கற்றவ'ரும் பலர் உள்ளார். இவர் பொருட்டே எல்லார்க்கும் பெய்யும் மழை; இந்நல்லாருக்கு வந்தனம்.

II

திருச்சி ரேடியோவில் நடந்த தியாகராஜ கைங்கரியத்துக்கு மூலகாரணம், ஸ்ரீமான் G. தியாகராஜ சாஸ்திரிகளே. கீர்த்தனைகளைப் பாடுவதற்கு ஸ்ரீமதி D. K. பட்டம்மாளும், ஸ்ரீமான் மூர்த்திராவ் பாகவதரும் ஏற்படுத்தப்பட்டனர். இவர்கள் பாடவேண்டிய பாட்டுகள் இன்ன என்பது இரண்டு மாதத்துக்கு முன்னரே, இவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாடமில்லாத கீர்த்தனங்களைப் பாடம் செய்து பாடுவதாக இருவரும் அன்புடன் ஏற்றுக்கொண்டனர். இங்கு இதைப்பற்றிப் பேசப்புகுந்தது, இவர்களது தோஷங்களை வெளிப்படுத்துவதற்காகவன்று. எம்மைப்போல நாடகத்தையோ, கச்சேரியையோ நடத்த விருப்பம் கொண்டவருக்கு, எமது அனுபவங்கள் வழிகாட்டியாகலாமன்றோ? எமது பிழைகளை அவர்கள் திருத்திக்கொள்ளலாமன்றோ?

திருச்சிக்குப் புறப்படுவதற்குச் சிலநாள் முன்பு ஒத்திகை பார்த்த சமயத்தில், பாட ஏற்றுக்கொண்டவர்களுக்கு எதிர்பாராத சில அஸௌகரியங்கள் காரணமாக சில பாட்டுகள் பாடமாகவில்லை என்பது தெரியவந்தது.

ஆனல் ஶ்ரீமதி பட்டம்மாள் ஒத்திகையில் 'ஸாகி எவரோ' 'கொலுவை யுன்னடே' முதலிய கீர்த்தனங்களை அற்புதமாகப் பாடினர்கள். தனி ஒத்திகையைக் கோரிய பாகவதருக்கு, குறிப்பிட்ட தினத்திலே வர ஸௌகரியப்படவில்லை. இதற்கு முன்பே நான் அவர் பாடவேண்டிய அபூர்வமானதொரு கீர்த்தனத்தை பாடிக்காட்டி, ஸ்வரப்படுத்திக் கொடுத்ததன்றியும், 'என்னடு ஜீதுனே' என்ற கீர்த்தனத்தையும் பாவத்துடன் பாடுவது எப்படி என்பதையும், கன்னட வங்காளா என்ற ராகத்தின் ஸ்வரூபத்தையும் அறிவித்திருந்த போதிலும், அவர் பாடுவதெப்படி இருக்கும் என்பதை அறிய முடியவில்லை.

இதற்கடுத்த காட்சி திருச்சிராப்பள்ளி ரேடியோ நிலயத்தில். அங்கு பார்த்த ஒத்திகையிலும், பல குறைகள் வெளியாயின. ஶ்ரீமதி பட்டம்மாளுக்கு முன் சொன்ன அஸௌகரியங்கள் காரணமாக சில பாட்டுகள் பாடமாகவில்லை. இவைகளில் முக்யமானவை 'எவரிச்சிரிரா' 'சேதுலாரா' 'லேகன' என்பன. பாகவதரோ 'ப்ராரப்த மிட்லுண்டகா'வை, கமாஸிலும் 'என்னடு ஜீதுனே'வை சக்ரவாகத்திலும் பாட ஆரம்பித்தார். இவை காரணமாகவே, எனது உபந்யாசத்தில் ஒன்றை நானே பாடிக்காட்ட நேர்ந்தது; இன்னொன்றை வேறொருவரைக் கொண்டு பாடச்செய்ய நேர்ந்தது.

ஆரம்பத்தில் ஒரு வாத்ய கண்டமும், பாவண ஸம்ஹாரத்துக்குப் பிறகு, பல சாரீரங்களால் ஒருமித்துப்பாடத்தக்க கீர்த்தனமொன்றும் ஏற்படுத்தியிருந்தோம். வாத்யத்தில் வாசிக்கப்பட்டது 'ஜகதாநந்தகாரக'. ரேடியோ வாத்தியக்காரர்களது பாடத்தைச் சில இடங்களில் மாற்றவேண்டியிருந்தது. ஒரு சரணத்தை மத்யகாலப்படுத்த வேண்டியிருந்தது. 'பஜரே' என்ற கீர்த்தனத்தின் பாடத்தை முழுவதும் மாற்றவேண்டியிருந்தது. இப்படிக் காட்டிய திருத்தங்களை எல்லாம் அன்புடன் ஏற்று, வெகு சீக்கிரம் திருத்திக்கொண்டு, 'பஜரே'யின் பாடத்தை முழுவதும் மாற்றிக்கொண்டு, ஸாதகம் செய்து, அழகாகவும், ஒற்றுமையுடனும் வாசித்தும் பாடியும் கைங்கரியத்தை நிறைவேற்றிய பெருமை திருச்சி ரேடியோ வித்வான்களதே. இப்பெருமையில் பெரும்பகுதி, ஶ்ரீமான் K. C. தியாகராஜ ஐயரதே. 'பஜரே'யின் பாடம் காலஞ்சென்ற சைதாப்பேட்டை திருமலாசாரியார் பாடிவந்த பாடமே. இந்த திருத்தங்களுக்கு சாக்ஷி ஶ்ரீமான் G. தியாகராஜ சாஸ்திரிகள்.

ஆனல் முக்கிய பாடகர்களுக்குத் தெரியாத 'எவரிச்சிரிரா' 'சேதுலாரா' 'லேகன' முதலியவற்றை யார் பாடுவது? இவை எல்லாம் வெகு முக்கியமான கீர்த்தனைகளே! ஒன்றேனும் விடத்தகுந்தது அல்ல. அந்த சமயத்தில் ஒரு அதிசயம் நடந்தது. அன்று எங்கள் கோஷ்டியில் ஒரு ராமபக்தனவது இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. 'எங்கெங்கு ராமனைப் பாடுகிறார்களோ, அங்கெல்லாம் பகவான் மாருதி சிரமேல் கரங்குவித்து ஆனந்தக் கண்ணீர் பெருகும் கண்களுடன் நிற்பர்' என்பர் பெரியோர். அம்மாருதி நினைத்தார்: 'இவர்கள் எல்லாரும் ராமகீர்த்தனம் செய்யப் போகிறார்கள்; அதுவும் ஸோதான் தியாகராஜன் பாடிய பாட்டுகளாலே; இத் திருப்பணி கெடலாகாது' என்றெண்ணி, அவ் வூரில் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாய்க் கிடந்த வீணை தனம்மாளின் புத்திரியான ஶ்ரீமதி லக்ஷ்மீரத்னம்மாள் மனதில் புகுந்து 'நீ விரைந்து, சென்று, ராம கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்வாய்' என்று சொல்லி மறைந்தருளினர். அப் பெண்மணியும் தன் தேகஸ்திதியைக் கவனிக்காமல், விரைந்துவந்து, தனக்கும் ராம நாடகத்தில் ஒரு பகுதி தருமாறு வேண்டினள். அப் பெண்மணி பாடிய கீர்த்தனங்களின் வைபவத்தை என்னென்று சொல்வது! மாருதியும் ராமனும் அந்த அபூர்வமான நைவேத்யத்தை ஏற்றார்கள் என்பதில் என்ன ஸந்தேஹம்? அன்று ஶ்ரீமதி பட்டம்மாளும் வெகு அழகாகப் பாடினர்கள். ஶ்ரீமூர்த்தி பாகவதர் பாடிய முறையும் சுத்தமான முறையே. 'லேகன'வை அன்று பாடியவர் ஶ்ரீ K. C. தியாகராஜய்யரவர்கள். இப்படி இந்த நாடகோற்சவம் வெகு சிறப்பாகவே நடந்தேறியது.

ஒரு சிறு விஷயம்: கானவித்தையில் சிறந்த தேர்ச்சி பெற்றுள்ளவர்கள், தமிழ் நாட்டில் உள்ள அளவு வேறு எந்த நாட்டிலும்

காணோம். இவர்களைச் சரியான வழியில் சேர்க்கத் தக்க நாயகன் ஒருவன் இருப்பின், தற்சமயம் தென்னாட்டில் ஆச்சரியமானதொரு கான விகாஸம் தோன்றலாம்; கான வித்தையும் எதிர்பாராத வண்ணம் விருத்தியடையலாம். ஆனால் தற்சமயம், இப்பாட்டெல்லாம் 'மற்றவர்'களது த்ரிகாலபூஜைக்கு ஒரு வீணை நைவேத்யம் ஆவதைத் தவிர, இவைகளால் கான வித்தைக்கு ஒரு பயனுமில்லையே என்று துக்கிக்க வேண்டியிருக்கிறது.

III *

'கற்றோ'ரை 'மற்றோர்' எப்படி ரஸிக்கிறார்கள் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் கிடைத்தது. இரண்டாவது வகையைச் சேர்ந்த விமர்சகர் ஒருவர், ரேடியோவில் உபந்யாசம் செய்தவர்களில் சில பெயர்களைக் குறிப்பிட்டுப் பிறகு 'சில பிரசங்கிகள் நடுநடுவே பாடவும் ஆரம்பித்துவிட்டார்கள்; ஆனாலும் கர்நாடக ஸங்கீதம் இன்னும் உயிர்வைத்துக்கொண்டுதானிருக்கிறது' என்றார். குறிப்பிட்ட பிரசங்கிகள் அவ்வளவு பேரும் கான வித்தையைப் பலகாலமாகப் பயின்றவரும், சுத்தமாயும் ரஞ்சகமாயும் பாடக்கூடியவர்களுமே. இவர்கள் பாடியதில், இன்னவிடத்தில் ராகதானங்கள் நஷ்டமாயின என்றாவது, அபஸ்வரங்கள் கேட்கப்பட்டன என்றாவது, ஸாஹித்யம் கெட்டுவிட்டது என்றாவது ஸ்பஷ்டமாயும், பிரத்யக்ஷமாயுள்ள கானதோஷங்களை ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டினால், பிரசங்கிகள் தவறாமல் பிழைகளைத் திருத்திக் கொண்டு பாடிக்காட்டுவார்கள். அப்படிக் காட்ட இயலாதவராய் விமர்சகர் 'ஸங்கீதம் சாகும்போலிருந்தது' என்றதால் விமர்சகருக்குப் பாட்டில் பிரக்ஞையில்லை என்பதும், ஸங்கீத ஸம்பந்தமான அவரது அறியாமையுமே விளம்பரமாயின. ஆனால் 'சங்கீதம் இன்னும் உயிர் வைத்துக்கொண்டு தானிருக்கிறது' என்று விமர்சகர் ஒத்துக் கொள்வதால் ஏற்பட்டது என்னவென்றால், 'மற்றவர'து இத்தகைய விமர்சனங்களால் மரணாவஸ்தையையடைந்த சங்கீதம், 'கற்றவர'து பாட்டுகளால் பட்டமரம் துளிர்த்ததையொப்ப, உயிர் பெற்று எழுந்தது என்பதே.

விமர்சகர் பின்னும் எழுதுகிறார்: 'ஒவ்வொரு பாட்டிலும் இன்னின்ன ரஸம் அமைந்திருக்கிறதென்று தெரிவித்தார்கள். இதில் பயானக ரஸம், இதில் சிருங்கார ரஸம், இதில் அற்புத ரஸம், இதில் மைசூர் ரஸம் என்பதாகச் சொல்லிக்கொண்டு போனது வெகு ரஸமாயிருந்தது' என்று. திருவையாற்றில் நடந்த உற்சவத்தை வர்ணித்த விமர்சகரும் 'சாப்பிடும்போது எனக்கு ஒரே ஆச்சரியந்தான். சமையல் எப்படி இவ்வளவு நன்றாயியிருக்கிறது! சாம்பார் ரஸத்துக்கெல்லாம் உப்புப்புளி எல்லாம் சரியாக எப்படிப்போடுகிறார்கள்? எனக்கு இந்த யோசனை' என்பார். என்ன அதிசயமான யோசனை! ராமநாடகத்தில், ராகத்துக்கும் ரஸத்துக்கும் உள்ள சம்பந்தத்தை உபந்யாசகர் சொன்னவிடத்து, இம் 'மற்றவர்'கள் அங்கு பீபத்ஸமான புளி பெருங்காய ரஸத்தை நினைத்து வாயில் ஜலம் ஊறி மகிழ்ந்ததில் என்ன ஆச்சரியம்! 'மைசூர் ரஸம்' என்றது ஒரு ஆச்சரியமான விகடத்துணுக்கு என்று விமர்சகரது எண்ணம். இதற்குப் பெயர்தான் 'க்ராம்யம்' என்பது. விகடத்திலும் 'கற்றவரு'க்கும் 'மற்றவரு'க்கும் எவ்வளவு தாரதம்யம்!

இன்னும் விமர்சகர் எழுதுவதாவது: ''ஆனால் ஒவ்வொரு கீர்த்தனத்துக்கும் ஊஹிக்கப்பட்டிருந்த கட்டம் அவ்வளவு பொருத்தமாயிருந்தது என்று சொல்வதற்கில்லை. 'உதாரணமாக 'ராரா ஸீதாரமணி மனோஹர' என்ற கீர்த்தனத்தை, சூர்ப்பணகை ராமனைப் பார்த்துப் பாடியதாகச் சொன்னார்கள். சூர்ப்பணகை அழகான உருவங்கொண்டு வந்ததாக ராமாயணத்தில் படித்திருக்கிறோம். அவள் திவ்யமான சாரீரத்துடனும் வந்திருக்கவேண்டும் என்றும் தோன்றியது. 'ரா ஆ ஆ ஆ ஸீதா' என்று அவள் கொஞ்சிக்கொண்டு பாடியபோது ராமர் அப்படியே சொக்கிப்போகாதது ஆச்சரியமே. ஆனால் இந்தப் பாட்டை சூர்ப்பணகை எப்படிப் பாடியிருக்கமுடியும் என்று யோசிக்க வேண்டும். ஸீதையைப்பற்றி சூர்ப்பணகை அவ்வளவு இனிய வார்த்தைகளைச்

* இதை வாசிப்பதற்குமுன் இப்பகுதி 106 பக்கத்தில் ஆரம்பமாகும் தியாகராஜ ஸ்வாமிகள் என்ற கட்டுரையையும், 116-ம் பக்கத்தில் தொடங்கும் கீர்த்தனைகளையும் வாசித்துக் கொள்ளவும்.

சொல்லியிருப்பாளா? "ஸீதாரமணியின் மனோ ஹரனே! என்னிடம் வா! என்று அவள் ராம னைப் பார்த்து சொல்லியிருப்பாள்? இது யோசிக்க வேண்டிய விஷயந்தான்." இப்படி யோசிக்க வேண்டும் என்று சொல்லி, யோசனை செய்யாமல் ஆரம்பித்துள்ள இவ்விஷயத்தை இங்கு சிறிது ஆராய்வோமாக.

நினைத்த உருவை எடுக்கவல்ல சூர்ப்ப ணகை 'குயிலின் குரலை யொத்த மழலைச் சொற்களையும், கோவைக்கனிபோன்ற அழகிய அதரத்தையுடைய, மயிலன்ன சாயல் கொண்ட மங்கை வடிவத்துடன் செல்வேன்' என்றெண்ணி 'திங்களின் சிறந்தொளி முகத் தளாய்' மாறி

பஞ்சி யொளிர் விஞ்சுகுளிர் பல்லவமனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி யெளாய்ப்பாள்
அஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

அவள் 'தேனின் மொழி பெற்று இனிய செவ்வி நனி கொண்டோர், மானின் விழி பெற்று மயில் வந்ததென வந்தாள்.' ராமன் உடுத்த மரவுரியைக் கண்டு, அவள்

திருவரை எய்தி ஏமுற
வற்கலை நோற்றன மாசிலாமணிப்
பொற்கலை நோற்றில போலுமால் என்றாள்.

பிறகு இவள் ராமரைக் கணவனாக வரிக்க, அவர் மறுக்கிறார். அப்போது ஸீதை அங்கு வருகி றாள். மறுக்கப்பட்ட சூர்ப்பணகை, ஸீதை யைக்கண்டு இவள் திருமகளோ என்று திகைத்து, பிராட்டியினழகை

பண்புற நெடிது நோக்கிப்
படைக்குநர் சிறுமை யல்லால்
பெண்பிறந் தழகிற் கெல்லை
யில்லையாம் என்று நின்றாள்
கண் பிற பொருளிற் செல்லா
கருத்தெனி னஃதே கண்ட
பெண் பிறந்தேனுக் கென்றால்
என்படும் பிறருக் கென்றாள்!

மறுக்கப்பட்ட சூர்ப்பணகை பிறகு இருவரை யும் பார்த்து 'உருவினுக்கு உலக மூன்றினிரு திறத்தார்க்கும் செய்த வரம்பிவர் இருவர்' என்றாள். இது கம்பராமாயணம். மறுக்கப் பட்ட சூர்ப்பணகை, இங்கு அஸூயையைப் படு வதுபோக (தியாகையர் உபயோகித்ததைவிட) இனிய சொற்களால், ஸீதையை அமிதமாய்ப் புகழுவானேன்?

வால்மீகத்தில், தன்னை நாடிய சூர்ப்ப ணகையை ராமபிரான் பரிஹாஸமாக லக்ஷ்மணனிடம் அனுப்புகிறார். பரிஹாஸத் தை அறியாத சூர்ப்பணகையும், இளைய பெரு மாளைப் பிடிக்கிறாள். அவரும் பரிஹாஸமாக 'ஆர்யஸ்ய த்வம் விசாலாக்ஷீ பார்யா பூவு யவீ யஸீ' 'ராமனுக்கு நீ இளைய மனையாவியாகு வாய்' என்கிறார். காம மோஹிதையான சூர்ப்பணகை பரிஹாஸத்தை உணராமல், மறுபடி ராமனை நாடுகிறாள். 'நாம் இளையா ளாக விருக்கலாம்' என்று நம்பியுள்ள சூர்ப்ப ணகை 'ஸீதாரமணீ மனோஹர' என்றதில் என்ன தவறோ? பிறகு மூக்கும் காதும் அறு பட்டபிறகும், கரனிடம் சூர்ப்பணகை ஓல மிட்ட சமயத்திலும் ராமலக்ஷ்மணர்களை

தருணௌ ரூபஸம்பன்னௌ
ஸுகுமாரௌ மஹாபலௌ
புண்டரீக விசாலாக்ஷௌ
சீரக்ருஷ்ணாஜினாம்பரௌ

என்றும், பிராட்டியை

தருணீ ரூபஸம்பன்னா ஸர்வாபரண பூஷிதா

என்றும் அல்லவா இவள் வர்ணிப்பது?

ஸீதை விஷயத்தில் சூர்ப்பணகை அஸூ யைப்பட்டாளோ இல்லையோ, இந்த விமர்சக ரூபங்கொண்ட காதில்லாச் சூர்ப்பணகை, இந்த ராமச்சந்திரனிடம் பகையும் பொறாமை யும் கொண்டாள் என்பதில் யாதொரு சந்தேக மும் இல்லை.

கீர்த்தனத்தின் பொழிப்புரையும் உள்ளுரை யும் 117-ம் பக்கத்தில் காணவும். இந்த கீர்த்த னம் ராமனை விஷயமாகக்கொண்டது என்பதில் விமர்சகருக்கு ஸந்தேஹமில்லை. ஒரு புருஷ னும் ராமாயணத்தில் 'எனக்கு முத்தம் தா' என்று ராமனைக் கேட்காததால், இதைப் பாடி யவள் ஒரு பெண்ணே. ஸீதை இதைப் பாடி யிருக்கலாம்; ஆனால் ஸீதையின் விப்ரலம்பத் தைப்போல் துக்ககரமாகவும் நிராசையாகவு மில்லாமல், ஸமீபத்தில் பலப்ராப்தி ஆகும்

என்ற ஆசையுடன் கூடியுள்ளது இது. மேலும் ஹிந்தோள வஸந்த ராகம், வஸந்த ருதுவையும் ச்ருங்கார ரஸத்தையும் ஒருங்கே குறிப்பது. ஸீதையும் ராமனை 'ஸீதா ரமணீ மனோஹர' என்றழைக்கமாட்டாள். ஆகையால் பாடியவள் ஸீதையல்ல; வேறு எந்தப் பெண்ணாவது இப்படி மோஹித்திருக்கக்கூடுமா? அப்படி மோஹித்துப் பாடியிருக்கத் தக்கவள் சூர்ப்பணகை ஒருத்தியே. 'ஸீதா ரமணீமனோஹர' என்ற தொடரில் 'எம்மிருவர் மனதையும் ஹரித்தபோதிலும், உன்னை அடைந்தவள் அவளன்றோ' என்ற பொறாமையும், 'நானிருக்க ஸீதையும் ஒரு பெண்ணாவாளோ' என்ற நிஷ்டூரமும், 'ஸீதைக்கு அடங்கியே இளையாளாக இருப்பேன்' என்ற பணிவும் உள்ளுறைவன. தான் இளையாள் பதவியை அடைய எண்ணி மனப்பால் குடித்த சூர்ப்பணகை, எப்படியெல்லாம் ஸீதையை வெல்ல எண்ணமிடுகிறாள் என்பதை மேற்கண்ட உரையில் காணலாம். சூர்ப்பணகை இவ்வாறு பாடியது ஏன் தவறாகும்? அவள் வேறு எப்படிப் பாடியிருக்கக்கூடும்? ராமநாடகத்தில் என்னால் முதல்முதல் ஊஹிக்கப்பட்ட கீர்த்தனம் இதுவே. Where the artists catch an effect others catch a cold' என்றார் ஒரு விகடகவி. 'கற்றவருக்கு ரஸானுபவம் சித்தித்தவிடத்து, மற்றவருக்கு சித்திப்பது தும்மலே.'

விமர்சகரது இன்னொரு சந்தேகமாவது: 'ராமர் ஏன் சொக்கிப் போகவில்லை?' என்பது. ஸீதையின் ரூபத்தில் மயங்கியோ, ராமபிரான் பிராட்டியை மணந்தது? அன்று; 'தாரா: பித்ருக்ருதா இதி' என்றபடி, தகப்பனார் ஆக்ஞையையும், தர்மத்தையும் முன்னிட்டன்றோ? இத்தகைய பிரபு சூர்ப்பணகையின் மாயங்களுக்கு வசமாகாததில் என்ன ஆச்சரியம்?

இன்னொரு ஸந்தேஹம். 'ரிஷிகள் தியாகராஜனால் பாடப்பட்ட ராமனை பஜிக்கிறோம்' என்று எப்படிச் சொல்லியிருக்க முடியும்? தியாகராஜ முத்திரை இந்த ஒரு பாட்டில்தான் இருந்ததா? பிறபாட்டுகளில் இல்லையா? ஐயரவர்களது பிறநாடகங்களில் உள்ள கீர்த்தனங்களில் இல்லையா? இருப்பதால் நேர்ந்த ஆபத்து என்ன? இம்மாதிரி இடங்களில் எல்லாம் 'தியாகராஜ' என்ற சொல்லின் முக்யார்த்தம் பரமசிவனே. இது சிலேடையாக, ஸாஹித்ய கர்த்தாவான தியாகையரைக் குறிப்பது. இந்த நயத்தை 'மற்றவர்' அறிவது இயலுமா?

பர்னார்டு ஷா ஒருசமயம் 'கேட்டதை விபரீதமாகப் பொருள் கொள்ள வேண்டும்; கொண்டதை விபரீதமாக வெளியிடவேண்டும்; அவனே விமர்சகனாவான்' என்றார். இந்த இலக்கணம் இந்த விமர்சகரிடம் பூர்ணமாய் அமைந்துள்ளது. ஸங்கீதத்தையும் ராமாயணத்தையும் எவ்வளவு அழகாக இவர் அறிந்து கொண்டிருக்கிறார்!

சிவஞான சுவாமிகள்

'ஜனக குமாரி'

செந்தமிழ்ச் சைவசித்தாந்தப் பெரியார்களில் ஒருவரான சிவஞான சுவாமிகள் என்பவர் திருநெல்வேலி ஜில்லாவிலே பாவநாசமென்னும் திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே சைவவேளாளர் குலத்திலே பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் ஆநந்தக்கூத்தர்; தாயார் பெயர் மயிலம்மையார்; இவருக்கு இளமையில் இட்ட இயற்பெயர் முக்களாலிங்கர் என்பர். இவர் பாடசாலையிற் கல்வி கற்கும் இளமைப்பருவத்திலேயே குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்தவராய் பாடுந் திறமும் அமையப்பெற்றிருந்தனராதலின், அப்போது அவ்விக்கிரமசிங்கபுரத்துக்குச் சென்ற திருவாவடுதுறைத் தம்பிரான்கள் சிலரைக் கண்டு, துறவின்மேல் இச்சைகொண்டு, அவர்களுடன் திருவாவடுதுறை சென்று, அங்கே ஞானதேசிகராய் வீற்றிருந்த பின் வேலப்ப தேசிகர் என்பவரிடம் சிவதீக்ஷை முதலியன பெற்றுத் துறவியாயினர். இவர் திருவாவடுதுறையில் இருந்துகொண்டு, தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், சமயநூல்களையும், வடமொழியையும், அதிலுள்ள சமயசாஸ்திரங்களையும், தருக்கநூல்களையும் நன்கு கற்றுப் புலமை நிரம்பப் பெற்றனர். சைவசித்தாந்த நூல்களை அங்கேயே தமது ஞானாசிரியராகிய பின்வேலப்ப தேசிகரிடத்தில் சாங்கோபாங்கமாகக் கற்றுக்கொண்டனர்.

பின்னர் இவர் திருவாவடுதுறையைவிட்டு வெளிப்போந்து சென்னைக்குச் சென்று, சென்னையிலும், அதன் அயலூர்களிலும், காஞ்சிபுரத்திலும் பலநாள் வசித்தனர். அங்கு வசிக்கும்போதே இவர் காஞ்சிப் புராணம் முதலிய நூல்களைச் செய்தனர்.

இவர் பிற்காலத்துப் புலவர்களுள் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்குபவர்; தமிழ் இலக்கண அறிவிலும், சைவசித்தாந்த நூலுணர்ச்சியிலும் மிகச் சிறந்தவர்; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளும் பாடுந்திறமும், மொழிபெயர்க்குந் திறமும், சுருக்கியும் விரித்தும் உரையெழுதுந் திறமும், பிற நூற் குற்றம் காட்டலும் அமைய எதிர்நூல் செய்யும் திறமும் வாய்ந்த பெரும்புலமையாளர்.

இவர் இயற்றிய நூல்களுள் முக்கியமானவை :—காஞ்சிப்புராணம், முதற்காண்டம், சோமேசர் முதுமொழி வெண்பா, தர்க்க சங்கிரக வுரை, சித்தாந்தப் பிரகாசிகை, சிவஞான போதமாபாடியம், சிவஞானசித்தியா ருரை, உலாக்கள் முதலியன குறிப்பிடத்தக்கன.

இவருக்குத் தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனிவர் முதலிய பன்னிருவர் மாணாக்கர்கள், இவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த புலவராய் விளங்கினர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இப்பெரும்புலவர் எப்போது பிறந்தார் என்பதாவது, எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தாரென்பதாவது நிச்சயமாய் ஒன்றுந்தெரியவில்லை. திருவாவடுதுறை ஆதீனத்தில் வழங்கிவரும் ஒரு கவியால் இவர், கி.பி. 1785-க்குச் சரியான விசுவாவசு வருஷம், சித்திரை மாதம், ஞாலம் போற்றும் ஞாயிற்றுக்கிழமை, ஆயிலிய நட்சத்திரத்தில் திருவாவடுதுறையில் தேகவியோகமாயினர் எனத் தெரிகின்றது. அக் கவி பின்வருமாறு :

மன்னும் விசுவா வசுவருடமேடமதி
உன்னிரவி நாட் பகலோ தாயிலியம்—பன்னும்
திருவாள னெங்கோன் சிவஞானதேவன்
திருமேனி நீங்கு தினம்;

இதனால் இவர் வாழ்ந்திருந்தது இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்குமுன் என்பது பெறப்படும்.

மூன்று குட்டிக் கதைகள்.

ஆஸ்கார் ஒயில்ட்.

[இவை இன்னும் புஸ்தகவடிவில் வெளிவராதவை; கிய்யோ என்பவரின் பெருமுயற்சியால் இவை கண்டுபிடிக்கப்பட்டு ஒரு பிரஞ்சுப் பத்திரிகையில் சமீபத்தில் வெளியாயின. பிரெஞ்சு மூலத்திலிருந்து பி. கோதண்டராமன் மொழிபெயர்த்தது.]

1. கண்ணாடிக்கண்:

ரிச்சார்டு என்னும் ஒருவன் வேட்டையாடிக்கொண்டிருக்கையில் ஒரு சாமானிய விபத்திற்காளாகி ஒரு கண்ணை இழக்கநேரிடவே, அருமையான கண்ணாடிக்கண் ஒன்றைச் செய்துகொண்டான். அது பார்வைக்கு அற்புதமாயும், உண்மையான கண்போலவும், அவனது செல்வநிலைக்குத் தக்கபடியும் அமைந்திருந்தது.

அது மிகப் பரிசுத்தமான பளிங்கினாலும் பல வர்ணங்கள் கொண்ட 'எனமல்'லினாலும் ஆக்கப்பெற்று அருமையான வேலைப்பாடுடன் விளங்கியது. கண்ணின் கருவிழி அப்பட்டமான விழியைப்போல் ஆழ்ந்து அசைவதுபோலவும், பளபளவென்றும் மழமழவென்றும் காணப்பட்டது.

ஒற்றைக்கண்ணன் கண்ணாடியில் முகத்தைப் பார்த்து பரமசந்தோஷமடைந்து தன் மீதே காதல் கொண்டான். மேலும் தனது நெருங்கிய நண்பனது அபிப்பிராயத்தையுங் கேட்க விரும்பினான்.

முகமலர்ச்சியுடன் தன் நண்பனைப் பார்த்து, "எனது கண்ணாடிக் கண்ணைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

"உண்மையாகவே மிகவும் நன்றாயிருக்கிறது. இதற்குமேல் ஒன்றும் செய்வதற்கில்லை" என்றான் அந்நண்பன், உற்சாகமாக.

"என்ன, இது உனக்கு ஆச்சரியமாயில்லையா? உண்மையான கண்ணைப்போலவே இல்லையா? என்னைப் பொறுத்தமட்டில் எது நிஜமான கண், எது பொய்யான கண் என்று என்னாலேயே கண்டுபிடிக்க முடியாமலிருப்பது அதிசயமாயிருக்கிறது; என்னை நன்றாகப்பார். இவைகளில் செயற்கைக் கண் எது என்று எவரேனும் கண்டுபிடிக்க முடியுமா? சொல்லு, பார்ப்போம்."

நண்பன் சற்றும் தயங்காமல், "இதோ இதுதான்" என்றான்.

"நீ அதை எப்படி கண்டுபிடித்தாய்?"

"அதுவே மிகவும் அழகாயிருக்கிறது."

"போ, நீ புரளி பண்ணுகிறாய். இது முன்னமேயே உனக்குத் தெரிந்திருப்பதனாலேதான் இவ்விதம் சொல்லுகிறாய். அது போகட்டும்; தெருவில் என்னுடன் வா; இதைச் சோதிப்போம்."

இருநண்பர்களும் வெளியே புறப்பட்டனர். ரிச்சார்டு, வீட்டுக்கு அருகாமையிலேயே ஒரு பிச்சைக்காரன் குளிரினால் உடம்பெல்லாம் விறைத்துப்போய் ஒரு சுவரின்மீது சாய்ந்துகொண்டிருக்கக் கண்டான். அவனை அணுகி,

"ஏனப்பா, ஒரு ரூபாய் சம்பாதிக்க விருப்பந்தானா உனக்கு?" எனக் கேட்டான்.

"ஒரு ரூபாய்! அவ்வளவு கிடைத்தால் நான் எவ்வளவோ சந்தோஷமடைவேனே. இரண்டு நாட்களாக நான் பட்டினி கிடக்கிறேன்; பணத்துக்கு மிகவும் முடையாயிருக்கிறது.

ரிச்சார்டு அந்த மத்தியஸ்தனின் உள்ளங்கையில் ஒரு ரூபாயை வைத்து, தன் ஒற்றைக் கண்ணைக் கொட்டையாக முழித்துக்கொண்டு அவன் முன்னே நின்றான்.

"இதோ பார், அவசரப்படாமல் நிதானமாகப் பார். நான் ஒற்றைக்கண்ணன்; எனது கண்களில் எது பொய்க்கண் என்பதை எனக்குச் சொல்லு, பார்ப்போம்."

பிச்சைக்காரன், நண்பனைப்போலவே சிறிதும் தயக்கமின்றி, "இதோ இதுதான்" எனப் பகர்ந்தான்.

"என்ன அதிசயம்! எப்படியப்பா நீ இதைக் கண்டுபிடித்தாய்?"

"ஐயனே! இது கஷ்டமல்லவே. இக்கண் ஒன்றில்தான் கொஞ்சம் கருணையைக் கண்டேன்!" எனப் பதிலுரைத்தான் அப் பிச்சைக்காரன்.

2. மறதி தரும் தீவு.

ஒருநாள் சில மாலுமிகள் பூகோள சாஸ்திரிகள் எவருக்குமே தெரியாத மனித சஞ்சாரமற்ற ஒரு தீவில் இறங்கியபோது, அங்கு பளபளப்பான சரீரமும், ஒளிவீசும் கண்களுமுடைய கிழவனர் ஒருவர் புன்னகை மலர்ந்த முகத்துடன் தங்களை வரவேற்கக் கண்டனர்.

அம்மனிதரது நீண்ட தலைமயிர் மேற்போர்வையைப்போல தோள்களில் விழுந்தும், அவரது நீண்ட தாடி முழங்கால்கள் வரையில் தொங்கியும் அவரது நிர்வாண தேகத்தை மறைத்தன. அவர் வேறொரு ஆடையையும் அணிந்திருக்கவில்லை.

மாலுமிகள் அந்த அநாமதேயப் பேர்வழியைச் சூழ்ந்துகொண்டு, அவரது வரலாற்றைத் தங்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டனர்.

"நான் மறப்பதற்காகவே இங்கு வந்துள்ளேன். நான் உங்களுக்குச் சொல்லக்கூடியதெல்லாம் இவ்வளவுதான்" என புன்னகைகொண்டே சொன்னார்.

மாலுமிகள் இன்னும் நெருக்கமாகச் சூழ்ந்துகொண்டு "எதை மறப்பதற்காக?" எனக் கேட்டனர்.

அம்மனிதர் விட்டாது புன்னகை புரிந்துகொண்டே 'நான் மறந்துவிட்டேனே' என்றார்.

3. தனவந்தனது ரகசியம்.

தனவந்தன் ஒருவனுக்கு அவனது செல்வமே மிகவும் சங்கடத்தை விளைவிக்கக்கூடியதாயிருந்தது. ஒருநாள், ஸந்தேஹாஸ்பதமானவனும் திடமனம் கொண்டவனும் காணப்பட்ட ஒருவன் அவனிடம் வந்து சொன்னான்:

'ஐயா! நான் உமது ரகசியத்தை அறிவேன். நீர் எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்காவிடில், அதை உலகமறிய வெளிப்படுத்திவிடுவேன். அப்புறம் உமது கதி அதோகதிதான்!"

தனவந்தன் பெரும்பீதியடைந்து அவன் கேட்டதை அப்படியே கொடுத்துவிட்டான். நியாய அநியாயத்திற்குக் கொஞ்சமும் அஞ்சாத அப்பேர்வழி, தேவையானபோதெல்லாம் அவனிடம் வந்து மேற்கண்டவாறு பயமுறுத்திப் பணம் பறித்துச் சென்றான். இச் சோம்பேறித் தொழிலை நடத்தி ஜீவிப்பது அவனுக்கு சகஜமாய்விட்டது.

ஆனல் தனவந்தனுக்கு எவ்வளவுதான் தனமிருந்தும், மரணம் நெருங்கி வருவதை மட்டும் அவனால் தடுக்கமுடியவில்லை.

அவனுக்குப் போங்காலம் சமீபித்துவிட்டது. இன்னும் சில நிமிடங்களுக்கெல்லாம் உயிர்துறப்பது திண்ணம் எனக் கண்டபோது, வாயைப் பொத்திக்கொண்டிருப்பதற்காகப் பணம் பறித்துவந்த அச்சமர்த்தனை அழைத்துவரச்சொல்லி, பரிகாசமும் வேதனையும் கலந்த தொனியில், "இதோ நான் சாகப்போகிறேன். எனது ரகசியம் என்ன, சொல்லு பார்ப்போம்" என்று அவனைக் கேட்டான்.

*"மர்ம மலர்."

'இளைய வாதூலன்.'

உலகமே ஒரு 'மாயை-இருள்' என்றும், அதில் வாழ்க்கை மக்களை மீளாத்துயரத்துள் ஆழ்த்தும் ஒரு 'சுருக்குக் கயிறு' என்றும் கூறுகின்ற பெரியார் பலர் உளர். சீக்கிய மதத்தின் பேராசிரியர்களின் போதனைகள் அவ்விதமில்லை.

"மனையறத்தைத் துறக்க நீ போதிக்கப்படவில்லை; வனங்களுக்குச் செல்லவும் நீ அனுமதிக்கப்படவுமில்லை; செய்யவேண்டிய கடமைகள் உனக்குப் பல உள. உன் கடனாற்றும் வாழ்வின்—மனையறத்தின்—நெறியினின்றும் நீ தப்பமுடியாது."

உலகமே கடவுளின் கைத்திறனை விளக்குமோர் சித்திரம்; அழகிய பூமி; மக்கட் சமூகங்களாய கவின்பெறு பூங்காவின் புகழைப் பரிணமிக்கச் செய்யவும் அன்பின் பணியாளராகவும் இருக்கவே நாம் தோற்றமெடுத்தோம். வாழ்வாகிற இப்பூந்தோட்டத்தில் 'மலர்' ஒன்றுளது. ஒருவர் கட்புலனுக்கும் செவ்விதாய்த் தோன்றா மலர்—'மர்ம மலர்.'

அடிக்கடி அதை நாம் காண்கிறதில்லை. வேதங்களில் அதை *'பாரிஜாதம்' என்று அழைப்பர். நாம் அநேகப் புறப்பொருள்களைத் தேடி விரைகின்றோம். இன்பம்—செல்வப்பெருக்கு—அதிகாரம்! ஆனால் அந்த மர்மமலரை நாம் விரைந்து தேடுவதற்கு முயற்சி கூட செய்யவில்லை. அதனால் அன்றோ உலகம் அமைதியை இழந்துளது.

இந்த மர்ம மலர்—பாரிஜாதம்—கடவுள் பால் அன்பு செலுத்தலேயாகும். அதை எவன் பெறுகிறானோ அவன் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

உலகில் அம்மலரினும் செல்வமிகுதியையும் கண்ணிய நடத்தையையும், மிக்கவிலையையும், அழகையுமுடைய பொருள் வேறு ஒன்றுமேயில்லை.

உண்மைத் துறவியின் முகத்தை ஊடுருவி நோக்கு. வசீகரம் எத்துணைத்து! கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட அவ்வன்பினின்றும் அவ்வசீகரம்—எழில்—தேஜஸ்—அவதரித்ததாகும். கடவுளைப் பெற்ற—அன்பைப் பெற்ற—அவரது வாழ்க்கை மலர் எவ்வளவு மணமுள்ளதாயிருக்கின்றது! இவ்வன்பிலேதான் ஆத்மீகக் கலையின் பரிபக்குவ நிலையெய்தும் இரகசியம் பொருந்தியுள்ளது. கடவுளை நேசிப்பதென்பது, 'எளிய மக்கட்குப் பணி புரிவதேயாகும். பணி—சேவை—ஊழியம், இவை யாவும் கடவுளின்—அன்பின்—சோதனைகளே! எளியவன் ஒருவனைக் காணின், நீ அன்படக்கத்துடன் அவனை வணங்கு. ஏனெனில், அவன் ஆண்டவனின் பிரதிபிம்பங்களுள் ஒருவன். துயரத்தில் மூழ்கியிருப்பினும் அவன் ஆண்டவனின் கைத்திறனில் விளங்குவோன். ஆத்மீகவுணர்ச்சியிலே உருகியிளைத்து அவ்வேழைகள் பால் உடைந்த இதயம் உடையோர்களுக்கு மட்டுமே ஆண்டவனின் அரிய மலரடி—பரமபதம்—பேரின்பநிலை—வானராஜ்யம்—உரியதாகும்.

* * * *

ஒருசமயம் வானராஜ்யத்தின்—சுவர்க்கத்தின்—வாயிலில் ஒரு மனிதன் வந்துநின்றான். ஆசாரவாயிலைக் காக்கும் தேவனிடம் அவன், "கதவுகளைத் திறந்து எனக்கு வழிவிடு. நான் ஆண்டவனின் மலரடியைக் காணவேண்டும்" என்றான்.

"என்ன? கதவுகளைத் திறப்பதா? ஆண்டவனின் பாதகமலங்களுக்கு இயைந்த எப்பரிசை உன்னுடன் நீ கொண்டுவந்திருக்கிறாய்?" என்று அத்தேவன் உசாவினான்.

அதற்கு அம்மனிதன் "தேவ! நான் பூமியிலிருந்து இங்கு வரும் வழியினிடையில் ஒரு நகரத்தைக் கடந்து வந்தேன். அதில் செல்வமிக்க குடும்பத்தாருள் இருவர் தம்முள் ஒருவரோடொருவர் சச்சரவு நிகழ்த்திய வண்ணமிருந்தனர். அவ்விருவருள் எதிரியைத் தாக்க முற்படும் சினத்தினனாவொரு பலாட்டியனையும் பார்த்தேன். பின்பு பளபளவெனப் பிரகாசிக்கின்ற பட்டாக்கத்திகள் ஒன்றோடொன்று மோதின. முடிவில் அந்த

* பாரிஜாதம்—பரம்பொருளைச் சூழ்ந்து தோன்றும் தோற்றம்; அன்பு.

பலாட்டியன் படுகாயமடைந்து வீழ்ந்தான். அவ்வலியவனின் புண்ணுற்ற உடலினின்றும் பொசிந்து கசிந்தக் குருதித் துளிகளிற் சில வற்றை ஆண்டவனுக்காகும் ஒரு கொடைப் பொருளாக என்னுடன் கொணர்ந்தேன்'' என்று பதில் தந்தனன்.

"ஆ! உன்னுடைய காணிக்கை உயரிய தேயாகும். ஆனால் அரசர்க்கரசராகிய ஆண்டவர் இன்னும் மேலான மதிப்புடைய காணிக்கையையே உன்னிடம் விரும்புகின்றார்'' எனக் கூறி வாளா விருந்தான் அத்தேவன். கதவுகள் திறக்கப்படவில்லை.

திரும்பியும் அப்புருஷன் தரணியை அடைந்தான். கொஞ்ச காலத்திற்கெல்லாம் அவன் மறுபடியும் ஆண்டவனின் ஆசார வாயிலை யடைந்தான்.

"இப்பொழுது உன்னுடன் எப்பொருளைப் பரிசாகக் கொண்டுவந்திருக்கிறாய்? என்று காவல் புரிந்த தேவன் கேட்டனன்.

'இந்தத் தடவையிலும் நான் ஒரு நகரத்தைக் கடந்து வந்தேன். களிவெறி கொண்ட அந்நகரத்தின் ஒரு மூலையிலே விளங்குஞ் சிறு குடிசையொன்றைக் கண்டேன். அதனுள் உடைந்த ஹ்ருதயத்துடன் அமர்ந்து மனம் நெக்குருகி வாய்விட்டரற்றும் வாலிபன் ஒருவனைப்பார்த்தேன். அப்பொழுது அவன், ''பரம பதத்திலுள்ள எந்தையே! மூவா முதல்வ! எளியோர்க்குப் பணிசெய்யப் போதிய பலத்தை—சக்தியை எனக்குத் தாங்கள் அருளலாகாதா?'' என்று வேண்டுகையில் அவனது அழகிய' கண்களினின்றும் மளமளவென்று பெருக்கெடுத்தோடின முத்துக்கள் போன்ற அன்புகசிந்த நீர்த்துளிகளிற் சிலவற்றை ஆண்டவர்க்காகும் அருங்கொடைப் பொருளாய்க் கொண்டுவந்திருக்கிறேன் நான்'' எனக் கண்ணீர் மல்கக் கூறினான் அம்மனிதன்.

மகிழ்ச்சி பொங்கி மலர்ந்த முகத்துடன் காவலில் நின்ற அத்தேவன், "நல்லது! கடவுளின் நற்றொண்டரே! நல்ல காணிக்கையே இப்பொருள்! எம் இறைவனின் திருக்கோயிலின் திருக்கதவுகள் யாவும் தங்களுக்குத் திறந்துவிடப்பட்டிருக்கின்றன. கடவுளின்—அன்புருவின்—முன்னிலைக்குச் செல்லுங்கள்'' என வணங்கிக் கூறினன்.

* * * *

எளியோருக்குத் தொண்டுபுரியும் வலுவைப் பெற ஆண்டவனை அன்புடன் நெக்குருகி வேண்டுகின்ற வாலிபர்களையே இந்தியா இன்று விரும்புகின்றது. ஏனெனில், எளியவர்களின் தேவை—விருப்பம்—இன்று பரிதாபகர நிலையில் உள்ளது. எங்கிருந்தும், யாரிடத்திருந்தும், உதவுவோர் அவர்களுக்குத் தேவை. 'தொண்டு—தியாகம்' என்கிற மர்ம மலர்களால் கடவுளை அர்ச்சிக்கின்றவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

"வேண்டுவ துலகின் வேலைசெயப் பலர்
ஆண்டவ னடியே யவர்க்குச் சம்பளம்
பட்டம் வயதிவை பார்ப்பதோ வில்லை;
அவமரா திருத்தக் கார ராவர்;
எனினும், பிறரைத் திருத்தற் சென்னோர்
தம்மைத் திருத்தித் தாம்பிறர்க் குறுவழி
காட்டிக் கடனக் காசினியோ ரிடத்
தன்பூண் டடம்புல னடக்கி
அருளுரு வாகுத லாமவர் தொழிலே''

எனுந் தண்டமிழ்த் தொண்டனின் செவ்விய பாட்டும் எத்துணைப் பொருத்தமுடைத்து!

* ஸ்ரீ 'ஸாது வாஸ்வானி'யாரின் 'ஒலிகள்' என்ற மலரில் ஓரிதழ்.

த கு தி.

வெ. திருப்பதி நாயுடு, இடிகரை.

தகுதி என்னும் சொல்லுக்கு, மதிப்பு, யோக்கியதை, பொருத்தம், அருகதை முதலிய பல பொருள்கள் உண்டு. இந்த வார்த்தைகளைச் சாதாரணமாக அசேதனங்களுக்கும் சேதனங்களுக்கும் எல்லாவற்றிற்கும் உபயோகிக்கிறோம். உதாரணமாக வண்டிக்குத் தகுந்த மாடு, குதிரைக்குப் பொருத்தமான ஜேணம், அவரவர் மதிப்புக்குத்தக்கவீடு, அந்த

வேலைக்கு அருகதையான மனிதன், இங்ஙனம் அநேக வுவமைகள் உண்டு; எனினும் இப்போது இந்த யோக்கியதை என்ற விஷயத்தை எடுத்துக் கொண்டதற்குக் காரணம், நம் நாட்டில் தற்சமயம் நடந்த ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் வாக்குரிமைக்காக வந்த நபர்களைப் பற்றி சிந்திக்கலானதுவே. ஆனால், ஸ்தல ஸ்தாபன பிரதிநிதிகளைப் பற்றி குறைகள் குணங்கள்கூற எழுந்த வியாசம் அன்று. ஆனால், நம் தேசத்தைப் பண்டைக் காலத்தில் ஆண்ட அரசர்கள், நாட்டில் தங்களுக்கு சர்வாதிகாரம் இருப்பினும், விசேஷ மாறுதல் ஏதாவது செய்ய விரும்பினால், ஜனப்பிரதிகளைக் கூப்பிட்டு யோசனைகேட்டு அவர்கள் சொல்லுகிறபடி நடப்பது வழக்கம் என்பதை பல புராணங்களிலும் சரித்திரங்களிலும் படித்திருக்கிறோம். ஆனால், அப்படி அரசர்களால் அழைக்கப்படுவோர் என்னென்ன யோக்கியதை வாய்ந்தவர்கள் என்பதை கம்ப நாட்டாழ்வார் அயோத்தியா காண்டம் மந்திரப் படலத்தில் சிலகவிகளால் சொல்லுகிறார். அவை வருமாறு:

குலமுதற்றொன்மையும் கலையின் குப்பையும்
பல முதற் கேள்வியும் பயனுமெய்தினர்
நலமுதனலியினும் நடுவு நோக்குவோர்
சலமுதலறுத்தருந் தருமந்தாங்கினர்
உற்றது கொண்டு மேல் வந்து பொருளுணருங்கோளார்
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்றலாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவாரிய நூலும்
கற்றவர் மானநோக்கிற் கவரிமாவனைய நீரார்
காலமுமிடனுமேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுறநோக்கித் தெய்வ நுனித்தறந்துணித்த மேலோர்
சீலமும் புகழ்க்குவேண்டுஞ் செய்கையுந்தெரிந்துகொண்டு
பால்வரு முறுதியாவுந் தலைவற்குப்பயக்கும் நீரார்
தம்முயிர்க் குறுதியெண்ணார்
தலைமகன் வெருண்டபோதும்
வெம்மையைத் தாங்கும் நீதி
விடாது நின்றுரைக்கும் வீரர்
செம்மையிற்றிறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியுங்காலம்
மும்மையு முணரவல்லா
ரொருமையே மொழியுநீரார்.

தசரதன் சாமான்ய அரசன் அல்ல, சக்ரவர்த்தி இந்திரன்; முதலான தேவர்களுக்கு எதிரிகளையும் ஜெயித்தவன். இருந்தாலும், தன் குமாரனுக்கு பட்டாபிஷேகம் செய்வதைக் குறித்து யோசிக்கக் கூப்பிட்ட சபையில் இருந்தவர்கள் பழமையான குலத்தில் பிறந்தவர்களும் சாஸ்திர ஆராய்ச்சியில் தேர்ந்தவர்களும் பல பெரியார்களிடத்தில் கேட்டு அநுபவம் பெற்றவர்களுமே. தங்கள் செல்வம் இழந்த காலத்தும் நடு நிலைமை மாறாதவர்களும் எந்த நிலைமையிலும் கோபமே வராதவர்களும் தர்ம மார்க்கத்திலேயே நடக்கிறவர்களும் ஆவர். மேலும் கடந்துபோன விஷயங்களை சிந்தியாதவர்களும் மேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு தக்கபடி யோசனை கூறுபவர்களும் சஞ்சித பிராரப்த வினையினால் வந்த கருமமாயினும் அதை மாற்றும் சக்தி பெற்றவர்களும், தாமஸ ராஜஸ ரத்தக் கலப்பில்லாமல் நல்ல ஸாத்வீக ரத்தத்தில் பிறந்தவர்களும், விசேஷ நூல்கள் கற்றவர்களும் நாணத்தில் கவரிமான் போன்றவர்களும் காலதேச வர்த்தமானங்களை ஒத்தும் சாஸ்திர நீதிக்கு பிசகாமலும் தெய்வ ஸத்யத்துக்குக் கட்டப்பட்டும் அரசனுக்கு மேன்மையும் புகழும் வீரத்தன்மையும் உண்டாக்கக்கூடியவர்களும் ஆவர். தாங்கள் சொல்லுவதினால் அரசன் தங்கள்பேரில் கோபப்படுவானானால் தங்கள் உயிரையும் இலட்சியம் பண்ணாமல் நன்மையையும் விடாது சொல்லும் திறமையுடையோர்; மன நிலையிலே எந்த சமயத்திலும் தவறாதவர்கள்; திரிகாலமும் தெரிந்தவர்கள்; ஒரே தீர்மானமுடையவர்கள்; அரசனுக்கு ஒரு வியாதி வருமானால் அரசவைத்தியன் எப்படி சீக்கிரம் குணப்படுவதற்கு வேண்டிய நல்ல மருந்துகளைத் தேடிக்கொடுப்பானோ, அத்தன்மை வாய்ந்தவர்கள். முற்காலத்திய ஜனப்பிரதிநிதிகளுக்கும் தற்காலத்திய ஜனப்பிரதிநிதிகளுக்கும் உள்ள நெடுவாசியை வாசகர்களே கண்டு தெளிவார்களாக.

மஹராசாவின் வெள்ள நாய்க்குட்டி.

(மா. கிருஷ்ணன்.)

புலிவீரப்பட்டி ஜமீன்தாரின் தோட்டம் நீண்டு, போதுமான அகலமற்றிருந்தாலும் செடிகள் அடர்ந்துள்ளது: அன்று ஜமீன்தாருடன் தோட்டத்தைச் சுற்றி வருகையில் இதென்ன கத்தரிப் பாத்திபோல் நெடுக செடிகள் செறிந்திருக்கின்றனவே என்று நான் எண்ணினேன். போகுமிடமெல்லாம் 'ஜிம்மி' என்ற கருப்புச் சடைநாயும் எங்கள் பின் வந்து கொண்டிருந்தது. ஜமீன்தாருக்கு நாய்களிடத்தில் அபார வாஞ்சை. தன் தகப்பனார் காலத்திலிருந்து கிழக்கு மூலையிலிருந்த குதிரை லாயங்களை அழித்து சுமார் இருபது நாய்களுக்கு இடம் போதுமானபடி நாய்க்கொட்டில்களாகக் கட்டியிருந்தார். தன்னிடம் ஏற்கனவே மூன்று வேட்டை நாய்கள் இருப்பதாகவும், "தினுஸா—தினுஸாக" நாய்கள் வாங்கி கொட்டில்களை நிரப்பப்போவதாகவும் அவர் என்னிடம் சொன்னார். புதுக்கொட்டில்களையும் வேட்டைநாய்களையும் பார்ப்பதற்காகவே தோட்டத்தைக் கடந்து நாங்கள் காலைச்சூரியனை நோக்கி நடந்துகொண்டிருந்தோம்.

"இந்த சிம்மிய வாங்கி இப்பம் ரெண்டு வாரமாகலே, அதுக்குள்ள என்ன விஸ்வாஸமா நம்ம பின்னாடையே வருது பாத்தீகளா! சாதி ஒஸந்த சாதியில்லே? அதுதான்......" எதிரிலொரு வேலையாள் கைகூப்பி நிற்பதைக் கண்டு அவர் 'ஜிம்மி'யின் பிரஸ்தாபத்தை நிறுத்தி "என்னடா?" என்றார்.

சேவகன் கூப்பிய கைகளை இன்னும் கூப்பினான். "மாமா வந்திருக்காக—மகராசாவக் கண்டு போகணுமாம்" என்று தாழ்ந்த குரலில் அவன் பதில் மொழிந்தான்.

"இப்பம் ரொம்ப வேலையாயிருக்கேன், நேரமில்லேன்ன தெரியலெ? பின்ன ஏன் குண்டாங்களுதையாட்டுமா வளியில வந்து நிக்கறெ, களுதை?" என்று ஜமீன்தார் சீறிவிழவே அவன் இருக்குமிடம் தெரியாதபடி மறைந்துவிட்டான்.

இதென்ன ஆச்சரியம் என்று நான் நினைத்தேன். ஏனென்றால் இந்த மாமாவை எனக்கு நன்றாகத் தெரியும். இவர் ஜமீன்தாருக்கு மிகவும் வேண்டியவர். எதோ ஓர் எட்டின முறையில் இவர் ஜமீந்தாருக்கு உறவு—ஆகையினால்தான் இவருக்கு 'மாமா' என்ற பட்டம். ஆனால், நெருங்கிய பந்துக்களிடம்கூட

இவர்களுக்குள் இருந்த தோழமையைக் காண முடியாது. மாமா பதினெட்டு மைல்களுக்கு அப்பாலிருந்த ஒரு கிராமத்தில் குடியிருந்தார். மாதத்திற்கொரு முறை ஜமீன்தாரைப் பார்ப்பதற்கு வருவார். அன்று புலிவீரப்பட்டியில் இருந்துவிட்டு மறுநாள் சன்மானங்களுடன் ஊருக்குப் போவார். இவர் ஜமீன்தாருருக்கு மூத்தவர்: அறுபது அறுபத்தைந்து வயதானவராயிருந்தும் நல்ல கம்பீரமான தோற்றமுடையவர். முறுக்கிய வெண்மீசை, பருத்துத் திரண்ட புயங்களுக்கேற்ற பொற்காப்புகள், அன்றுதான் தோய்த்து வெளுத்த தலைப்பாகை—இவைகளில்லாமல் இவரைக் காணமுடியாது. எழுதப் படிக்கத் தெரியாதிருந்தும் உலக அனுபவத்தில் தேர்ச்சிபெற்றவர்; வெகு சாதுரியமாகப் பேச வல்லவர். இவர் ஜமீன்தாரிடத்தில் மிகப் பணிவுடனும் ஆதரவுடனும் நடந்துகொள்வார். அவர் சந்நிதியில் உட்காரமாட்டார், உரக்கப் பேசமாட்டார், வாய்விட்டுச் சிரிக்கக்கூட மாட்டார். ஜமீன்தாரும் இவரை மதிப்புடன் பாராட்டுவார். மறைவில் இவர் ஜமீன்தாரைத் தூற்றியதின் பயனாக சில நாட்களாக இவர்களுக்குள் மனஸ்தாபம் என்றும், இனி புலிவீரப்பட்டிக்குள் மாமா காலெடுத்து வைக்கக்கூடாதென்று ஜமீன்தார் கட்டளையிட்டு விட்டாரென்றும் ஊரில் யாரோ சொன்னதைக் கேட்டிருந்தும் அதுமட்டும் நான் நம்பவில்லை. இத்தனை நாட்களாகத் தங்கள் நட்பிற்குப் புறமில்லாதபடி நடந்துகொண்ட மாமா திடீரென்று இதற்கு இடம் கொடுப்பாரென்று நான் எண்ணவில்லை. ஆனல் அப்பொழுது, ஜமீன்தாரின் வெறுப்பையும் அவர் உதடுகள் துடித்ததையும் கண்டபொழுது, நான் கேள்விப்பட்டது உண்மைதான் என்று அறிந்தேன்.

'ஜிம்மி'யைப்பற்றித் தான் சொல்லவந்ததை ஜமீன்தார் சொல்லாதிருந்துவிடவே, நாங்கள் பேசாது வேட்டை நாய்களை நோக்கி நடந்தோம். கொட்டில்களினருகில் செடி மறைவாக யாரோ இருப்பதுபோல் தோன்றிற்று—கிட்டியபின் தான் இன்னாரென்று புலப்பட்டது. காப்புங் கையுமாகக் கும்பிட்டுக்கொண்டு மாமா எங்கள் வழியில் நின்றார்.

"மகராசாவக் கும்பிடறேன்" என்று அவர் சொன்னதைக் கேட்காதவர்போல் ஜமீன்தார் மேல் நடந்தார். "மகராசா புதுசா வாங்கின நாய் இதுதானே?" என்று 'ஜிம்மி'யைச் சுட்டிக்காட்டி அவர் கேட்டதும் ஜமீன்தார் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. 'ஜிம்மி'யுடன் மாமா எங்களை பின்தொடர்ந்ததையும் ஜமீன்தார் கவனிக்காதவர்போல் இருந்துவிட்டார்.

கொட்டில்களின் வெளியில் தங்கள் மெலிந்த உடல்களை எடுத்துக்காட்டும்படி கனத்துள்ள சங்கிலிகளால் மூன்று கோம்பை நாய்கள் கட்டியிருந்தன.

"அதோ நடுவில குத்திக்கிட்டிருக்கிறதே, அதுதான் ரொம்ப சாதி—மூந்நாநாள் ஒரு ஆட்டுக்குட்டியக் கிளிச்சுப் போட்டிடுச்சு" என்று ஜமீன்தார் என்னிடம் சொன்னர். சிறிது நேரம் நாய்களை உற்றுப்பார்த்துக் கொண்டு நாங்கள் மௌனமாய் நின்றோம். முடிவில் மாமா மெல்லக் கமறிவிட்டு என்னை நோக்கித் திருப்பினர்.

"நம்ம மகராசாவுக்கு நாயின்னு என்ன கிறுக்குன்ன உங்களுக்குத்தான் தெரியுமே—இந்தத் தோட்டம் எனனென்ன நாயெல்லாமோ பார்த்திருக்குது. ஆனலும் அப்பம் அரண்மனையிலிருந்த ஒரு வெள்ள நாக்குட்டிக்கு சதை நான் கேட்டதுமில்லெ பாத்ததுமில்லெ" என்று அவர் ஆரம்பித்தார்.

"அந்த நாக்குட்டி நல்ல சுத்த வெள்ள நிறம்—சும்மாப் பால்போலிருக்கும். சீம நாய் சாதி: அதென்னமோ பேர் மறந்து போச்சுது அந்த சாதிக்கு—மகாராசாவுக்கு ஒருவேளை க்யாபசமிருக்கலாம்—"

ஜமீன்தார் சுளித்த புருவங்களுடன் பூமியை நோக்கியவண்ணமாயிருந்தார். தன் கைப்பிரம்பால் ஒரு புல்முட்டைக் குத்திக் கொண்டிருந்தார். மாமா மேலும் பேசலானர்.

"அந்த நாக்குட்டி யிருந்திச்சே, அது காலெல்லாம் தூண்போலிருக்கும். காது லேசாத் தூக்கிக்கிட்டிருக்கும்—வால் கத்தி மாதிரி. அதை மகராசா ஆசப்பட்டு வாங்கி, அவுகளே பேர்வெச்சு எப்படிப் பிரியமா வளத்து வந்தாக! பாளாப்போன மறதி யெனக்கு அந்த நாக்குட்டி பேர்கூட மறந்துபோச்சுது. என்ன டைகரா? ஆமாம், டைகர்னதான் பேர்"

ஜமீன்தார் திடீரென்று தலைநிமிர்ந்தார். "சாக்கி" என்று கர்ஜித்துவிட்டு மறுபடியும் கீழிருக்கும் புல்லாந்தரையிலாழ்ந்துவிட்டார்.

"ஆமாமாம்—சாக்கி—அதுக்கு சாக்கின பேரில்ல! சாக்கிதான். இந்த சாக்கிக்கு என்ன ரோசந் தெரியுமா? என்ன, நானுமரண் மனையில எத்தனை நாயோ பாத்திருக்கேன், பெரிய பெரிய வேட்ட நாயெல்லாம் மகாராசா கிட்ட யிருந்தில்லெ!—முயல்வேட்டை, மான் வேட்டை, பன்னி வேட்டைக்குக்கூடச் சரி யான நாயில்லெ? ஆனா எந்த நாயானுலுங் காக்காயப் பிடிச்சு நீங்க பாத்திருக்கீகளா? இருக்காது. காக்காயெ குண்டு வெச்சுச் சுட் டாக்கூட விளாது—அம்மாஞ் சுருசுருப்பு காக்காய்க்கு. ஆனா இந்த சாக்கி ஒருநாள் ஒரு காக்காயப் பிடிச்சுடிச்சு. மகாராசாவே இதுக்கு சாக்கி. சாக்கி மகாராசா காலுங்கிட் டப் படுத்துக்கிட்டு தூங்கருப்பல இருந்திச்சு —காக்கா அதோ அந்த மருதாணிச் செடி யிருக்குதே, அம்மாந்தூரத்திலே மேஞ்சுக்கிட் டிருந்திச்சு. திடீரின்னு ஒரே தவ்வில தவ்வி சாக்கி அந்தக் காக்காய லபக்கின்ன கவ்விப் பிடிச்சுடிச்சு—அவ்வளவுதான்"

இந்த அதிசயத்தை எடுத்துரைத்துக் கொண்டே நாய் பாய்ந்த விதத்தை விளக்கும் பொருட்டு மருதாணிச் செடியை நோக்கிக் குதிப்பதுபோல் மாமா பாவித்தார். 'ஜாக்கி' காகத்தைப்பிடித்த வரலாறு முடிவதற்கு முன் பே ஜமீன்தாரின் புருவச்சுளிப்பு மறைந்துவிட் டது. இந்த சம்பவத்தை நினைத்தோ, அல் லது மாமா தாவுவதுபோல் நடித்ததைக் கண் டோ அவர் கொல்லென்று சிரித்துவிட்டார்.

"ஹோ ஹோ ஹோ! அந்த—ஹீம்— குடுகுடுப்பாண்டிய வெரட்டிச்சே—ஹோ. ஹோ—அது நெனவிருக்குதா?" என்று 'ஜாக் கி'யின் செயல்களை மேலும் விளக்கிக் கூறு மாறு ஜமீன்தார் மாமாவைத் தூண்டினார்.

"அதக்கூடவா மறந்துட்டேன்—நல்லா நெனவிருக்குது. மகாராசா தோட்டத்தில சாக்கியோட இப்படி லாத்திக்கொண்டிருந் தாக. அப்பம் ஒரு குடுகுடுப்பாண்டி—"

ஆனால் இந்தக் கதையைக் கேட்காமலே நான் வந்துவிட்டேன். அதற்குமேல் நான் அங்கு இருப்பது சரியல்ல எனக்குத் தோன் றிற்று. மனஸ்தாபப்பட்டு, பிறகு 'சாக்கி' யின் திருவிளையாடல்களை நினைத்து உற்சாக மடைந்து கூடும் இவர்களுடன் நானும் இருப் பது—ஏதோ சாக்கு சொல்லி அவசர விடை பெற்றுக்கொண்டு நான் வந்துவிட்டேன்.

சங்கங்கள்.

(கட்டிபூசியடிகள் பாடியது.)

கலைகளை வளர்க்கக் கடவுட் பேண
மதத்தினைப் பரப்ப மாண்பொருள் பேச
அரசியற் கொள்கையை அலசி அறிய
சீர்திருத் தஞ்செயச் சொற்போர் புரிய
எழுந்த சபைகளை எண்ணிப் பார்மின்.
எத்தனை ஆயிரம் எழுந்தேன் செய்ய?
உயர்வுத் தாழ்வு: உறுமல்: ஒச்சம்
காரிய தரிசியைக் காணுஞ் சபையினர்
சீச்சீ யெனவே சிவப்பர் வெறுப்பர்
தலைவரைக் காணின் தாங்காத் துயர்கொடு
மூலை சென்று முணுமுணு வென்பார்
முன்னே வந்து மொழியார் எதனையும்.
பொக்கசத் தானைப் பொரு ளெலாஞ்
சுவாகா செய்தான் சுளையப் பேர்வழி,
சும்மா விடுதல் அம்மா தீதென்
றறைந்து நிற்பர் ஆரவா ரத்துடன்.
கூட்டம், அடிதடி, கூச்சல், குதிப்பு,
பாட்டுப் பாடினல், 'பாடல் மோசம்'.
விரிவுரை செய்தால்; 'வெட்டிப் பிதற்றல்'.
எழுதிப் படித்தால், எள்ளி நகைப்பர்.
அறவுரை செய்தால், 'அய்யோ போதுமே'
இலக்கியஞ் சொன்னல், 'இதுதான் எதற்கு'?
பஜனை யென்றால், 'பாவிகள் கூட்டம்'.
பாரதம் பேசின், 'பயனில் பழங்கதை'.
தமிழிற் பேசின், 'தவறு; ஆங்கிலம்!'
ஆங்கிலம் பேசின், 'அயல்மொழி; தமிழ்!'
சங்கதம் பேசின், 'சனியன் சங்கதம்'
என்றே பேசுவர் எண்ணில் உறுப்பினர்.
இவரெலா மிப்படி இயம்புதல் ஏனெனின்
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு கொள்கை,
காக்கை வேம்பின் கனியினைக் கரைந்து
உண்பது போல. உண்மை ஓரார்.
சுண்டல் வடையும், சுடச்சுடச் சுகியனும்,
சும்மா கொடுத்தால் அம்மா டியென
வயிறு புடைக்க வாயும் மணக்க
வாங்கித் தின்று வாங்கித் தின்று
வம்பினைத் தொடுப்பர் வாயறி யாமல்.
'சுகியன் கருகல், சுண்டற் குப்பிலை,
வடையில் வீச்சம், வகையா யில்லை.
வரவரக் கெட்டு வழியறி யாமல்
சங்கம் நடக்கச் சம்மத மில்லை
ஆண்டுக் கூட்டம் அருகில் வந்தது
பார்ப்பேன் ஒருகை பாழும் பசங்களை'
என்றுங் கூறுவர் எண்ணமி லாமல்.
நல்ல செயலை நாலுபேர் உவப்பக்
கடமை செய்வதில் கண்ணுங் கருத்தும்
உடையோர் செய்தால் உவந்து ஊக்கி
நல்லுரை பேசலே நல்லோர் கடமை.
தாமெனுந் தருக்குடைத் தறுதலைச் சிலர்தாம்
நல்லியக் கங்களை நாசஞ் செய்து
திருநீ றென்றும் திருமண் ணென்றும்
வடகலை யென்றும் தென்கலை யென்றும்
வடமொழி யென்றும் தென்மொழி யென்றும்
பேசிப் பேசிப் பிளவினை யாக்கி
ஒன்றுதல் விழையார் பொன்றுதல் விழைவார்;
வேற்றுமை கொண்டு ஒற்றுமைப் பட்ட
நாட்டின் இயல்பை நாடியும் பாரார்;
நன்மை கருதார், புன்மையே கருதித்
தாந்தோன் றிகளாய்த் தன்னயம் பேணித்
தரைமிசைத் திரிவர் புரைபல கொண்டு.
அவனென் செய்வான்? அரசென் செய்யும்?
ஆரென் செய்வார் அத்தகை யோரை?
இச்செயல் இவ்வுரை யினிநமக் காகா.
நற்செயல் களையே நானிலம் விரும்பும்
என்னும் கருத்து என்று எழுமோ
அன்று வந்தன அளப்பில் நன்மை
நூல்பல கற்றும் நுட்ப மறிந்தும்
ஆயிரம் வகையால் அறிவினைப் பெற்றும்
தாமெனுந் தருக்குளோர் தாங்கா நோய்களாய்
ஆக்கந் தாரார் அழிவினைத் தந்து
நாட்டின் கட்டினை நனியும் குலைப்பரே.

சந்திரகுப்தன்.

K. வரதாச்சாரி, B.A., B.L.,

(32ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 4. காட்சி 1.

சாணக்யரின் குடிசை.

சாணக்யர் :—(*தனி*) வஞ்சம் தீர்த்துக் கொண்டுவிட்டேன்; பிரதிஹிம்ஸை பூர்த்தியாயிற்று; இது ஓர் க்ஷணிகவெறி. இனி மறுபடியும் அந்த நிர்வேதம் தலையெடுத்துவிடும்; ஹ்ருதயம் ஹா ஹாவென்று பறக்கத் தலைப்பட்டுவிடும்; என் ஹ்ருதயத்தின் அகாத ஸ்னேஹ ராசியை யாரிடம் வைப்பேன்; ஒருவரும் அகப்படவில்லையே; ஆக்ரஹத்துடன் அடித்துக்கொள்ளுகிறது; அன்புடன் ஆலிங்கனம் செய்துகொள்ள ஓடுகிறது, உஷ்ணநிச்வாஸத்துடன். ஐயோ! வஞ்சம் என்னும் ராக்ஷஸியே! என்னை என்ன என்ன ஆட்டம் ஆட்டிவைப்பாய்; கடைசியில் எல்லாம் அரண்யரோதனமே. (*தலையைப் பிடித்துக்கொள்ளுகிறார்; உலவுகிறார்; ஒரு வேவுகிறான் வருகிறான்*)

சாணக் :—என்ன ஸமாசாரம்?

வேவுகாரன் :—காத்யாயனர் சத்ருவுடன் சேர்ந்துகொண்டது உண்மைதான். தன்னால் இயன்ற அளவு உதவிபுரிவதாக ஸெல்யூகஸ்ஸிற்கு வாக்குதத்தம் செய்துகொடுத்துவிட்டார். நந்தன் கக்ஷியில் அபிமானமுள்ள நம் பிரஜைகளை ரஹஸ்யமாக சந்திரகுப்தனுக்கு விரோதமாகத் தூண்டிவிட ஏற்பாடுகளும் செய்துவிட்டார். ஸெல்யூகஸ்ஸின் ஸேனை நமது தலைநகரை அடைந்தவுடன், நடுயுத்த வேளையில் அவர்கள் ஸெல்யூகஸ்ஸுடன் போய்ச் சேர்ந்துகொள்ளவேண்டியது என்று ஸங்கேதம்.

சாணக் :—அது எனக்கு முன்பே தெரியும். வேறு என்ன?

வேவு :—இன்றுகாலை கிரேக்கர்கள் ஸெல்யூகஸ்ஸின் தலைமையில் ஸிந்துநதியைத் தாண்டிவிட்டார்கள்.

சாணக் :—ஸேனை எவ்வளவு?

வேவு :—நான்கு லக்ஷம்.

சாணக் :—ஸரி, போ. (*வேவுகாரன் போகிறான்.*)

சாணக் :—ஸெல்யூகஸ்! நீயும் அலெக்ஸாந்தர் என்று நினைத்துக்கொண்டுவிட்டாய்? கிரேக்கர்கள் உயர்ந்த நாகரீகம் வாய்ந்தவர்கள் என்றும், ஆர்யர்கள் கீழ்ப்பட்டவர்கள் என்றும், ஆகையால் கிரேக்கர்வசம் இந்த பாரத வர்ஷம் வந்து சேரவேண்டும் என்றும் உன் ஸித்தாந்தம். அது நடக்காது; யுத்தம் செய்து ஆர்யாவர்த்தத்தை ஜயிக்கமுடியாது. யுத்தத்தில் ஜயித்தாலும், கடைசியில் உன் நாகரீகம் அதற்குத் தோற்று அடிமைப்படும். அத்யாத்ம வித்யையின் பெருமை அது! உபநிஷத்தின் உள்ளுறை அது! சாந்தி! சாந்தி!! சாந்தி!!! இந்தக் கடலை உன் சிற்றுறு கலக்கிவிடும்? (Aristotle,) அரிஸ்டாடலும், (Aphlaton,) அப்ளாடனும், (Aeschylus,) எஸ்கிலஸும், (Euripides,) யூரிபிடீஸும், (Homer,) ஹோமரும், (Demosthenes,) டிமாஸ்தனீஸும், இவர்கள் ச்லாக்யமானவர்கள் தான்; யுத்தவெறியை ஏற்றுவார்கள்; தேசியத்தை உணர்த்துவார்கள். ஆனால் மனிதன் தேடுவது, சாந்தி, சாந்திதானே! அது கிடைக்காமல் தானே நான் வருந்துகிறேன். (*மற்றொரு சாரன் வருகிறான்.*)

சாணக் :—என்ன ஸமாசாரம்?

சரன் :—மஹாராஜாவின் சயனக்ருஹத்தில் சுரங்கம் வழியாக உள்சென்று 25 ஆள்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். மஹாராஜர் சயனித்துக்கொண்டவுடன்..................

சாணக் :—எனக்கு அது தெரியும். அவர்கள் தலைவன் யார்?

சரன் :—வாசாலன்.

சாணக் :—ஸரி, போ. (*சரன் போகிறான்.*) மூர்க்கன்! வீரபலரே! (*வீரபலர் வருகிறார்.*)

சாணக்:—நமது அரசனைக் கொல்ல எண்ணி 25 பேர்கள் சயனக்ருஹத்தில் காத்துக் கொண்டிருக்கின்றனராம். அவர்களை இப்பொழுதே வளைத்துக்கொண்டுவிடும்; சீக்கிரம்.

வீரபலர் :—உத்திரவு. (போகிறார்.)

சாணக் :—இம்மாதிரி ஒற்றர்களை ஏற்படுத்திக்கொண்டு நாட்டில் நடக்க இருக்கும் ஸதியாலோசனைகளை முன்கூட்டியே நான் தெரிந்து கொண்டுவிடுவதால் எவ்வளவு கார்யங்கள் ஸௌகர்யமாய் எண்ணியபடியே முடிந்துவிடுகின்றன! ஆனால், ஸ்ரீராமசந்திரன் இப்படியா செய்தார்? அவரும் தான் சாரர்களை வைத்துக் கொண்டிருந்தார். சத்ருக்களின் ரஹஸ்யங்களை பேதிப்பதற்காக அல்ல, தன் குற்றங்களை தெரிந்துகொள்வதற்காக! இந்த பிரதிஹிம்ஸைக்கு பதிலாக அஹிம்ஸையும், தந்திரத்திற்கு பதிலாக அன்பும், சச்சரவுக்கு பதிலாக சாந்தியும் ஏற்படுமானல்.........(சந்திரகேது வருகிறான்.)

சந்திரகேது :—என்ன உத்தரவு, குருதேவ!

சாணக் :—சந்திரகேது! தென்திசையில் திக்விஜயத்தைப் பூர்த்தி செய்துகொண்டு இன்றிரவு சந்திரகுப்தர் பட்டணத்துக்கு திரும்பி வருகிறார்.

சந்திரகேது :—ஆமாம், தெரியும். அதற்காக நகரத்தை அலங்கரித்து உத்ஸவம் கொண்டாடவேண்டுமென்று கட்டளை அனுப்பியிருக்கிறார்.

சாணக் :—அதேமாதிரி ஏற்பாடு ஆகிவிட்டதா?

சந்திரகேது :—ஆகிவிட்டது. வீடுகள்தோறும் விளக்கேற்றி, தோரணம் கட்டி ஆகிவிட்டது. தெருக்கள்தோறும் வாத்யகோஷம் முழங்க ஆக்ஞை ஆகிவிட்டது. பூர்ண கும்பங்களுடன் எதிர்கொண்டு அழைக்க பிராம்மணர்களையும் திட்டம் செய்தாகிவிட்டது.

சாணக் :—அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். என் வீண் ஆடம்பரம்; என் என்னை உற்றுப்பார்க்கிறாய்? வேண்டாம்; எல்லாவற்றையும் நிறுத்திவிடு.

சந்திரகேது :—ஏனிப்படி?

சாணக் :—போ, சொன்னபடி செய். (ஸந்தேஹமாகவே சந்திரகேது போகிறான்.)

சாணக் :—ஓர் ஸௌந்தரமான அகண்ட அன்பு நிறைந்த ஸாம்ராஜ்யத்தினின்று என்னை ஓர் பிசாசு இழுத்துக்கொண்டே போகிறது. இப்பொழுதும் திரும்பிவிடலாம்; அந்த ராஜ்யத்தின் பர்வத ச்ருங்கங்கள் கண்ணிற்கு தெரியும்பொழுதே திரும்பிவிடலாம். ஏ ராக்ஷஸீ! என்னை ஏன் இழுத்துக்கொண்டே செல்கிறாய்! பொய், வஞ்சனை, திருட்டு, கொலை, பரபீடனம்—இது சேர்ந்தா ஓர் ராஜ்யம்! அந்த ராஜ்யம் தானா எனக்கு! ஐயோ! இரவு எவ்வளவு நாழிகை ஆய்விட்டது. (வெளியில் சென்று ஆகாயத்தைப் பார்க்கிறார்.) ஆஹா! என்ன இது! இது என்ன! இவ்வளவு நாளாக எங்கிருந்தது! நான் ஏன் பார்க்கவில்லை! ஆஹா! எவ்வளவு ஸௌந்தர்யம்! குவியல் குவியலாக! இங்கு, அங்கு, அருகில், அப்பால்—எங்கு நோக்கினும் ஸௌந்தர்ய மயம்! அழகுத்தெய்வத்தின் அழியா இன்பம்! ரம்யமான இங்கிலவில் வெண்மையுண்ட பாகிரதீ கலகலவென்று சப்தித்துக்கொண்டு செல்கிறதே! ஹே பதித பாவநீ! நான்மட்டில் உனக்கு விலக்கா? என் ஹ்ருதயத்தை கழுவமட்டும் உனக்கு வன்மை அற்றுப்போய்விட்டதா? எந்த பக்தியின் மேன்மையினால் பகீரதன் ஸ்வர்க்கத்தில் வாழும் உன்னை கீழே இறக்கி, இந்த மருபூமியை ஸ்வர்ணபூமியாகச் செய்தானே, அந்த பக்தியில் ஒரு திவலையேனும் எனக்கு அளிக்கக் கூடாதா? ஒருதடவை உன்னை, கண்ணீர் தொண்டையை அடைக்க, ‘அம்மா, அம்மா!’ என்று கூப்பிட்டுப்பார்க்கின்றேனே! அம்மா! வேண்டாம், வேண்டாம்; அது இப்பொழுது முடியாது. (உள்ளே சென்றுவிடுகிறார்; அதே சமயம் நேபத்யத்தில் ஓர் குழந்தைக் குரல் ‘பிச்சை, தாயே!’ என்று கேட்கிறது; சாணக்யர் குதித்து எழுந்து வெளியே ஓடிவருகிறார்).

சாணக் :—இது யார்? யாருடைய குரல் இது? (ஓர் பிச்சைக்காரனும், பெண் குழந்தையும் வருகின்றார்கள்.)

பிச்சைக்காரன் :—ஐயா, சாமி! பிச்சை கிடைக்குமா?

சாணக் :—(பெண்ணை அன்புடன் நோக்கி) என்னடா இந்நேரத்தில்?

பிச்சை :—இந் நகரத்திற்குள் இப்பொழுது தான் வந்தேன்; நாள்முழுவதும் பட்டினி.

பெண் :—பகல் முழுதும் ஓர் பருக்கை சோறும் அகப்படவில்லை.

சாணக் :—என்ன இது? ஏன் திடீரென்று என் கண்ணில் நீர் வருகிறது? ஓர் பிச்சைக்காரப் பெண்! என்ன பலவீனமிது! அம்மா! சற்று நேராக வா. (பிச்சைக்காரப்பெண் எதிரில் வருகிறாள்).

சாணக் :—(அவளைத் தொட்டு, அவள் தலையை தடவிக்கொண்டே) இவள் உன் பெண்ணா!

பிச்சை :—ஆமாம், ஸ்வாமி! பகல்முழுவதும் பட்டினி.

சாணக் :—(பெருமூச்சுடன்) உன் பெயர் என்ன, அம்மா?

பெண் :—மாது.

சாணக் :—வீடு எங்கே?

பெண் :—ரொம்பதூரம். இல்லை, இல்லை; சத்திரம் தான்; மரத்தின் அடிதான்.

சாணக் :—உனக்கு பாடத்தெரியுமோ?

பெண் :—தெரியுமே, பாடட்டுமா?

சாணக் :—சற்று சிரமபரிஹாரம் செய்து கொள்; பிறகு பாடலாம்.

பிச்சை :—ஒன்றும் சிரமம் இல்லை; பாடினால் சரியாகிவிடும். பழக்கம்! (இரண்டுபேர்களும் இயற்கையின் அழகைக் குறித்து பாடுகிறார்கள்).

சாணக் :—அன்று இரவும் இப்படியேதான் நிலவு அடித்துக்கொண்டிருந்தது; திடீரென்று மேகம் மூடிவிட்டது; விளக்கு அணைந்தது. என் அருமைப்புதல்வி! ஐயோ! நினைத்தாலே —சாணக்யா! என்ன உன் கண்ணிலுமா நீர்? சே! இந்தா, இதை வாங்கிக்கொள். (கைநிரம்ப மோஹராக்களைக் கொடுக்கிறார்). அம்மா! சற்று—வேண்டாம், நீ போ, போ, போய் விடேன்; ஹூம்! சீக்கிரம் போ, போ. (ஆச்சர்யத்துடன் போகிறார்கள்).

அங்கம் 4. காட்சி 2.

ராஜமஹல்; முரூவும் சந்திரகேதுவும்.

முரா :—சந்திரகேது! என் புத்ரன் தக்ஷிண திக்கை ஜயித்து விஜயியாகத் திரும்பிவருகிறான்; நகரத்தில் ஏன் உத்ஸவம் கொண்டாடப்படவில்லை?

சந்திரகேது :—மந்த்ரி சாணக்யர் தடுத்து விட்டார்.

முரா :—சாணக்யரா தடுத்துவிட்டார்? தன் பிரியசிஷ்யருடைய விஜயத்தையா கொண்டாட மறுத்துவிட்டார்? அஸம்பாவிதம்!

சந்திரகேது :—ஏதாவது தகுந்த காரணம் இருக்கும். இல்லாமலா செய்வார், இப்படி?

முரா :—காரணம் என்ன காரணம்! பொறாமைதான் காரணம். சந்திரகுப்தனுடைய விஜயகௌரவத்தைக் கண்டு பிராம்மணனுக்கு ஸஹிக்கவில்லை.

சந்திரகேது :—அப்படி இல்லை அம்மா. இந்த விஜயயாத்ரையின் ஸூசனையே அவர் கொடுத்ததுதான். அவர் செய்து கொடுத்த ஏற்பாடுகளைக்கொண்டுதானே இந்த விஜயமே! ஏன் வீண் பழிச்சொல்?

முரா :——இதோ ஜயத்வநி கேட்கிறதே! பையன் ஜயத்தோடு திரும்பிவரும் ஸந்தோஷ ஆரவாரம்; நானும் போய் கலந்துகொள்ளுகிறேன். (வேகமாகப் போகிறாள்).

சந்திரகேது :—அண்ணா! உம்மைப் பார்த்து எவ்வளவு நாள்கள் ஆகிவிட்டன! ஜயத்தால் மலர்ந்த உம் முகத்தைக்காண மனது துடிக்கிறது. போன ஜன்மத்தில் நீர் என் ஸஹோதரரோ!

(நேபத்யத்தில் கோலாஹலம்—வாத்தியம், மத்தளம், ஜயசப்தம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வருகிறது; கொடிகளோடு ஸைனிகர்களும் வருகின்றனர்.)

சந்திரகேது :—வாரும், வாரும், அண்ணா! (முன்செல்கிறான், ஆலிங்கனம் செய்து கொள்ள.)

சந்திர :—(கடுமையாக) சந்திரகேது! என் உத்தரவு உனக்கு கிடைத்ததல்லவா?

சந்திரகேது :—எந்த உத்தரவு, அண்ணா?

சந்திர :—என் விஜய யாத்ரையின் வரவேற்புக்கு தயார் செய்யச் சொன்னது?

சந்திரகேது :—ஆமாம், கிடைத்தது.

சந்திர :—பின் ஏன் அனுஷ்டிக்கப் படவில்லை?

சந்திரகேது :—மந்திரி தடுத்து விட்டார்.

சந்திர :—அப்படித்தான் இருக்கும் என்று நான் சந்தேகித்தேன். சந்திரகேது! மகத தேச அதிபதியார் நானா, சாணக்யனா?

சந்திரகேது :—இல்லை ; இதைக் கேளும், அண்ணா.

சந்திர :—பதில் சொல், அரசன் நானா, என் மந்திரியா?

சந்திரகேது :—மஹாராஜர் சந்திரகுப்தர் தான்.

சந்திர :—பின்?

சந்திரகேது :—கேளுமே, சொல்லுகிறேன்.

சந்திர :—வேண்டாம்; மந்திரியை உடனே வரவழை.

சந்திரகேது:—அவர் தகுந்த காரணமின்றிச் செய்யமாட்டார்; ஸரியான காரணம் இருக்கிறது.

சந்திர :—அதெல்லாம் எனக்கு வேண்டியதில்லை; அவரை இங்கு அனுப்பு; நானே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.

சந்திரகேது :—அவர் சொன்னதாவது—

சந்திர :—அவர் சொல்வதை நேரில் வந்து என்னிடம் சொல்லலாம்; இன்றே இவ்விஷயம் தீர்மானமாகி விடட்டும். நான் மகாதாதிபதி அல்லவா என்று இன்றே முடிவு ஏற்பட்டு விடவேண்டும்.

சந்திரகேது :— ஆத்திரப்பட வேண்டாம். சற்று நிதானித்துக் கேளும்.

சந்திர :—சந்திரகேது! நீயுமா என் வார்த்தையை மதிக்கமாட்டாய்! ஸரி, போ. (சந்திரகேது மெதுவாகப் போகிறான்).

சந்திர :—என்ன கர்வம், இந்த பிராம்மணனுக்கு! ஓர் தடவைதான் வேண்டாம் என்று இருந்தாலும், எவ்வளவு பொறுமை! எதற்கும் முதலில் அவர் ஸமாதானத்தைக் கேட்போம். (உலவுகிறார்).

(சாணக்யரும் சந்திரகேதுவும் வருகிறார்கள்)

சாணக்ய :—ஜய விஜயீபவ!

சந்திர :—(மனது இல்லாமல்) நமஸ்காரம், மந்திரீ! உத்ஸவம் ஏன் தடுக்கப்பட்டது?

சாணக்ய :—நான் 'வேண்டாமே' என்று நிறுத்திவிட்டேன்.

சந்திர :—இதற்கு காரணம் நான் அறியலாமா?

சாணக்ய :—ஒன்றும் அவசியமில்லை.

சந்திர :—(திகைத்து) அவசியமில்லையா?

சாணக்ய :—சந்திரகுப்தா, நான் செய்யும் ஒவ்வொரு கார்யமும் நிதானித்து நன்றாக யோஜித்துத்தான் செய்வேன் என்று உனக்குத் தெரியாதா?

சந்திர :—இருக்கலாம்; இதன் காரணம் எனக்கு இப்பொழுது வேண்டும்.

சாணக்ய :—காரணம் தெரிந்து கொள்ளக் கூடிய ஸமயம் இன்னும் வரவில்லை. வரும் பொழுது சொல்லுகிறேன்.

சந்திர :—மந்திரீ! மகதாதிபதி நான்.

(சாணக்யர் சிரித்துக் கொண்டு நிற்கிறார்.)

சந்திர :—மந்திரி! இந்த கர்வத்தை இனி பொறுக்க முடியாது. இதை நான் விசாரணை செய்து முடிவு செய்யப் போகிறேன்.

சாணக்ய :—சந்திரகுப்தா! நீ களைத்திருக்கிறாய்; சற்று ச்ரம பரிஹாரம் செய்துகொள். (போக யத்தனிக்கிறார்).

சந்திர:—மந்திரீ!

சாணக்ய :—(திரும்பி) பையா.

சந்திர :—இந்த ராஜ்யத்திற்கு ஸ்வாமி நீரா நானா?

சாணக்ய :—ஏன்? நீ தான் மஹாராஜர் சந்திரகுப்தர்! ஆக்ஷேபணை என்ன?

சந்திர :—எங்கே! அப்படிக் காணோமே! என் ஸாம்ராஜ்யத்திலேயே நான் ஓர் கைதி, என் வீட்டிலேயே நான் ஓர் அடிமை; மந்திரியான சாணக்யர் பாடலிபுரத்திலேயே நிச்சிந்தையாக வீற்றிருந்து ராஜபோகம் அனுபவிக்க, மஹாராஜர் சந்திரகுப்தர் தேசதேசாந்தரமாகத் திரிந்து அவருக்கு சேர்த்துக் கொடுக்கிறார். சாணக்யரது குணங்களை பாரதவர்ஷம் பாடி மகிழ்வதற்கு சந்திரகுப்தர் ஓர் உபதானம்! சாணக்யரது ஆக்ஞையை சிரமேற்கொள்ளவேண்டும் சந்திரகுப்தன்! சந்திரகுப்தரின் கட்டளையை திரஸ்காரம் செய்வார் சாணக்யர். இதுதான் நம்மிருவருக்கும் உள்ள ஸம்பந்தம் எனில், இந்த ஸம்பந்தம் சீக்கிரமே முடிவு அடையட்டும்.

சாணக்ய :—மஹாராஜாவின் இச்சை! இந்த மந்திரி பதவியை ராஜிநாமா செய்கின்றேன். (மந்திரி சின்ஹமான உடைவாளை கீழே வைக்கிறார்).

சந்திர —அதற்கு முன, உத்ஸவத்தை நிறுத்திய குற்றத்திற்கு பதில் கூறும்.

சாணக்ய :—பதில்? நான் பதில் சொல்வதில்லை.

சந்திர :—அவ்வளவா? ஸைனிகா, இவரைக் கைது செய். (ஸைனிகர்கள் போகாமல் அப்படியே நிற்கிறார்கள்). ஏன் நிற்கிறீர்கள்? ஊம்! (ஸைனிகர்கள் முன் வருகிறார்கள்; சாணக்யர் ஓர் விரலால் அவர்களை அடக்குகிறார்).

சாணக்ய :—(தனக்குள்) சூத்ரனுக்கு இவ்வளவு இறுமாப்பா? (வெளிப்படையாக) மஹாராஜ! இதோ என் மந்திரிப் பதவியை எடுத்துக் கொள்ளும். (மந்திரி உடையை அவிழ்த்து வைக்கிறார்). மஹாராஜ! சாணக்யனா நிச்சிந்தையாக ராஜபோகமா அனுபவிக்கின்றான்? ஓர் பெரிய ஸாம்ராஜ்யத்தை நடத்த அவன் படும் சிரமத்தை நீர் அறியமாட்டீர்! ராஜபோகமா எனக்கு? இரண்டு கவளம் வடித்த அரிசிச்சோறு, மான் தோல் படுக்கை, இரவு மூன்று ஜாமம் வரையில் தலை கொதிக்க ஆலோசனை. வேண்டாம், நான் போகிறேன். உம்முடைய ராஜ்யம்; நீர் அரசாளும். (போகிறார்; திரும்பி) ஆம், போகுமுன் ஏன் உத்ஸவத்தை நிறுத்தினேன் என்றும் சொல்லிவிடுகிறேன். நந்தனுடைய மந்த்ரி பல சூழ்ச்சிகள் செய்து, ஓர் படையும் திரட்டிக்கொண்டு, உம்மை வரவேற்க ஜனங்கள் உத்ஸவம் கொண்டாடிக் கொண்டிருக்கையில் வேறுவழியாக நகரத்தில் பிரவேசித்து, ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்வதாக ஸங்கேதம் செய்துகொண்டிருக்கிறார். உம்முடைய சயனக்ருஹத்தில் நீர் உறங்கும்பொழுது, உம் தலையை கொய்ய எண்ணி, 25 ஆட்கள் சுரங்கமூலமாகப் பிரவேசித்து, உம் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். (போகிறார், மறுபடியும் திரும்பிவந்து) ஆம், இன்னும் ஓர் ஸமாசாரம். ஸெல்யூகஸ் ஜபசாலியாக ஸிந்துநதியைக் கடந்துவிட்டான். இம்மாதிரியாக சத்ருக்கள் நான்குபுறமும் உருவிய கத்தியுடன் உறுமிக் கொண்டு நகரத்தை கவிழ்ந்துகொண்டிருக்கும் இச்சமயம் உத்ஸவ ஸமயமன்று என்றுதான் நீ கட்டளையிட்ட கொண்டாட்டத்தை நிறுத்தினேன். (போக யத்தனிக்கிறார்.)

சந்திரகேது :—(சாணக்யரின் காலில் விழுந்து) குருதேவ! மன்னித்து எங்களை என்றும் காத்து அருளவேண்டும்.

சாணக் :—பதில் கொடுத்தபிறகு, மந்த்ரியாக சாணக்யர் இருக்கமாட்டார். (போய் விடுகிறார்).

சந்திரகேது :—அண்ணா! அனுநயம் செய்து குருதேவரைத் திருப்பி அழைத்துவாரும்.

சந்திர :—ஏன்? எதற்காக? சாணக்யரின்றி ராஜ்யமே நடவாதா? இவ்வளவு அஹங்காரமா? இதுவும் நல்லதுதான். இன்றுதான் விடுதலை அடைந்தேன்; இனி, உண்மையாகவே நான் அரசன்.

சந்திரகேது :—சொல்வதைக் கேளும்; அவரைக் கெஞ்சிக்கூப்பிட்டு வாரும்.

சந்திர :—சந்திரகேது! உன் உபதேசமெல்லாம் எனக்கு வேண்டாம்; உனக்காகவே நான் ஓர்தடவை மன்னித்தேன். அது தவறு

என்று தெரிகிறது! பார்த்தாயா பிராம்மணனது கொழுப்பை! நான் மஹாராஜாவாக இருந்தும் எனக்கு ஓர் சக்தியும் இல்லாதபடி செய்துவைத்தான், பார்த்தாயா? என் தம்பியையும் மன்னிக்க எனக்கு அதிகாரமின்றி ஹேளனத்திற்கு ஆளானேன்! இந்த ராஜ்யத்தில் நான் யார்? அபிநயத்தில் அரசனாக இருப்பதைக் காட்டிலும் உண்மையில் அடிமையாக இருந்து உயிர்வாழலாமே!

சந்திரகேது :—உமது நன்மைக்காகத்தானே எல்லாம் செய்கிறார்.

சந்திர :—ஆ! என் நன்மைக்காகத்தான் என் தம்பி நந்தனைக் கொலைசெய்தாரோ? கொன்றுவிட்டு பிசாசுகளைப்போல் கூத்தாடினார்களே, அந்த சிரஸை வைத்துக்கொண்டு. நான் பார்க்கவில்லையென்று எண்ணுகிறாய்?

சந்திரகேது :—இந்த ஸிம்ஹாஸனமே அவர் உமக்கு அருளியதுதானே!

சந்திர :—அவர் அளித்ததா! ஸரி, நீ போகலாம். அப்ரியம் சொல்வதையே தொழிலாகக் கொண்டுவிட்டாய், போ.

சந்திரகேது :—அப்ரியமாயினும், உண்மையை உரைக்க, உறவினனுக்குத்தானே உரிமை.

சந்திர :—உறவினனா நீ? உறவு ஸமானமானவர்களுக்குள்.

சந்திரகேது :—(சற்று ஸ்தம்பித்து) மஹாராஜ! என் கர்வத்தை மன்னிக்கவேண்டும். மஹாராஜாவின் உறவினன் என்ற அஹங்காரத்தை இனி கொள்ளமாட்டேன். ஸரி, நான் உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், போகுமுன் இதைச் சொல்லிவிட்டுப் போகின்றேன். ஸம்பத் காலத்தில் தாங்கள் என் உறவை திரஸ்காரம் செய்துவிட்டீர்கள்; போகட்டும். ஆனால், விபத்காலத்திலும் அப்படிச் செய்துவிடவேண்டாம்; என்னை அக்காலத்தில் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, என் உதவியை அங்கீகரித்து, என்னை கௌரவிக்கவேண்டும். லஜ்ஜையோ, ஸங்கோசமோ, ஸந்தேஹமோ கொண்டு அந்த ஸமயம் என் ஸஹாயத்தையோ என்னால் ஆகக்கூடிய சிறிய பிரயோஜனத்தையோ அலக்ஷ்யம் செய்துவிடக்கூடாது. மஹாராஜாவுக்கு ஓர் அல்ப பிரயோஜனம் ஏற்படுமாயினும், அதற்காக ஸந்தோஷமாக என் உயிரைக் கொடுத்து சுச்ரூஷை செய்ய ஸித்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை என்றும் மறந்துவிடவேண்டாம். (போகிறார்)

[சந்திரகுப்தர் ஸ்தம்பித்து நிற்கிறார்; 5 ஸைனிகர்கள் உருவிய வாளுடன் வருகிறார்கள்; வெட்டிய தலையைக் காட்டிச் சொல்லுகிறார்கள். "இது தான் தளபதியின் சிரம்"]

சந்திர :—எந்த தளபதி?

ஸைனிகர்:—மஹாராஜாவின் சயனக்ருஹத்தில் சுரங்கம் வைத்து நுழைந்து காத்துக்கொண்டிருந்த 25 ஆள்கள் அடங்கிய தளம்; அத்தளத்தின் தலைவருடைய தலை இது.

சந்திர :—இது நந்தனுடைய மைத்துனன் வாசாலன்; ஸரி, போ. (போகிறார்கள்) ஓ! அதுதான் மந்த்ரி, அப்படி......(ஸேனாத்யக்ஷர் வருகிறார்)

ஸேனாத்யக்ஷர் :—மஹாராஜருக்கு ஜயம்

சந்திர :—என்ன விசேஷம்?

ஸேனா :—கலஹக்காரர்கள் குறிப்பிட்ட ஸமயத்தில் படையெடுத்து வந்தார்கள். நாங்கள் ஸன்னத்தமாக இருப்பதைக் கண்டு ஓடிவிட்டார்கள்.

சந்திர :—உங்களை ஆயத்தமாக அனுப்பியது யார்?

வீராத்யக்ஷர் :—மந்த்ரி ச்ரேஷ்டர் தான்.

(சந்திரகுப்தர் சூன்யத்ருஷ்டியாக ஒரே பார்வையாக பார்த்துக்கொண்டே நிற்கிறார்; ஸேனாத்யக்ஷர் போகிறார்; சந்திரகுப்தர் பார்த்துக்கொண்டே நிற்கிறார்.)

அங்கம் 4. காட்சி 3.

சந்திரகுப்தர் அரண்மனை; இரவு.

சந்திர :-கடைசியில் இப்படியா முடியவேண்டும்! நம் பிரஜைகளுமே, நம் ஸேனையே, எதிரிகளுடன் சேர்ந்துகொண்டுவிட்டதே! உள்ளேயும் சத்ரு, வெளியிலும் சத்ரு; இனி தப்ப முடியாது; வாஸ்தவம் தானே. இயற்கை

எவ்வளவுதான் பொறுக்கும்! பதில் வாங்கிக் கொள்கிறது. என் ஹிதைஷியானவனை, எனக்கு சத்ருவென்று எண்ணி தேசத்தை விட்டுத் துரத்தினேன். அதன் பலன் தான் இது! ஏன்? துரத்தவில்லையா என்ன? வேறு என்ன அது? சந்திரகேதுவின் கண்கள் என் முன்னே நிற்கின்றன. அவன் ஹ்ருதயம் முறிந்து அவன் கண்கள் வழியாக வழிந்தது. எனக்கு ஆச்ரயம் அளித்து, ஸேனையைக் கொடுத்து, ஸிம்ஹாஸனத்திலும் ஏற்றி உட்கார வைத்தான். என் பிராணனைக் காப்பாற்றியவனுக்கு நான் செய்த கைம்மாறு என்ன? அவன் அபிமானத்தை உடைத்தேன்; அவன் உறவைத் திரஸ்கரித்தேன்; தேசத்தைவிட்டுத் துரத்தினேன். ஐயோ! இப்பொழுது அவனைக் காண்பேனாயின், அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வேன். சந்திரகேது! எனக்கு நீயில்லாத ஸாம்ராஜ்யம் வேண்டாம்; உயிரும் வேண்டாம். என்னை 'மன்னித்தேன்' என்று ஓர் வார்த்தை நீ சொன்னால் போதும். இந்த ஸாம்ராஜ்யம் போகட்டும்; போகத்தான் போகிறது. கிருதக்னனிடம் ராஜலக்ஷ்மி தங்கமாட்டாள்; நானே என்மேல் பழிவாங்கிக்கொள்கிறேன்; நான் யுத்தம் செய்யப்போகிறதில்லை. மகத ஸாம்ராஜ்யம் மேகங்கள் கட்டிய மாளிகைபோல் சிதறுண்டு சூன்யமாகட்டுமே! எனக்கு என்ன கவலை!

(ஓர் ஸைனிகன் வருகிறான்.)

சந்திர :—என்ன ஸமாசாரம்?

ஸைனிகன் :—கோட்டையின் தெற்கு மதில் உடைந்துவிட்டது.

சந்திர :—அதுதான் ஸரி; நன்றாக உடையட்டும். ஏன் என்னைப் பார்க்கிறாய்? உடையட்டும், போ.

ஸைனி :—சத்ருஸேனை கோட்டைக்குள் நுழையுமே.

சந்திர :—நன்றாக நுழையட்டும்; நீ போ. (ஸைனிகன் போகிறான்.) நான் யுத்தம் செய்யப் போகிறதில்லை. நானே என்மேல் வஞ்சம் தீர்த்துக் கொண்டு விடுகிறேன்; ஆத்மஹத்தி செய்து கொள்கிறேன்.

(வேறு ஓர் ஸைனிகன் வருகிறான்.)

ஸைனி :—மஹாராஜ!

சந்திர :—நீ வேறு வந்து விட்டாயா? போ வெளியே!

ஸைனி :—சத்ரு........

சந்திர :—யாரடா சத்ரு? அவர்கள் சத்ருக்கள் அல்லர்; பரம மித்ரர்கள், வரட்டும்; உள்ளே போ நீ. (ஸைனிகன் போகிறான்.) சத்ரு யார், மித்ரன் யார் என்று இப்பொழுது யார் கண்டது! எங்கும் சத்ருதான்! அலைமோதும் கடலில் புயல் அடிக்கின்றது. நங்கூரமும் இல்லை, படகோட்டியும் இல்லை. ஓர் அலையில் மோதுண்டு மற்றொரு அலையின்மேல் சென்று விழுகின்றது இச் சிறு படகு. முழுகட்டும்! சீக்கிரம் முழுகித்தொலையட்டும். யோஜனை சொல்ல சாணக்யர் இல்லை, உதவிபுரிய சந்திரகேதுவுமில்லை; எனக்கு புத்தியும் இல்லை, சக்தியுமில்லை; நன்றாக முழுகட்டும். (வேறு ஓர் ஸைனிகன் வருகிறான்.) இவன் வேறா?

ஸைனி :—மஹாராஜ!

சந்திர :—யாரடா மஹாராஜா? ஒரு மஹாராஜாவும் இங்கு இல்லை; போ வெளியே; போ! (அதட்டுகிறார்; ஸைனிகன் போகிறான்; வெளியே ரணபேரிச் சப்தம் கேட்கிறது.) என்ன சப்தம் அது? இந்த இரவில் இந்த கோலாஹலம்! எதற்காக யுத்தம்? யாருடன் யுத்தம்! மறுபடியும் ரணபேரி! சந்திரகுப்தா! நீ இறந்து விட்டாயா? இன்னும் உயிர் இருக்கிறதா? ரணபேரியைக் கேட்டும் நிர்ஜீவனாக வீட்டிற்குள் உட்கார்ந்து கொண்டிருக்க முடியுமா? உன் ஸேனை யுத்தம் செய்கிறது. உனக்காக பிராணனை விடுகிறது. நீ வீட்டில் உறங்குகிறாய்! வீரனாக இருந்தால் எழுந்திரு! இந்த அகாத நைராச்யத்தை உதறி எறிந்துவிட்டு, மின்னல் போல் ஓர் தடவை பாய்ந்து, வஜ்ரநாதம்போல் கர்ஜித்து, பிரளய கல்லோலம்போல் எழு, 'மகத நாட்டுக்கு ஜயம்' என்று.

(முரா வருகிறாள்.)

முரா :—சந்திரகுப்தா! என்ன இது? இப்படியுமா நீ?

சந்திர :—அம்மா! ஆசி அளி; இதோ செல்கிறேன்.

முரு :—எங்கே?

சந்திர :—யுத்தத்திற்குத் தான்; சாகிறேன் யுத்தத்தில்; கூண்டில் அடைபட்ட புலிபோல் குத்துப்பட்டு மரிப்பானேன்! யுத்த க்ஷேத்ரத்தில், நக்ஷத்திரம் நிறைந்த வானத்தின் கீழ் என் ஸேனையின் மத்தியில் நின்றுகொண்டு ஆயுதபாணியாக யுத்தம் செய்தே இறப்பேன்.

முரு :—ஏன் இறக்கவேண்டும்? நீ வீரன். சத்ருவை எதிர்த்துச் செல், ஜயம் நிச்சயம். நீ ஏன் இறக்கவேண்டும்?

சந்திர :—வேறு வழி? நான்குபுறமும் சத்ரு; வீட்டிலும் சத்ரு; வெளியிலும் சத்ரு; 'சத்ரு யார், மித்ரன் யார்' என்று கண்டுகொள்ள முடியாத நிலைமை; ஸமுத்ரம் போன்ற சைன்யம்—அடஜயத்தை அறியாத சைன்யம்.

முரு :—இருந்தாலும்.........

சந்திர :—"இருந்தாலும், போனாலும்" என்பதற்கெல்லாம் இங்கு இடமில்லை. நான் இறக்கத் தான் வேண்டும்; இதோ யுத்தகோலாஹலம் நெருங்குகிறது. ஸைனிகர்களே! (ஸைனிகர்கள் வந்து வணங்குகிறார்கள்.)

சந்திர :—இதோ செல்வோம், யுத்தத்திற்கு. பார்ச்வ ரக்ஷகர்கள் எங்கே? இதோ இன்னும் அருகில் வந்துவிட்டது கோலாஹலம்; ரண பேரியும் முழங்குகிறதே. (நேபத்யத்தில்—"மஹாராஜ சந்திரகுப்தனுக்கு ஜயம்")

சந்திர :-என்ன? மஹாராஜ சந்திரகுப்தனுக்கு ஜயமா? இது ஸ்வப்னமா? அல்லது சத்ருவின் பரிஹாஸமா? சந்திரகுப்தனுடைய ஜயம் எல்லாம் சாணக்யருடனும் சந்திரகேதுவுடனுமே போய்விட்டதே! இன்னும் அருகில் வருகிறதே! இதோ வந்துவிட்டதே! பழகிய குரலாகக் காண்கிறதே. யார்? ஒருவேளை.........

(ரக்தம் பூசிய தேஹத்துடன் சந்திரகேதுவும், சாணக்யரும், சாயாவும் வருகிறார்கள்.)

சந்திர :—இது ஸ்வப்னமும் தானா? விழித்துக் கொண்டிருக்கிறேனா?

சந்திர :—வந்துவிட்டேன், அண்ணா! குருதேவர் காலில் விழுந்து அழைத்துவந்துவிட்டேன்!! இனி ஒரு பயமும் இல்லை!!!

முரு :—குருதேவ! காப்பாற்றவேண்டும். (சாணக்யரின் காலில் விழுகிறாள்; சாயா எழுப்புகிறாள்.)

சாணக் :—எழுந்திரு அம்மா! சாணக்யன் எல்லாம் செய்யவல்லவன்; இறந்தவனைமட்டில் உயிர்ப்பிக்கமுடியாது. சந்திரகுப்தா! எழுந்திரு! இனி யாதொரு பயமுமில்லை; எழுந்திரு! யுத்த ஆயத்தமாகப் புறப்படு. சாணக்யனுடைய ஸ்ருஷ்டியை நிஷ்பலனாக்கவல்லவரும் உண்டோ? அதிலும் இந்த கிரேக்கர்களா?

சந்திரகேது :—பந்து! என்ன உற்று நோக்குகிறீர்? வாரும். இந்த விபத்துவேளையில் ஓர் தடவை காடாலிங்கனம் செய்துகொள்வோம்; கழுத்தோடு கழுத்து வைத்துக்கொள்வோம்; பதின்மடங்கு பலத்துடன் எதிர்ப்போம்; இந்த இருவக்ஷஸ்தலங்களின்மேல் பர்வதமே வந்து விழுந்தாலும் பர்வதம்தான் பொடியாம்.

சந்திர :—சந்திரகேது! நீதான் உறவினன்; நீதான் ஸஹோதரன்; வா. (ஆலிங்கனம் செய்துகொள்கிறார்கள்.)

அங்கம் 4: காட்சி 4.

[மகததேசத்தில் சந்திரகேதுவின் வீடு; இரவு; சாயாவும் தோழிகளும்.]

சாயா :—பாடுங்கள், ஆடுங்கள்; நானும் உங்களுடன் சேர்ந்து நர்த்தனம் செய்கிறேன். மஹாராஜர் கிரேக்கர்களை வெருட்டி அடித்துவிட்டார்; ஜயம் நமக்கு; ஆனந்தம்! ஆனந்தம்!

ஒரு தோழி :—அவர் ஜயத்திற்காக நீ ஆடுவதையும் பாடுவதையும் அவர் கேட்டுக்கொண்டா இருக்கிறார்?

சாயா :—கேட்காவிட்டால் வேண்டாமே! என்மட்டில் எனக்கு ஆனந்தம். வஸந்த காலம் வந்துவிட்டால், மரங்கள் தானாகவே புஷ்பிக்கின்றன. பிறர் கவனிக்கிறார்களா, இல்லையா என்று எதிர்பார்த்துக்கொண்டா புஷ்பிக்கின்றன? குயில்கள் நாம் கேட்கிறோ

இல்லையா என்று தெரிந்துகொண்டா பாட ஆரம்பிக்கின்றனர்? பாடும் ஸுகத்தில் முழுவதும் ஈடுபட்டுவிடுகின்றன; நம்மை லக்ஷ்யமே செய்வதில்லை.

மற்றொரு ஸகீ :—ஆமாம், அவரிடம் அவ்வளவு அன்புகொண்டிருக்கிறாயே; அவர் உன்னிடம் ப்ரியம் வைத்திருக்கிறாரோ?

சாயா :—ப்ரியம் கொண்டால் கொள்ளட்டும்; இல்லாவிட்டால், வேண்டாம். என்னுடைய ப்ரியமே என் ஸம்பத்து; பரிபூர்ணமாக இருக்கிறது; அதிலே மூழ்கிக் கிடப்பேன்; அவர் என்னிடம் அன்பு வைத்திருக்கிறாரா என்று பார்க்கக்கூட அவகாசம் இல்லை.

வேறொரு ஸகீ :—விந்தையாகத்தான் இருக்கிறது உன் பேச்சு! இவளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை அவர்; அவருக்காக உயிரையும் விடுகிறாளாம் இவள். நன்றாக இருக்கிறது!

மற்றொருவள் :—ஆமாம், முன்பும் யுத்தத்தில் அவரைக் காப்பாற்றினாள். நேற்றும் அப்படியே தன் உயிரையும் லக்ஷ்யம் செய்யாமல் யுத்த நடுவில் நின்றுகொண்டு—அவரை ரக்ஷித்துக்கொண்டே—

சாயா :—ஸகி! எனக்கு ஆயிரம் உயிர்கள் இருப்பினும், ஒவ்வொன்றையும் இதே பிரகாரம் அவருக்கு அர்ப்பணம் செய்வேனே! அவருக்கு யோக்யமான வஸ்து என்னிடம் ஒன்றுமில்லையே என்றுதான் வருந்துகிறேன்.

ஸகீ :—என்ன இல்லை உனக்கு?

சாயா :—அழகு இல்லை; ரூபம் இல்லை; லாவண்யம் இல்லை.

மற்ற ஸகீ :—யார் சொல்வது, உனக்கு இல்லையென்று?

சாயா :—இருந்தால், என்னை ஓர்தடவை யாவது நின்று பார்க்கமாட்டாரா? எனக்கு என்ன ஆசை, தெரியுமா? 'இந்த பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்த ஸௌந்தர்யமும் என்னைச் சேரவேண்டும். அந்த ஸம்பூர்ண ஸௌந்தர்யராசியை, கோமுகத்தின் வழியாக விழும் தாரை போல் அவிச்சின்னமாய், நிரந்தரமாய், அவர் சரணகமலத்தில் அர்ப்பணம் செய்யவேண்டும்' என்று விருப்பம் இருக்கிறது. என்ன செய்வேன்? ஒன்றுமேயில்லையே!

ஸகீ :—விலைமதிப்பில்லாத உன் ஹ்ருதயம் ஒன்றே போதுமே!

சாயா :—புருஷர்களுக்கு அது வேண்டாம்; அவர்கள் விரும்புவது ரூபம் தான்.

மற்றவள் :—மூடர்கள்!

சாயா :—(பெருமூச்சுடன்) வேண்டாம்! என்னை அழவைத்துவிடாதீர்கள்! இன்று மஹோத்ஸவம். நான் அழக்கூடாது; ஸந்தோஷமாக இருக்கவேண்டும்; ஆடவேண்டும்; பாடவேண்டும்; இரவுமுழுவதும் கொண்டாடவேண்டும். காலையில் ஸூர்யகிரணங்கள் வந்து நமது வாடின முகத்தை மலர்ப்பிக்கும்வரையில் ஆடவேண்டும்; வரண்டு கட்டிப்போன தொண்டையை பரிஹஸிக்கத் தொடங்கும் வரையில் பாடவேண்டும்; ஆரம்பியுங்கள்.

(ஸங்கீதம்; நர்த்தனம்; முரா தூரத்தில் வருகிறாள்).

முரா :—சாயா, சாயா—உத்ஸவத்தில் மூழ்கிக் கிடக்கிறாள்! யுத்தத்தில் தன் தமையன் மாண்டது தெரியாது. பாவம் தெரிந்துகொண்டவுடன் என்ன பாடு படுவாள்? வேண்டாம். இதை நான் அவளுக்கு சொல்லக் கூடாது. துக்கஸமாசாரத்தைச் சொல்ல, உலகில் மனிதர்களுக்குக் குறைவு இல்லை. (முன்சென்று) சாயா!

சாயா :—(திடுக்கிட்டு) யார்? அம்மா!

முரா :—ஓர் ஸமாசாரம்.

சாயா :—என்ன, அம்மா?

முரா :—இவ்வளவு நாள் கழித்து, என் ஆசை பூர்த்தி ஆயிற்று. (சாயாவைக் கட்டிக் கொண்டு) சாயா! நீ என் மாட்டுப்பெண்ணாய்; பாரததேசத்து மஹாராணி ஆனாய், தெரியுமா?

சாயா :—ராஜமாதா! சந்திரகுப்தரின் பட்டமஹிஷியாகவோ, பாரததேசத்திற்கு மஹாராணியாகவோ நான் விரும்பினேனா? இரண்டும் எனக்குத் துச்சம்தான். சந்திரகுப்தர்

மஹாராஜராக இருந்தால் என்ன? நானும் ஓர் அரசன் புதல்வியல்லவா? என்னை இவ்வாறு ஹேளனம் செய்யவேண்டியதில்லை.

முரு:—இது என்ன இது, சாயா? நான் எப்பொழுதாகிலும் பரிஹஸித்ததுண்டா? உண்மையைத்தான் சொன்னேன். இன்று என் வாழ்நாளின் மனோரதம் நிறைவேறியதைச் சொன்னேன்.

சாயா :—(தனக்குள்) இது உண்மைதானா? இந்த ஸௌபாக்யம் எனக்குக் கிட்டும் என்று நினைத்ததுகூட இல்லையே! என் கல்பனையையும் தாண்டியது இது! அம்மா! இந்த கொடூரமான ஸௌபாக்யத்தை எனக்கு திடீரென்று அறிவித்து, அஸஹ்யமாகச் செய்துவிட்டீர்களே! அம்மா, அம்மா! (முருவின் மார்பில் சாய்ந்துகொண்டு அழுகிறாள்.)

முரு :—ஏனம்மா, சாயா! அழலாமோ? சே, அழாதே.

சாயா:—இல்லையம்மா, இனி, இல்லை. தேவகணங்களே புஷ்பவர்ஷம் வர்ஷியுங்கள்; ஆகாசம் இன்னும் உஜ்வலமாகவும், நீலமாகவும், காடமாகவும் ஆகிவிட்டதே; மந்தாரகந்தம் பூமியை நிரப்புகிறது; வீணாகானத்தால் வாயு வ்யாப்தமாகிறது. என்ன ஆச்சர்யம்! நான் எங்கு இருக்கிறேன்? பூமியிலா, ஸ்வர்க்கத்திலா? புஷ்பசயனத்திலா, மலயமாருதத்திலா? நான் எங்கு இருக்கிறேன்? ப்ரியதமரே! நீர் எங்கு இருக்கின்றீர்? பிராணாதிகரே! எங்குற்றீர்? இதோ இவர் என் பிராணேச்வரர் சந்திரகுப்தர். (திடீரென்று மண்டியிட்டு) பிராணேச்வரா! என் ஜீவனஸர்வஸ்வ! என் தேவதையே! மன்னிக்கவேண்டும். எவ்வளவோ அனுசிதமான வார்த்தைகள் தம்மைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். நான் பாக்யஹீனை; தாய் தந்தையற்றவள்; சிறியவள்; எவ்வளவு குற்றங்கள் செய்திடினும், மன்னித்துக் காத்தருள வேண்டும். (ஆகாயத்தை நோக்கி) ஈச்வரா! இது வெறும் ஸ்வப்னமாக முடிந்துவிடுமோ? அப்படிச் செய்துவிடாதீர்! (மேலே பார்த்துக் கொண்டே இருக்கிறாள்.)

(சாணக்யர் வருகிறார்.)

சாணக்:—முரு! என்ன இது? இதெல்லாம் என்ன?

முரு :—விஜயோத்ஸவம்.

சாணக் :—(சாயாவை உற்றுப்பார்த்து) ஓ! போகட்டும். முரு! நான் ஸமாதான உடன்படிக்கை தயாரித்து விட்டேன்; கையெழுத்துப் போடவேண்டியதுதான் தாமதம்.

முரு :—என்ன நிபந்தனைகளோ?

சாணக் :—சந்திரகுப்த மஹாராஜர் ஸெல்யூகஸ் சக்ரவர்த்திக்கு ஐந்நூறு யானைகள் கொடுத்துவிடவேண்டியது. ஸெல்யூகஸ் சக்ரவர்த்தியும் சந்திரகுப்தருக்கு ஹிந்துகுஷ் மலைக்கு கீழண்டையும் தென்னண்டையுமுள்ள பிரதேசங்களைக் கொடுத்துவிடவேண்டியது. இந்த உடன்படிக்கை என்றும் சாச்வதமாக நிலைநிற்பதற்காக ஸெல்யூகஸ் சக்ரவர்த்தியின் பெண்ணை சந்திரகுப்தர் மணம் செய்துகொள்ளவேண்டியது.

முரு :—என்ன? என்ன? வேண்டாம், குருதேவ! எனக்கு சக்ரவர்த்தியின் பெண் வேண்டாம். (சாயாவை அணைத்துக்கொண்டு) இவள்தான் என் மருமகள்; இவள்தான் பாரத மஹாராணி.

சாணக் :—முரு! சாணக்யருடைய யோசனை இது.

முரு :—ஐயோ! இந்தப்பெண்—அப்பாவி—என்ன செய்யும்?

சாணக் :—ராஜ்யத்தின் க்ஷேமத்தின்பொருட்டு சாயாவும் துச்சமான தன் ஸ்வார்த்தத்தை நிச்சயமாக பலியிடத்துணிவாள். (போகிறார்.)

முரு :—சாயா! ஐயோ, ஈச்வரா! சாம்பல் போல் வெளுத்துவிட்டதே! கண்கள் பிரகாசம் இழந்து பார்வையையும் இழந்தனவே! திறந்த உதடுகளில் வேதனை அவ்யக்தமாக ததும்பி தத்தளிக்கின்றதே! நிச்சலமாய் கருங்கல் மூர்த்தியாக நின்றுவிட்டாளே! ஐயோ, பாக்யஹீனை! (போகிறாள்)

சாயா:—(சிறிது நேரம் சென்று) துச்சமான ஸ்வார்த்தமா? என்ன தெரியும், பிராம்மணனுக்கு? ஆம், ஸ்த்ரீயின் ஸுகம் துக்கம் எல்லாமே துச்சம்தான் புருஷனுக்கு. அவள்

ஜீவனே அவனுக்கு துச்சம் தான். ஐயோ! ஈச்வரா! என்ன செய்துவிட்டீர்! ப்ரேமையையும் ம்ருத்புவையும் ஒன்று சேர்த்தீரே; ஆசையையும் நிராசையையும் ஒன்று செய்தீரே; பூமி சுழல்கிறது; ஆகாயத்தில் ஒவ்வொரு நக்ஷத்ரமாக எண்ணெய் வற்றின விளக்குப்போல் அணைகிறது; ஸூர்யனைப்போல் ஓர்தடவை ஜ்வலித்துவிட்டு அணைகிறது; ஓர் கீர்த்திகானம் ம்ருதங்கத்தின் தாளத்தில் எழுந்து தீர்க்க ச்வாஸத்தில் மறைகிறது; இதோ, இதோ! (மேலே பார்த்துக்கொண்டே நிற்கிறாள்.)

அங்கம் 5. காட்சி 1.

(உத்யானம்; இரவு; ஹெலனும் ஸெல்யூகஸ்ஸும்.)

ஸெல்யூகஸ் :—கடைசியில் இப்படியுமா முடியும்? அஸப்ய சந்திரகுப்தனுக்கு கிரேக்க ஸாம்ராட் ஸெல்யூகஸ் தன் அருமை மகளை மணம் செய்துகொடுக்கவேண்டுமாம்! வேண்டாம், இந்த ஸமாதானம். ஒருநாளும் நான் இதற்கு ஒத்துக்கொள்ளமாட்டேன்; என் பெண்ணை விற்று, நான் விடுதலை அடையவேண்டியதில்லை.

ஹெலன் :—அப்பா! இனி, கர்வம் நமக்கு ஏற்குமா? அவமானத்தின் எல்லையை அடைந்தபிறகு, கௌரவம், பார்த்து ஆகுமா? எதிர்த்துச் சென்றீர்: உள்ளதையும் இழந்தீர்; இனி ஏன் வீண் டம்பம்?

ஸெல் :—ஏன்? இதில் என்ன அவமானம்? எதிர்த்துச் சென்றது பிசகு ஆகுமா? நாகரீகக்குறைவான ஓர் ஜாதியை ஜயித்து நம் வசப்படுத்திக்கொண்டு நாகரீகப்படுத்துவது பிசகா? 'மில்டையடீஸ்' அப்படிச் செய்யவில்லையா? 'லியோனிடாஸ்' அப்படிச் செய்யவில்லையா?

ஹெலன் :—அப்பா! பிடிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றும் பொருட்டோ, ஓர் தேசவாஸிகளுக்கு தங்கள் ஆத்மாபிமானம் வளரும் பொருட்டோ, கொள்ளைக்காரர்களிடமிருந்தோ கடுங்கோலினின்றோ விடுவிக்கும் பொருட்டோ, சாந்திக்கொடியை ஏற்றும்பொருட்டோ செய்யும் யுத்தம் தர்மயுத்தமாகும். மற்றவை எல்லாம் கொலைதான். ஓர்தேசம் ஸுகமாக, சாந்தியுடன் படுத்து உறங்கிக்கொண்டிருக்கையில், அதன் கழுத்தை முறித்து, அதன் நாகரீகத்தை நசுக்கி, அதன் ஹ்ருதயத்தை கொலைக்களமாகச் செய்யவே நீங்கள் புறப்பட்டு வந்தீர்கள். ஓர் பிரதிஷ்டித ராஜ்யத்தின் சாந்தியை பங்கம் செய்ய நீங்கள் ஆயுதம் எடுத்தீர்கள். ஸதீமணிகள் புருஷர்களைப் பறிகொடுத்து கதறுமாறும், எண்ணற்ற தாய்கள் தங்கள் மக்களை இழந்து பரிதவிக்குமாறும் செய்துவிடவே தாங்கள் இக்கார்யத்தை ஆரம்பித்தது. இத்தேசத்தில் மஹாமாரியும் தீவட்டிக் கொள்ளையும் சூறையாட விட்டுவிடவே உங்களுடைய ப்ரயத்னம். இவ்வளவும் எதற்கு? ஆத்மரக்ஷணத்திற்காகவல்ல, விஜய கௌரவத்திற்காக, ஓர் பெயருக்காக; கீர்த்தியென்கிற தங்கள் உத்தண்ட பிரவ்ருத்தியின் அஹங்காரமென்னும் பிசாசை பிரலோபனை செய்து, மஹாபாதகன் ஆவதற்காக.

ஸெல்யூக் :—ஹெலன்! நீ என் பெண்தானா?

ஹெலன் :—அப்பா! (மண்டியிடுகிறாள்.) சற்று யோஜித்துப் பாருங்கள். சந்திரகுப்தர் தங்களுடன் சண்டைக்கு வந்தாரா? ஸிந்துவின் இக்கரையில் தம் ராஜ்யத்தை சாந்தியுடன் நிம்மதியாக ஆண்டு வந்தார். இது உங்களுக்கு ஸஹிக்கவில்லையே! அவர்மேல் வலுவில் படையெடுத்துச் சென்றீர்கள்; தோற்றீர்கள்.

ஸெல்யூக் :—யுத்தம் என்றால் ஜயமும்தான் ஏற்படும், தோல்வியும்தான் நேரிடும். இப்பொழுது தோல்வியடைந்து விட்டதால் என்ன? மறுமுறை, நான் விடுதலை அடைந்தவுடன், பார்.

ஹெலன் :—ஐயோ, அப்பா! ஜயித்தவர்கள் நீங்கள் கூறும் அஸப்யஜாதியினர்; அவர்கள் தயவுக்கு காத்திருந்து விடுதலை அடையவேண்டும்! வெட்கமாக இல்லையா? தாங்கள் செய்துகொண்ட பிரதிக்ஞை என்ன! முடிந்தது எவ்விதம்? வெற்றி அல்லது மரணம் என்றீர்களே! என்ன அதஃபதனம்! இதுதானா கிரேக்க கௌரவம்!

ஸெல்யூக் :—ஹெலன் உன்னுடைய வாயிலிருந்தா இச்சொற்கள்? எனக்குத் தோற்றது கூட பெரிதாகத் தோன்றவில்லை. உன் வார்த்தைகளைத்தான் ஸஹிக்க முடியவில்லை. இதற்காகவா தாயிழந்த உனக்கு, தாயாக இருந்து

வளர்த்தேன்! பெண் என்று ஓர் ஜன்மத்தை ஸ்ருஷ்டித்தாரே, அந்த பகவானைச் சொல்ல வேண்டும்.

ஹெலன் :—அப்பா! என்னை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையா? உங்கள் அவமானம் என் அவமானமல்லவா! கோபத்திலா சொல்லுகிறேன்? வருத்தத்தால் தானே; அனந்த ஸாகர ஸமுத்ரத்தைக் கடைந்ததில் வெளியான இந்த திக்த ஹாலாஹலம் எனக்கு தங்களிடத்திலுள்ள அபிமானத்தால் தானே! என் உயிரையே தங்களுக்கு அர்ப்பணம் செய்பவளல்லவா? தங்களிடத்தில் எனக்கு ப்ரியம் இல்லாமலும் இருக்க முடியுமா? நான் ஸ்த்ரீயல்லவா? ப்ரியமில்லாதவளும் ஸ்த்ரீயா? ப்ரியம் என்பது, புருஷனுக்கு, ஒழிந்த பொழுதுக்கு, ஓர் உல்லாஸம். ஆலஸ்யத்தின் சிந்தை, அவகாசத்தின் சித்தவிநோதம். ஸ்த்ரீக்கு ஸமஸ்த முஹூர்த்தமும் ஸமஸ்த சிந்தையும் ஸமஸ்த கார்யமும் ஸமஸ்த ஜீவனும் ப்ரியம்தானே! அதுதான் அவளுக்கு ஸ்வர்க்கம்; அதிலேதான் அவளுக்கு மரணம். ஆகையால் நான் சந்திரகுப்தனை மணம் செய்துகொள்ள ஸம்மதித்து விட்டேன். மணம் அன்று இது; பலிதானம் இது. ஓர் மனுஷ்ய ஜாதியின் பெரிய ஹிதத்தின் பொருட்டுச் செய்யப்படும் பலிதானம். ஸெல்யூகஸ் சக்ரவர்த்திக்கும் சந்திரகுப்த சக்ரவர்த்திக்கும் ஏற்பட்ட த்வேஷாக்னியை என் ரத்தத்தால் சமனம் செய்வேன். யுத்த ஸன்னத்தமான இரண்டு வீரர்களின் நடுவில் விழுந்து அவர்களின் இருகத்திகளையும் என் மார்பில் தாங்குவேன்.

ஸெல்யூக்:—வேண்டாம், இந்த அவமானம். எந்த கிரேக்கனும் இதை ஸஹியான்! அதற்கு முன்பே உன்னையும் கொன்று என்னையும் மாய்த்துக் கொள்ளுகிறேன்.

ஹெலன்:-ஏன் அப்படி? சற்று யோஜியுங்கள்; நிதானித்துப் பாருங்கள்; இதில் லஜ்ஜாவஹம் ஒன்றுமில்லை. கிரேக்கர் மானபங்கமன்று, மானஸம்ரக்ஷணம் இது. சந்திரகுப்தன் என்னும் ஓர் வ்யக்தியும் ஹெலன் என்ற ஓர் பெண்ணும் புரிந்து கொள்ளும் மணம் அன்று இது. இரண்டு நாகரீகங்கள் புரிந்துகொள்ளும் விவாஹம்; இது இரண்டு ஆர்யஜாதிகள் ஒன்றுபடும் ப்ரஸக்தி இது. இரண்டு த்வேஷ ஸமூகங்கள் மறைந்து, அன்பு வளரும் மார்க்கம் இது. கர்மமும் மோக்ஷமும், சிந்தையும், கல்பனையும், விஞ்ஞானமும், கவித்வமும் செய்துகொள்ளும் திருமணம் இது. இந்த விவாஹோத்ஸவத்திற்கு ப்ளேட்டோவும் கபிலரும் சேர்ந்து பாடுவார்கள். ஸோலனும், மனுவும் கைகோத்து உலாவுவார்கள். ஹோமரின் ம்ருதங்கத்திற்கு வால்மீகியின் வீணை ஒலிக்கும். ஹிரோடட்டஸும், வ்யாஸரும், ஸாக்ரடிஸ்ஸும், புத்தரும், அகிலிஸ்ஸும், அபிமன்யுவும்--ஒருவரையொருவர் கண்டு கொள்வார்கள், இம்மாதிரியான விவாஹம் நடந்ததுண்டா, இவ்வுலகில்? இது கிரேக்க கௌரவத்தின் பராகாஷ்டையன்றோ? அந்த கௌரவத்தை அளிப்பது தாங்களன்றோ!

ஸெல்யூக் :—வேண்டாம், இந்த கௌரவம் எனக்கு! எனக்கு பரிச்யமான கௌரவம் ஒன்றுதான். அது என் பாஹுபலத்தினால் ஸம்பாதிக்கப் படுவது; பிறரிடம் பிச்சை எனக்கு வேண்டியதில்லை. எனக்காக நீ பலிதானம் செய்து கொள்ள வேண்டியதில்லை. என் உயிருள்ள வரையில் நான் இதை எதிர்ப்பேன். நீ சந்திரகுப்தனை மணந்துகொள்ளக் கூடாது. இது என் ஆக்ஞை; உன் தந்தையின் ஆணை. என் பெண்ணைக் கொடுத்து நான் விடுதலை அடைய வேண்டியதில்லை.

(சந்திரகுப்தர் வருகிறார்.)

சந்திர :—வேண்டவே வேண்டாம், வீரச்ரேஷ்டரே! விலை கொடுத்து விடுதலை பெற வேண்டிய அவச்யமேயில்லை. கிரேக்க ஸம்ராட், தாங்கள் ஸ்வச்சந்தமாகச் செல்லலாம். தங்களை விடுதலை செய்துவிட்டேன். வேண்டுமானால் மறுமுறையும் மகத தேசத்தின்மீது படையெடுத்து வரலாம். அதற்கும் சந்திரகுப்தன் தயாராகவே இருப்பான். போய் வாருங்கள். ராஜகன்யையே, நீயும் போகலாம். ரக்ஷகர்களே! இவர்களை வழியனுப்புங்கள்.

ஸெல்யூக் :—என்ன இது!

சந்திர:-ஸம்ராட்! ஹிந்து ஜனங்கள் காட்டுப் பிறாண்டிகளல்லர், அஸப்யர்களல்லர். அலெக்ஸாந்தர் புருஷோத்தமருக்குச் செய்த மரியாதைக்குப் பதில்செய்ய அவர்களுக்குத் தெரியும். ரக்ஷகர்களே! இவர்களை மரியாதையுடன் இவர்கள் தேசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

ஸெல்யூக் :—(ஆச்சர்யத்துடன்) பாரத சக்ரவர்த்தி! தாங்கள் மஹான். முன் ஒருநாள் என்னைக் காப்பாற்றினீர்கள். இன்றும் யாதொரு நிபந்தனையுமின்றி என்னை விடுதலை செய்தீர்கள். நான் இதை மறவேன். பிரஸ்தாப உடன்படிக்கையின் எல்லா நிபந்தனைகளையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். நான் இப்பொழுது இழக்கும் பிரதேசங்களை முடிந்தால் என் பாஹு பலத்தினால் ஓர் ஸமயம் திரும்பவும் அடைவேன். ஆனால் என் பெண்ணை மட்டில் தமக்கு கொடுக்க மனம் வரவில்லை. தாங்கள் ஹிந்து!

ஹெலன் :—என்? ஹிந்துவும் மனுஷ்யன் தானே!

ஸெல்யூக் :—ஹெலன்! (ஆச்சர்யத்துடன் ஹெலனைப் பார்க்கிறார்; ஹெலன் தலை குனிகிறாள்.)

சந்திர :—ராஜகுமாரி புரிந்த இந்த மஹா ஸம்மானத்தை நான் தலை வணங்கி ஏற்றுக் கொள்கிறேன். (ஸெல்யூகஸ்ஸிடம்) ஆனால் வீரச்ரேஷ்டரே! இந்த பிக்ஷையை நான் ஏற்றுக் கொள்ள இயலாது. நான் தங்கள் கன்யையிடம் அன்பு கொண்டுள்ளேன் என்பது வாஸ்தவம். அதை வாயார ஒப்புக் கொள்கிறேன். அதுவும் இன்றுமுதல் அல்ல. ஸிந்து நதிக் கரையில் அலெக்ஸாந்தர்முன்பிலே கண்டேனே, அன்று முதலாகவே இவள் முகம் என் தியானத்திலேயே இருந்து வருகிறது. என் ஸ்வப்னம் பலிதமாகும் என்றாவது, என் மானஸிக பிரதிமை என் கண்முன் வந்து நிற்கும் என்றாவது நான் நம்பினதில்லை. அந்த ஆசை, அந்த கௌரவம், அந்த உத்ஸவம்—ஏன், அந்த ஸ்வர்க்கமே என் கைப்பிடிக்குள் இன்று வந்தும், என்கடின ஸ்பர்சத்தால் நழுவி விட்டது! வேண்டாம் ஸம்ராட்! என் பந்து ச்ரேஷ்டனான சந்திரகேது தான் சாகுந்தறுவாயில் தன் தங்கை சாயாவை எனக்கு அர்ப்பணம் செய்துவிட்டு இறந்தான். அவன் அந்திமப் பிரார்த்தனையை நான் திரஸ்கரிக்கக் கூடாது. பாரத வர்ஷத்தின் பட்டமஹிஷி மலயராஜாவின் பெண்ணான சாயா!

(திடீரென்று சாயா வருகிறாள்.)

சாயா :—மஹாராஜாவின் கிருபை! அனுக்ரமாக தாம் அருளிய இந்த ஸன்மானத்தை பெற்றுக் கொள்ளும் பிச்சைக்காரி நானல்ல. பாரத ஸம்ராட்டிற்கு யோக்யமான மஹிஷி கிரேக்க ஸம்ராட்டின் புதல்வி ஹெலன்தான். அக்கா! நீ பாக்யசாலி. மஹாராஜர் உன்னிடம் அன்பு கொண்டிருக்கிறார். இந்தா, அக்கா! நான் ஸ்வச்சந்தமாக முழு மனதுடனும் உனக்கு அளிக்கின்றேன். இந்த என்னுடைய ஹ்ருதய நிதியை, என் ஸர்வஸ்வத்தை; இந்தா. (கால் நடுங்க ஹெலனிடம் சென்று, அவளுடைய கையை அசைவற்ற சந்திரகுப்தனுடைய கையோடு சேர்த்து) இந்த அமூல்யமான ரத்னத்தை உன் வக்ஷஸ்தலத்தில் தரித்துக்கொள். இதுதான் எனக்கு மிகுந்த கௌரவம் வாய்ந்த முஹூர்த்தம். ஆனால், அக்கா! நான் என்ன விலை கொடுத்து இந்த ரத்னத்தை வாங்கினேன், தெரியுமா? (கண்ணை வஸ்திரத்தால் மூடிக்கொண்டு, சட்டென்று போய்விடுகிறாள்.)

சந்திர :—(ஸ்வப்னத்திலிருந்து விழிப்பது போல்) இல்லை, இல்லை; இது முடியாது. சந்திரகேது! மறக்கமாட்டேன், வேண்டாம் இது; ஸம்ராட்! தாங்கள் இனி செல்லலாமே.

(ஸெல்யூகஸ் கவலையுடன் வருகிறார்.)

ஸெல் :—ஹெலன்! இது எல்லாம் என்ன?

ஹெலன் :—ஒன்றும் புரியவில்லையே!

ஸெல் :—ஆனால் நீ சந்திரகுப்தனை மணக்கத் தான் போகிறாயா?

ஹெலன் :—ஆமாம், அப்பா. அனுமதி கொடுங்கள்.

ஸெல் :—ஸரி, அப்படியே நடக்கட்டும். இப்படியெல்லாம் நேரிடும் என்று கனவிலும் நினைததில்லை! (கவலையுடன் போகிறார்.)

ஹெலன் :—இதெல்லாம் தங்களுக்கு எப்படித் தெரியும்? தர்க்கவிதர்க்கங்களாலும் ஸாதிக்கமுடியாத ஓர் பெரிய விஷயம் இந்த விவாஹத்தின்மூலமாக ஸித்திக்கும். நான் ஏன் அவரிடம் அன்புகொள்ளவில்லை? காலக்ரமத்தில் ஏன் அன்பு கொள்ளக்கூடாது? ஒப்பற்ற சௌர்யம், கருணார்த்ர நேத்ரம், மஹத்தான ஹ்ருதயம்—இவ்வளவும் பொருந்திய இவரை நான் ஏன் காதலிக்கக்கூடாது? ஈச்வரா! ஹ்ருதயத்திற்கு பலம் அளியும்.

(தொடரும்.)

கோயிற் கபாடம்.

(ரா. ஸ்ரீ தேசிகன்.)

"கணக்கிலா கால அலைகள் மோதியும்.
கொஞ்சமுங் குலையாக் கோயிலின் வாயிலின்
மும்மணிக் கபாடம் மூடிக் கிடந்த
மர்மங் கண்டிலோம்; மதிகளும் மயங்கின,
ஊழிகள் தேய்ந்தன; ஊன்பல பெற்ளும்,
ஆழ்நீர்ப் பிறவிக் கடலினி லாழ்ந்தே.
எத்தனை காலம் ஏங்குவம், அரசே!
சித்தம் வாடச் செய்வதோன் றறியோம்.
ஏனோ திறந்திலை? ஏனோ திறந்திலை?
நாளு நறுமலர் நாங்கள் கொய்து
வானவர் வியக்கும் வாடா மாலை
புனைந்தோம், புண்ணிய, உன்னடி போற்றவே;
குழவி யிளநகை குளிர்ந்து காட்டும்
பழுதிலா முத்துப் பதித்த மாலையும்
பனிக்கடல் தந்த பவள வடமும்
இனிதாய்ச் சுமந்தே யிறைஞ்சு கின்ளும்.
இருதய வீணையில் இசைகள் கூட்டியே
மருவிலாக் காவியம் மகிழ்ந்து செய்தோம்.
எத்தனை சொல்லையும் ஏழைமைப் படுத்தும்
வித்தக, நின்னெழில் வியந்து கொண்டே
சித்திரக் கிழியிற் சீருடன் சமைத்தோம்.
உருவிலாச் சிலையில் உறங்கும் கருத்தினை
அருமையாய் அமைத்தோம் ஆயுதங்கொண்டே.
ஏனோ திறந்திலை? ஏனோ திறந்திலை?
வானவர் வந்து வாழ்த்துக் கூறவும்
ஏனோ திறந்திலை? ஏனோ திறந்திலை?"
எனப்பல பேசி ஏங்கி நின்றார்.
ஆழியான் அருட்பசி யென்னை ஆள
ஆழித் திரைகளின் சிகரம் ஊர்ந்தேன்.
தனிமையாய்த் தாரகா கணங்களைத் தாவி
இனிதாய் மிதந்தேன் இறைவன் வாயிலில்.
தொண்டனேன் விட்ட தொலையாச் சுவடுகள்
மண்டலந் தோறும் மலிந்து கிடக்கும்.
அண்டர் நாயகன் அருளை நாடி
எண்ணரும் ஞாபகப் பொறிகளை யெறிந்தேன்
விண்ணவர் வீதியில் வியர்க்கத் திரிந்தே
கால மடியினிற் கனவு காணும்
பாலனும் என்னைப் பார்த்தவர் நொந்து
"கற்பக் கடலை நீகடந் தனையோ?
அற்பர் நாங்கள் அலமரு கின்ளும்.
சொற்பதங் கடந்த சோதியைக் காணவே."
என்றே கூறி இரங்கி நைந்தனர்.
பனிநனை காலை பறவைகள் பாடின,
கனிகள் சொரியும் கடிபொழி லிடத்தே
சங்க முழக்கமும் சாம கானமும்
எங்கும் நிறைந்தன எண்டிசை யதிரவே
பேரிகை யார்த்தது பேரிடி போலவே
ஆரியர் ஆர்வமொ டலர்மழை பெய்தனர்.
அலைகடல் போலவே அகன்று காணும்
கலைவலார் கோடிக் காட்சிக் கிடையே,
மலையென எழுந்த மதிள்சூழ் மாதவன்
கோயிலின் வாயிற் கோதிலாச் சுருதியில்,
"மைந்த, எதனைக் கொணர்ந்தனை? மைந்த"
என்ற வின்மொழி எழுந்தது கிண்ணென.
"எனைத்தான் கொணர்ந்தேன்; ஏற்கத் தகுமோ?
அன்னை போல அருள்தனை அள்ளிச்
சென்னியிற் சொரியும் செயல்தனை உடையாய்,
கதறு கின்றேன்; கபாடந் திறவாய்."
காலத் தூசிக் காடு படர்ந்த
கோலக் கதவு கோளங் கிழியக்
கிருக்கெனக் கீலிற் கிளர்ந்து நகர்ந்தேன்?
முன்போல் மூடின மும்மணிக் கதவுகள்
சிந்தையில் மூழ்கினேன்; செய்வ தோர்ந்தி
லேன்.

அந்திவான் மின்னென அடித்த துளத்தே.
புந்தியிற் பொலிந்த பொருளின் சோபை
என்னையும் மீறி எரிந்த தம்மா!
"எனதும் உனதே! எனதும் உனதே!"
என்ற பல்லவி எங்கும் பரந்தது.
கதவுந் திறந்தது; காத்துளோர் குனித்தனர்;
மகிழ்ச்சி வெள்ளம் மண்டிக் குடித்தே.

ராமனும் ஸீதையும்.

(ஸ்ரீ ராஜநாயகி.)

ஸந்தி 4. தினம் 1.

காலம் : காலை.

இடம் : பஞ்சவடீ பர்ணசாலை.

பிரவேசம் : ராமன் ஸீதை, லக்ஷ்மணன்.

லக்ஷ்மணன் :—நாம் இந்தப் பஞ்சவடீதீரம் வந்தபிறகு இந்த மூனறு வருஷங்களாக நமக்கு மஹரிஷிகளுடைய தரிசனமே அரிதாகி விட்டது, அல்லவா?

ராமன் :—நாம் கடைசியாக அன்று பார்த்தது அகஸ்தியர்தான். அவர்தான் இந்த தக்ஷிண திக்குக்கு காவல். அவருக்கப்பால் அடுத்த அதிகாரி யமதர்மராஜாவே. அவரை தரிசித்தபிறகு வேறு யாருடைய தரிசனமும் எனக்குப் பெரிதாகப்படவில்லை, லக்ஷ்மணா!

ஸீதை :—அவரைப் பார்த்தபொழுது எனக்கு கங்காப்பிரவாஹத்தின் ஞாபகமே வந்தது. தமது வேகத்தையும் வீர்யத்தையும் மறைத்து நமக்கென்று சாந்தமான ரூபத்தைக் காட்டுவதுபோலிருந்தது.

ராமன் :—அப்படியுமல்லவென்று நினைக்கிறேன்; நமக்காக அவர்கள் எதையும் மறைத்துக்கொள்ளப் பிரயத்தினப்படுவதாகவுஞ் சொல்வதற்கில்லை. தங்களிடம் யாதொரு விசேஷ சக்தியுமிருப்பதாக அவர்களுக்கே தெரிந்திருக்குமோவென்பது என் ஸந்தேஹம். ஸூர்யகாந்தக்கல் ஸூர்யஸந்நிதியில் அக்நியைக் கக்கும்பொழுதும், அது ஒன்றுமே அறியாததுபோல் கைக்கு ஜில்லென்றுதான் படுகிறது. அதனிடம் தோன்றும் அக்நிக்கு அதுவே உற்பத்தி ஸ்தானம் என்று சொல்ல இடங்கொடுக்கவில்லையல்லவா?

லக்ஷ் :—அண்ணா சொல்வதுதான் பொருத்தம்—இன்னொரு விசித்திரம் பார்த்தீர்களா? அன்று அயோத்தியைவிட்டு எப்படிப் பிரிவோம் என்று ஏங்கின இதே மனது இன்றைக்கு இந்தப் பதின்மூன்று வருஷமாகப் பழகின காட்டைவிட்டு எப்படிப் பிரிவோம் என்று ஏங்கும்போலிருக்கிறது!

ராமன் :—(புன்சிரிப்புடன்) அதுதான் வாஸனை என்கிற கர்மபந்தம். நம்முடைய ஒவ்வொரு தனித்தனி அநுபவத்திலும் ஒரு பொதுவான அடிப்படையான தத்துவம் அடியில் புதைந்து தாங்கிக்கொண்டிருக்கும். விசாரம்* செய்பவர்க்குத்தான் அது விளங்கும். இப்பொழுது நீ சொல்வதில் வாஸனாதத்வம் என்கிற அப்யாஸதத்வம்தான் விளங்குகிறது. லோகமே வாஸனை என்கிற அப்யாஸமூலத்தில் ஜனித்தது. பிரமதேவன் சூர்ய சந்திரர்களை வழக்கம்போல் ஸ்ருஷ்டித்தான் என்று சுருதி சொல்லுகிறது. நாமாகவே செய்வதானாலும் சரி, நிர்ப்பந்தத்தினால் செய்வதானாலும் சரி, ஒரே காரியத்தை இரண்டாந்தரம் செய்வதிலுள்ள சிரமக்குறைவே ஸுகம் போல் காணப்படுகிறது. உண்மையில் இது யதார்த்த ஸுகமல்ல; பின் என்னவெனில், முதல் தடவையில் கணக்குத் தெரியாமல் சிரமப்பட்டு விட்டோம் என்பதே. ஒரு வருஷத்துக்கு வேண்டிய தான்யத்தை முன்னதாகவே சிரமப்பட்டு ஸம்பாதித்து வைத்துக் கொண்டால் தினம் தினம் எடுத்துச் சாப்பிடுவது ஸுகமில்லையா? சக்தி நம்மைவிட்டு விலகுவதற்குத்தான் சிரமமென்று பெயர். சக்தி நமக்குள்ளேயே அடங்கி நிற்பதுதான் உண்மையான ஸுகம். சிரமமும் ஸுகமும் எதிரிகள். ஊரைவிட்டுப் போகும்போது கையிருப்பு தான்யத்தை எறிந்துவிட்டுப் போகமாட்டாமல் மூட்டை கட்டிக்கொண்டு போவதுதான் கர்மபந்தம். அதைக் தூக்கிக் கொண்டே அலைவது சிரமம்; அதை செலவழித்துக்கொண்டே வருவது ஸுகம். அதாவது, பழைய அப்யாஸத்தில் தோன்றின ஸுகம் புதிய அப்யாஸம் அவசியமாகும்பொழுது சிரமமாகவும் துக்கமாகவும் தோன்ற ஆரம்பிக்கிறது. இந்த இரண்டும் ஒளியும்

---

* விசாரம்—அரூத ஆராய்ச்சி.

இருளும்போல் பிரிக்கமாட்டாத துவந்துவங்கள். இவைகளை உருத்தெரியாமற் பெயராற் றுப் பறந்தோடப் பந்தாடி எறியவேண்டும், லக்ஷ்மணா! இல்லையேல் இவை ஊர்ச்சந்தியிற் பந்தாடிவிடும்! இதுதான் வஸிஷ்ட பகவான் எனக்கு விஸ்தாரமாய் உபதேசித்தது. நான் உனக்கு ஸங்கிரஹமாகவே சொன்னேன்.

லக்ஷ் :—இன்றைக்கு நமக்கு இதைவிடத் தான் என்ன வேலை? இன்னும் கொஞ்சம் சொன்னாலும் கேட்கிறேன்.

ஸீதை :—எனக்குக்கூடக் கொஞ்சம் புரிகிறதே! புருஷனுக்கு ஸ்திரீதானே சக்தி? என்னைத் தாங்கள் பந்தாடி எறியப்போகிறீர்களா?

ராமன் :—உன்னைப் பிரிதல் சேர்தல் என்கிற காரியங்களுக்கு உட்படுத்தமாட்டேன் என்றுதான் நான் சொல்லவந்தேன். சற்று நிதானமாய்க் கேள் :—அடுத்த க்ஷணம் என்ன நேரிடுமென்று சொல்லமுடியாத நிலைமையில், நாமாக ஒன்றை ஸித்தாந்தம் செய்துகொண்டு அதற்குமட்டும் தன்னை ஸந்நத்தனாக்கிக்கொள்வது எவ்வளவு மதியின்மை! எது நேர்ந்தாலும் தாங்கி நிற்பதுதான் தீரர்களுக்கு லக்ஷணம். நனைந்த வஸ்திரத்தில் காற்றை மூட்டையாக முடிந்து கட்டித் தெப்பம்போல் வைத்துக்கொண்டு புதிதாய் நீந்தக் கற்றுக்கொள்வதுபோலத்தான் அப்யாஸத்தின் ஸௌகரியம். பைக்குள் காற்றினளவு குறைவதற்குள்ளாக ஆள் கரையேறிவிட்டால் ஆபத்தாகும். முன்னால் ஓடுகிற நரி இந்த ஒழுங்கில் தான் ஓடுமென்று நாய் தனக்குள்ள பூர்ண ஸாமர்த்தியத்தோடு ஸித்தாந்தஞ் செய்துகொண்டு துரத்துகிறது. நரி ஸமயம் பார்த்து வேறுபுகம் திரும்பிவிடுகிறது; நாய் எவ்வளவுக்கெவ்வளவு வேகத்தை அவலம்பித்ததோ அவ்வளவுக்கும் அதற்கு வீணலைச்சல் தான். ஆனால் நரியின் காலடியிலேயே குறிதவறாமல் கணக்காய் அடிவைத்து அதன் வேகத்துக்கு ஒரே ஒரு மயிரிழை அதிகமான வேகத்தை அவலம்பித்து ஓடப்பழகினவன் தான் ஸித்தபுருஷன்.

ஸீதை :—இங்கு நமக்குள் யாருக்கு யாதொரு ஜந்துவின் ரூபம், வாஸனை, அப்பியாஸம் ஒன்றுமே வரவேண்டாமென்று தோன்றுகிறது. என்மட்டில் நான் நரியாக விரும்பவில்லை, அதிகப்படித்த புருஷனாகவும் விரும்பவில்லை. இந்த ஸ்வல்ப ஸ்வயபுத்தியுள்ள ஸ்திரீயாக இருப்பதே எனக்குப் போதும்!—சிலசமயம் பார்த்தா அவர்களின் வாக்யங்களுக்கு அர்த்தந்தேடிக் கொடுப்பது உன்னதமான ஸாலவிருக்ஷத்தின் உச்சியிலிருந்து தேனடை எடுத்து வருவதுபோலிருக்கிறது அல்லவா? லக்ஷ்மணா! கூட்டில் தேனிருந்தாலும் இல்லாவிட்டாலும் கொம்புகள் கீறுவதும் ஈக்கள் கொட்டுவதும் நிச்சயம்.

ராம :—அதற்குத்தான் தீர்க்கவிசாரம் என்கிற ஏணி கொண்டுவரச் சொன்னேன்!

ஸீதை :—ஒரு ஏணி போதுமா?

ராம:—அல்லவே, தீர்க்கம், விசாரம் என்று இரண்டல்லவா இப்பொழுது சேர்த்துக்கட்டி விட்டேன்.

லக்ஷ் :—இப்பொழுது தங்களுடைய தாத்பரியம் தேனல்ல, அமிருதமாகவே இருக்கட்டும்; அது சந்திரமண்டலத்திலல்லவா ஒளித்துக் கொண்டிருக்கிறது! அதை எட்டிப் பிடிக்க கணக்குப்படி எத்தனை ஏணி வேண்டுமென்கிறீர்கள்?

ராம :—என்? பூமிக்கும் சந்திரனுக்குமுள்ள தூரத்தை ஏணியின் உயரத்தால் வகுத்துக்கொள்ளேன்! தொகையை நமக்குப் படிக்கத் தெரியாவிட்டாலும், எழுதிப் பார்த்துக்கொள்ளலாம்!

லக்ஷ் :—வேறு சுருக்குவழியில்லையா?

ராம :—இருந்தால் நீதான் சொல்லேன், கேட்போம்.

லக்ஷ் :—இப்பொழுதுதான் தங்களிடம் கற்றுக்கொண்டேன். ஒரே ஏணி போதாதா?

அதிக நீளமாயிருந்தால் நறுக்கியெறிந்துவிடலாம். (ராமன், ஸீதை இருவரும் மூக்கு மேல் விரல் வைத்துச் சிரிக்கிறார்கள்)—வகுக்கும் எண், வகுபடும் எண் இரண்டும் சமமாயிருக்கக்கூடாதென்று எங்கே சொல்லியிருக்கிறது?

ஸீதை :—இந்த எணிக்கு என்ன பெயர்?

லக்ஷ் :—இதுதான் பர்யாப்த தீர்க்கவிசாயம் என்பது. அண்ணாதான் கணக்குக் குறையவுங்கூடாது, ஏறவுங்கூடாது என்றுவிட்டாரே!

ராமன் :—யானைப்பாகனுக்கு யானையினால் சாவு, பாம்பாட்டிக்குப் பாம்பினால் மரணம் என்பதுபோலவே, கணக்காளியைக் கணக்குப்பார்க்கிற வழக்கமே இப்பொழுது கவிழ்த்துவிட்டதைப் பார்த்துக்கொண்டீர்களா?

லக்ஷ் :—கணக்கிமுடிவில் கடைசி வார்த்தை நம்முடையதாக வேண்டுமென்கிற ஆசையும் ஒரு வழக்கந்தானல்லவா?

ஸீதை :—அது ஸ்திரீகளிடத்தில்தான் அதிகம்.

ராமன் :—அதுவும் புருஷர்கள் இடங்கொடுத்தமட்டில்தான்! (சூர்ப்பநகை தூரத்தில் தோன்றல்; பரபரப்புடன்) அதென்ன பாருங்கள்! தாளவிருக்ஷமா, வனகுஞ்சரமா, பர்வதசிசுவா? நம்மை நோக்கி அசைந்து வருகிறதுபோற் காண்கிறதே! ஸ்திரீவேஷம் போலுமிருக்கிறதே!

ராமன் :—(உற்றுநோக்கிய வண்ணம்) அதென்ன மனுஷ்யரூபமா மிருகரூபமாவென்று உனக்குத் தெரிகிறதா? லக்ஷ்மணா!

லக்ஷ் :—இது ராக்ஷஸ ரூபம்போலல்லவா தோன்றுகிறது! தாடகையின் நினைவூட்டவில்லையா? பாருங்கள்!

சூர்ப்பநகை :—(ஸமீபத்தில் வந்து) நீங்கள் யார்? இங்கு என்ன வேலை?

லக்ஷ் :—நீ யார்? உன்னைப் பார்த்தால் ஸ்திரீபோல் காண்கிறாய்! நீ எப்படி இந்தக் காட்டிற்குள் தனியே வந்தாய்?

சூர்ப்ப :—நீங்கள் இந்தக் காட்டிற்குப் புதியவர்களென்று தெரிகிறது. இதுதான் எங்களுடைய ராஜ்யம்; என் தமையனார்தான் லங்கேசுவரன் என்கிற, புவனேசுவரனான ராவணன்; இந்த பூமிக்கெல்லாம் அதிபதி. எனக்கேற்றவொரு பர்த்தாவை வரித்துக்கொண்டு இங்கேயே வஸித்து வரும்படி எனக்கு அவருடைய ஆக்ஞை.

லக்ஷ் :—உன் பர்த்தாவைவிட்டு நீ ஏன் தனியே புறப்பட்டாய்?

சூர்ப்ப :—எனக்கேற்ற பர்த்தாவை இன்றுதான் முதல் முதல் கண்டேன்—நீங்கள் யாரென்று முதலில் சொல்லிவிடுங்கள்.

லக்ஷ் :—நாங்கள் தசரதசக்ரவர்த்தியின் குமாரர்கள். இவர்தான் என் ஜ்யேஷ்டர்; அவர்தாம் இவருடைய தர்மபத்நீ; இங்கே விநோதார்த்தமாகச் சிறிது காலம் தங்கியிருப்போம்.

சூர்ப்ப :—அந்தப் பெண் எவ்விதத்திலும் இவருக்கேற்றவளாகக் காணவில்லையே! இவர் கறுப்பு, அவள் சிவப்பு; இவர் உயரம், அவள் குட்டை? இவர் இந்திரநீல சிலாவிக்ரஹம், அவள் தாமரைப்பூவின் உட்புறத்துக் காட்டிதழ்; அவர் கையசைந்தால் இவள் எட்டுக் குட்டிக்கரணம்போட்டுக்கொண்டு அங்கங்கே போய்க் கவிழவேண்டும். இப்பொழுது இங்கு நானே உயரம், பருமன், நிறம், ரூபம் எல்லாவற்றிலும் இவருக்கேற்றவளாய்ச் சமீபத்தில் நிற்கிறேன். என்னை இவர் மணந்துகொண்டாலென்னவாம்? அவளும் வேண்டுமானால் எனக்கு விளையாட்டுத் துணையாக மான்குட்டிபோல் என்னுடன்கூடவே வளரட்டும்.

(லக்ஷ்மணன் அண்ணாவின் முகத்தைப் பார்க்கிறான்; ஸீதை சிரிக்கிறாள்.)

சூர்ப்ப :—சீக்கிரம் பதில் சொல்லுங்கள்! வலுவிலே உங்களைத் தேடிவருகிற ராஜஸ்திரீயை அவமதிப்பீர்களா? என் தமையனாரிடமிருந்து இதுவிஷயம் பேசிமுடிக்கத் தக்க தூதர்களை வேண்டுமானாலும் வரவழைக்கமுடியும்;

ஆனால் அது அனுவசியமென்றுதான் தோன்று கிறது. இந்தப்பெண் ஏன் இப்படி அநாகரீக மாய்ச் சிரிக்கவேண்டும்? (ஸீதையை நோக்கிக் கோபமாய்த் திரும்புகிறாள்; ஸீதை ராமன் தோள்ப்புறம் மறைகிறாள்.)

லக்ஷ்:—இங்கு நீதான் வரம்புகடந்து பேசு கிறாய், பெண்ணே! விவாஹமாகியிருக்கிற தம் பதிகளுக்கெதிரிலேயே நின்றுகொண்டு, "என் னையும் மணந்துகொள்" என்று ஒரு பெண் ணும் நாக்கூசாமல் எங்கள் நாட்டில் சொல்ல மாட்டாள்; நாங்கள் இந்தக் காட்டிற்குப் புதி துதான்!

ராமன் :—உன் பெயரென்ன தங்காய்?

சூர்ப்ப :—சூர்ப்பநகை.

ராமன் :—ரொம்ப ரம்யமான பெயர்! ரூப மும் ஒத்திருக்கிறது! ஆனால் துரதிருஷ்டவச மாக நான் இரண்டாவது விவாஹம் செய்து கொள்வதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொண்டுவிட்டேன்; ஆதலால் நீ வேறு புரு ஷனைத் தேடிக்கொள்ள வேண்டியதுதான்.— இப்பொழுது உனக்குப் பசியாயிருந்தால் எங் களிடமிருக்கிற ஆகாரத்தைத் தருகிறோம்; போஜனம் செய்து போகலாம்.

சூர்ப்ப :—அப்படியானால் உமது தம்பியே போதும்! அவருக்கு இங்கு யாரும் பத்நி யைக் காணோம். ஆகையால் அவர் ஒன்றும் ஆக்ஷேபிக்கமுடியாதென்றே நினைக்கிறேன்.

லக்ஷ்:—அடா அசடே! நீ என்னை புஜி க்க நினைப்பது எவ்விதத்திலும் நடவாத காரி யம். நான் வெறும் வேலையாள்; இவருக்கு அடி மை; என்னை மணந்துகொண்டால் நீயுமொரு வேலைக்காரியாவாய்; அம்மாதிரி உன் பதவி யைக் குறைத்துக்கொள்வது உனக்கே ஸம்மத மாகாது; உன் தமையனுக்கும் ஸம்மதமாகா துதான்.

சூர்ப்ப :—ச்சா! இதற்குத்தானா நீர் யோ சிக்கிறீர்? இந்தக்ஷணம் தண்டகாரண்யத்தை உமக்கேயளித்து முடிசூட்டுவிக்க என்னால் முடியும். இதுவிஷயமாக என் தமையனு டைய முழுஸம்மதத்தையும் முன்னதாகவே பெற்றிருக்கிறேன். நீரும் அண்ணனுக்கு ஸமமான ராஜாவாகலாம்.

லக்ஷ் :—எப்படியானாலும் என் ஆயுள்முழு வதும் ஜ்யேஷ்டருக்கு அடிமையென்று வாக் குக் கொடுத்துவிட்டேன். என் மாதாவின் ஆக்ஞையும் அதுவே. ஆகையால் அடிமையாகி விட்ட நான் ஸிம்ஹாஸனத்துக்கு ஒருநாளும் அர்ஹனல்லன். மேலும், எனக்கும் தர்ம பத்நீ ஒருத்தி அயோத்தியில் இருக்கிறாள்; அவள் உனக்குமேல் பொல்லாதவள்; நாம் இங்கு பேசிக்கொண்டிருக்கிற காற்று அவள் காதில் பட்டாலும் என்னையும் கங்கையில் தள்ளித் தானும் அக்நியில் விழுந்துவிடுவாள்; அந்தப் பாபத்துக்கு நானாளாகமாட்டேன்; போய் வா.

சூர்ப்ப :—அதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்துவிடலாம்! காடாறு மாதம் வீடாறு மாதமாக நீர் இங்கு சிலகாலம் இப்போதிருப் பதுபோல் என்னுடன்கூடவே இருந்துவர லாம். உமக்குப் பதிலாக ஜ்யேஷ்டருக்குப் பணிவிடை செய்யத்தகுந்த பொறுக்கியெடு த்த மந்திரியோ, தந்திரியோ, ஸேனாதிபதி யோ, பலிஷ்டனோ—எங்கள் ராக்ஷஸகணங்க ளில் ஒருவனை அனுப்பிக்கொடுக்கிறேன். இது விஷயம் அயோத்திக்கு எட்டவே வேண்டிய தில்லை; நான் அங்கு வரவும் ஆசைப்பட வில்லை.

லக்ஷ் :—ஏன் வீண் வார்த்தை? பெண்ணே! யஜமானனுடைய ஸம்மதத்தைக் கேளாமல் அடிமையொன்றுஞ் செய்யமுடியாது; இனி நீ சுகமே போய்வாலாம்.

சூர்ப்ப :—(ராமனை நோக்கி) ஸரி, உம்மைத் தான் எனக்கு முதலில் பிடித்தது; இனி நீர் என்ன ஐயா சொல்லுகிறீர்? என்னுடைய இந்த ரூபம் உமக்கு ரம்யமாகத் தோற்றாவிட் டால் இதோ இந்தப் பெண்ணைப்போலவே வேண்டுமானாலும் ரூபமெடுத்துக்கொள்ளமுடி யும். இப்பொழுது எப்படியிருக்கிறேன் பா ருங்கள்! (ஸீதையைப்போலவே ரூபம் மாறி விடுகிறாள்; ராமன் பிரமித்து விழிக்கிறான்; ஆனால் கேசரோமங்களும், நகங்களும், பச்சை மாமிச ஆகாரத்தின் நாற்றமும் மாறாமலிருப் பதைக் காண்கிறான்.)

ஸீதை :—(சற்றுக் கோபமாய்) நாதா! இதென்ன பேய்க்கூத்து இங்கே?

சூர்ப்ப :—இவளை ஒரே கவளமாய் விழுங்கி விட்டால் என்னவாம்? (தன் யதார்த்த ரூபத்துடன் ஸீதையை நோக்கித் தாவுகிறாள்; ராமன் ஸீதையைத் தனக்குப் பின்புறம் தள்ளி, உடைவாளை எடுக்குமுன், லக்ஷ்மணன் ராமனுக்குமுன் தாவிநின்று தன் வாளால் சூர்ப்பநகையை அங்கச்சேதம் செய்துவிடுகிறான்.)

லக்ஷ் :—ஓடிப்போ, ராக்ஷஸி! இனி ராஜ ஸ்திரீகளிடமிருந்து நடந்துகொள்ளவேண்டிய முறையைக் கற்றுக்கொண்டுவா! (சூர்ப்பநகை ரத்தம் வடிய அலறிக்கொண்டே ஓடுகிறாள்; ஸீதை நடுங்குகிறாள்; வனசரங்களெல்லாம் சந்து பொந்துகளிலிருந்து வெளிக்கிளம்பி ஓட்டம் பிடிக்கின்றன.)

சூர்ப்ப :—(தூரத்தில் நின்று திரும்பிப்பார்த்து) அடா மானிடப்பதரே! ஸ்திரீகளிடம் நடந்துகொள்ளவேண்டிய முறையை நான் உனக்குக் கற்பிக்க சீக்கிரமே சிக்ஷகர்களை அனுப்புகிறேன்! (போய்விடுகிறாள்.)

லக்ஷ் :—அண்ணா! நாம் யுத்தஸந்நத்தர்களாகவேண்டியதுதான்!

ராமன் :—வனவாஸத்துக்குப் புறப்பட்ட அன்றைக்கே அப்படித்தான் புறப்பட்டோம் என்றே நினைக்கிறேன். ஆயுதப்பிரயோகமில்லாமல் அவள் அசையமாட்டாள் என்கிற நிலைமை வந்துவிட்டது!

ஸீதை :—என்னையே குறிப்பாகப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்; எனக்குக் கைகால் வெலவெலத்துப் போயிற்று; இத்தனை வருஷமாக இப்படிப்பட்ட அதிசயம் கண்டதேயில்லை; இந்தச் சாதிகளோடு வாக்குக் கொடுத்திருக்கவேகூடாது.

லக்ஷ் :—முதலில் அண்ணாதான் 'தங்காய்!' என்று உறவு கொண்டாட ஆரம்பித்தது; நான் 'பெண்ணே' என்று அதட்டித்தான் பேசினேன்; ஒன்றுமே பலிக்கவில்லை.

ஸீதை :—கண் மூடித்திறப்பதற்குள் ரூபம் மாறிவிட்டாளே, இதென்ன அதிசயம்!

லக்ஷ் :—மூன்றே முக்கால் நாழிகையளவுதான் புதிய ரூபம் நிற்கும்; பிறகு ஸ்வயரூபம் வந்தே தீரும்; அப்புறம் ஒரு மூன்றே முக்கால் நாழிகைக்குள் வேறு ரூபம் எடுக்கமுடியாது.

ஸீதை :—அதற்குள்ளாகத்தான் லோகத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிடுகிறாளே!

ராமன் :—நீ சிரித்ததும் அனாவசியந்தான்! (எல்லோரும் நிஷ்க்ரமணம்.)

ஸந்தி 4. தினம் 1.

காலம் : மாலை.

இடம் : பஞ்சவடீதீரம்.

பிரவேசம் : ராமன், லக்ஷ்மணன், ஸீதை. (முதலிருவரும் யுத்தவேஷத்துடன் நாற்புறமும் தூரதிருஷ்டியாய்ப் பார்த்தவண்ணம் நிற்றல்.)

ராமன் :—லக்ஷ்மணா! அதோ ஆயுதபாணிகளாய்ச் சில ராக்ஷஸர்கள் தோற்றுகின்றனர்! நீ இங்கேயே ஸீதைக்குக் காவலாயிரு; நான் அவர்களை எதிர்கொண்டு ஏற்கிறேன். (போய்விடுகிறான்.)

ஸீதை :—(முகத்தில் கலக்கந்தோன்ற) இன்றுகாலையில் வந்தவள் இவ்வளவு அநாகரிகமாய் நடந்துகொள்வாள் என்று எனக்குத் தெரியவில்லை; விளையாட்டாய் ஆரம்பித்தது விபரீதமாகும்போலிருக்கிறதே!

லக்ஷ் :—ராக்ஷஸஜாதிக்கு நாகரிகந் தெரியாது என்றல்ல; மனுஷ்யர்களென்றால் அவ்வளவு அலக்ஷ்யபுத்தி! பலத்தினால் ஸாதித்துக்கொள்ளமுடியாத காரியத்திலேதான் கபடத்தைக் கைப்பற்றுவார்கள். தன் காரியம் நிறைவேறுவதற்காக என்னையும் சேர்த்துக் கபடமார்க்கத்திற்கு இழுக்கப் பார்த்ததைத் தெரிந்துகொண்டீர்களல்லவா? நடந்துபோனதைப்பற்றிச் சிந்தையைத் தாங்கள் ஒருபோதும் ஏற்கலாகாது!

ஸீதை :—பர்த்தா அவர்களுடைய ஜயத்தை நாமிருவரும் பிரார்த்திப்போம்!

லக்ஷ் :—அன்று விராதன் தோளில் நாங்களிருவரும் சற்று வாஹனமேறிச் சென்றபொழுது தங்களுடைய கூக்குரலைக் கேட்டே நாங்கள் கீழே குதித்தோம்—அண்ணாவின் ரூபம்

அதோ தெரிகிறது பாருங்கள்! கஜயூதத்தின் எதிரில் ஸிம்ஹம்போல் ராக்ஷஸர்களுக்கு எதிரில் நிற்கிறார்; இப்படி இந்த மேட்டில் நின்று பாருங்கள். ஓடுகிற ராக்ஷஸர்களைத் துரத்துகிற பாணங்களின் சாரியைப் பாருங்கள், மேகங்களைத் துரத்தும் கொக்குகளின் சாரிபோல்.

ஸீதை :—ஓடுகிறவர்களும் ஒவ்வொருவராய் விழுந்துகொண்டிருக்கின்றனரே, இல்லையா?

லக்ஷ் :—விழுந்தவர் எழவுமில்லை, அல்லவா? மங்களமாகுக! தங்கள் கவலை நீங்கிற்று! எங்களுக்கு இது ஸஹஜம்.

ஸீதை :—வனவாஸத்தில் ஒருவிதக் கவலை, ராஜ்யத்திலிருந்தால் வேறுவிதக் கவலை; மொத்தத்தில் ஸுகதுக்கம் எங்கும் கலந்துதான் கிடக்கிறது, மணலில் மிதிபட்ட உப்புப்போல்.—அதோ நாதன் வருகிறார்! (ராமன் வருகிறான்) நாத! (ராமனுக்கு விசிறுகிறாள்) இந்தக் கலஹம் இதோடு முடிந்ததா? (வானத்தில் ஸூர்யனை மறைக்கும் தூளியும், பேரிடிபோன்ற முழக்கமும் கோடை மழைபோன்ற படபடத்தக் குதிரைக் குளம்புகளின் சப்தமும், நடுக்காட்டில் ஸமுத்திரத்தின் ஞாபகத்தை வரவழைக்கின்றன.)

ராமன் :—(ப்ரஜ்வலமான முகத்துடன்) லக்ஷ்மண! இன்றைக்கு நமக்கு சூர்ப்பநகை உபகாரஞ் செய்யத்தான் தோன்றினாள்; இன்றையதினம் ஸுதினம்; ஸந்தேஹமில்லை. இந்த வனத்திலுள்ள தபஸ்விகளுக்கும் ஆத்மநிஷ்டர்களான ஸாதுக்களுக்கும் நித்யகண்டகர்களாயிருந்த இந்த ராக்ஷஸர்களை அடியோடு அழிப்பதற்கு நமக்கு அவகாசம் ஏற்படுத்தி விட்டாளல்லவா? நானும் ஸாதுக்களுடைய வெகுநாளையப் பிரார்த்தனையை நிறைவேற்ற எப்பொழுது காலம் வருமென்று காத்திருந்தேன். என்னுடைய கோதண்டமும் பர்த்தாவின் முகங்காணாத பத்னீபோல் நெடுநாளாய் அதோமுகமாய்க் கிடக்கிறது; என் கைவிரல்களும் மஹாஸமுத்திர மத்தியில் தீர்க்கப்பிரயாணத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் மஹாசிற்பியின் விரல்கள்போல் ஆயுதங்களின் பரிசயத்தை எப்பொழுது திரும்பிப் பெறுவோம் என்று துடிக்கின்றன! ஆகையால் உனக்கு வேறு அவகாசம் கொடுக்கிறேன்; நீயும் என்னைப்போன்ற நிலைமையில்தான் இருக்கிறாய். (சற்றுச் சிரிப்புத்தோன்ற) என்னைவிட ஸாஹஸப்பிரியன் என்பதையும் உணர்ந்துதான் சொல்லுகிறேன்; இந்தத் தடவைமட்டும் எனக்கு விட்டுவிடு! இந்தக் கீர்த்தியை நானே முழுவதும் ஏகதேசமாய் ஸ்வீகரித்துக் கொள்வதாகவும் தோன்றிவிட்டது! அப்படியேதான் இருக்கட்டுமே! நீ மட்டும் ஸீதையை நம் குஹைக்கு அழைத்துக்கொண்டு போய்விடு; பிலத் துவாரத்தைவிட்டு வராதே! போய் வருகிறேன். (போய்விடுகிறான்.)

லக்ஷ் :—'நைகஸ் ஸ்வாது புஞ்ஜீத' (இனிய பண்டத்தை ஒருவனாகவே புஜிக்கலாகாது) என்கிற சுருதிவசனத்தைத் தங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். (ராமன் மறைந்தபிறகு) சுருதிப்பிரமாணத்தில் திடபக்தியுள்ளவராயிற்றே என்று ஒரு கற்பனை செய்து பார்த்தேன்! இங்கு சுருதியென்றால் வேதமல்ல, பலர் சொல்லக்கேட்டது என்றுதான் பொருள்; நான் சொல்வது அவர் காதுக்கு எட்டினால்தானே! அவர்தான் மேகத்தைக் கண்டுவிட்ட மயிலின் ஆவேசத்துடன் தன் பாணத்துக்குத் தானே உபமானமாய்ப் பறக்கிறாரே! நாமும் அதே வேகத்துடன் பிலத்துக்குப் போகவேண்டியதுதான். யுத்தத்தில் மட்டும் ரங்கநாதனுடைய* கட்டளை சுருதிக்கு மேற்பட்ட பிரமாணம் என்பதைத் தேவிக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (இருவரும் வேகமாய்ப் போகிறார்கள்.)

(ஸ்தலம் மட்டும் மாறுபடுகிறது; பஞ்சவடி பிலத்துவாரம்—ஸீதை பிலத்துள் நுழைகிறாள்; லக்ஷ்மணன் துவாரத்தில் தனுஷ்பாணியாய் நிற்கிறான்.)

ஸீதை :—இப்பொழுது யுத்தாங்கம் முன்போல் இங்கிருந்து கண்ணுக்கு எட்டாதோ?

லக்ஷ் :—எட்டக்கூடாதென்றுதானே தங்களை இங்கு அழைத்து வந்தது. நம் கண்ணுக்கு ஒன்று பட்டால் அதன் கண்ணுக்கு நாமும் படுவோம் அல்லவா? இந்த துவாரத்தை மறைத்துக்கொண்டிருக்கும் விருக்ஷங்களின்மேல் ஏறினால் ஏதாவது கொஞ்சந் தெரியலாம். ஆனால் நான் இங்கு அந்தக் காரியம் செய்தல் உத்தரவை மீறுவதாகும். ஆனால்,

* ரங்கநாதன்—களத்தலைவன்.

அதோ சற்று உற்றுக் கேளுங்கள்! கலைக்கப்பட்ட தேனீக்கூட்டத்தின் சப்தம்போன்ற சப்தந் தான் ராக்ஷஸஸேனை. அதற்குமேல் இடிபோல் கேட்கிறதே, அதுதான் அண்ணாவின் குணத்வனி. சண்டமாருதம்போல் சீறிவிழுவதுதான் பார்த்தாவின் பாணங்கள்; ஒன்று ஓய்வதற்குள் பத்து கிளம்புகிறது, காது கேட்கிறதா? அண்ணாவினுடைய லீலையை நீங்கள் பார்த்தீர்களானால், உங்களுக்குமே ஸ்திரீ ஜன்மம் மறந்து யுத்த ஆவேசம் தோன்றிவிடும். அதோ மின்னல்போல் தெரிகிறதெல்லாம் மின்னலல்ல; சப்தத்துடன் மின்னுவது சத்ருக்களுடைய ஆயுதங்களோடு ராமபாணங்கள் மோதும் கண்டனம்; நிச்சப்தமாய் மின்னுவது பாணங்களின் ஜால ஸஞ்சாரம்.

ஸீதை :—சுற்றிச்சுற்றி வட்டமிடுகிறவைகூட பாணங்கள் தானா? சற்றுமுன் நேராகப் பறந்தனவே!

லக்ஷ் :—பாணங்களும் சில சமயம் ஒரு வட்டம் இட்டுக்கொண்டு நாதனிடம் திரும்பிவந்து சேருவதுமுண்டு. அவைகளெல்லாம் குருவின் உபதேசமும் மந்திரஸித்தியுமான சஸ்திரங்கள். பெரியோர்களுடைய பிரஸாதத்தினால் கிடைத்த வேறு சில ஆயுதங்கள் அநேகமாய் இரண்டாந்தரம் பிரயோகிக்க இடந்தராதவை. ஆனால், அதோ வட்டமிட்டுக்கொண்டே இருப்பவை பாணங்களல்ல; பிரேத மாம்ஸ விருந்துக்கு வந்திருக்கும் அதிதிகளான பக்ஷியினங்கள்; இவை இருண்ட கூட்டமாய் வட்டமிடும்; பாணங்களின் பிரகாசம் இவைகளுக்குக் கிடையாது; இடையிடையே ஒன்றொன்று தொப்பென்று கீழே விழுந்து கிடைத்த ஆகாரத்தைப் பொறுக்கிக்கொண்டு கிளம்புவதைப் பாருங்கள்! யுத்தம் நீடித்தால் இவைகளுடைய கூட்டமும் அதிகமாகும். சற்று இருட்ட ஆரம்பித்தால், நரிகள், ஓநாய், செந்நாய், காட்டுப்பூனை, கழுதைக்குறத்தி இவைகளின் குரல்களும் ஒவ்வொன்றாய்க் கிளம்பும்.

ஸீதை :—ஜயாபஜயத்தை நாம் இங்கிருந்தபடி அறிய முடியுமா?

லக்ஷ் :—அண்ணாவின் தனுஷ்டங்காரத்தை மற்றெல்லா சப்தங்களின் மத்தியிலும் என் காது பிரித்தெடுத்துக் கொள்ளும்; ஒருதரம் பழகிவிட்டால், பிறகு மறக்காது. சுத்த தனி சுருதியில்* நீடித்து நின்று மற்ற எல்லா சப்தங்களையும் துளைத்துக் கொண்டு காதில்விழும். இந்த சப்தம் நம் காதில் விழுந்து கொண்டிருக்கிறவரையில் அண்ணாவுக்கு ஜயந் தான்; எல்லா சப்தங்களும் ஓய்ந்துபோனால், சத்துருக்கள் எல்லாம் மடிந்துபோனார்களென்றோ ஓடிப்போய் விட்டார்களென்றோ சரண்புகுந்து விட்டார்களென்றோ அர்த்தம். அண்ணாவுக்கு அபஜயம் ஒருநாளுங் கிடையாதென்று நான் தங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா?

ஸீதை :—இருந்தாலும் பிரத்யக்ஷமாய் வரும்போது ஸ்திரீ ஹ்ருதயம் சற்று சஞ்சலப்படுகிறது; சப்தம் அநேகமாய் ஓய்ந்து விட்டதுபோலிருக்கிறதே, நாதன் சீக்கிரம் வந்துவிடுவாரா?

லக்ஷ் :—அதற்கென்ன ஸந்தேஹம்?

ஸீதை :—(மறுபடியும் உற்றுக் கேட்டுக்கொண்டே) இதென்ன விபரீதம்! மறுபடியும் ராக்ஷஸர்களுடைய கடோரக்குரல்கள் எழும்புகிறாப் போலிருக்கிறதே! ஐயோ பாவம்! காலையில் நான் ஏன் சிரித்தேன்? சிரித்தவரெல்லாம் அழவேண்டியதுதானே? ஒரு பெரிய ஸேனையை ஒருவன் தனியாய் எதிர்க்க முடியுமா? எவ்வளவு நேரந் தான் முடியும்? என் பிதா எனக்கேன் அஸ்திரவித்தை கற்பித்தாரில்லை? அப்படியானால், நானும் என் பார்த்தாவுக்குத் துணையாய் நிற்பேனே! இப்பொழுது உன்னைக் கூடவல்லவா அநீசுவரனாகச் செய்துவிட்டேன்!

லக்ஷ் :—நீங்கள் கொஞ்சங்கூட ஸந்தேஹப்பட வேண்டாம். ஒருக்கால் பழைய ஸைநியம் மாண்டபிறகு, வேறு ஸேனாதிபதி புதிய ஸைநியத்துடன் பிரவேசிக்கலாம், ஆ, அதோ கேட்டீர்களா, அண்ணாவின் குணத்வனி! என்ன கம்பீரமாய் அறைகூவி யழைக்கிறது! இது கோதண்ட தனுஸ் அல்ல, அகஸ்திய பகவான் அளித்த தனுஸ் மாதிரி கேட்கிறது;

* இங்கு ஸங்கீத சுருதியைக் கொள்ளவும்.

அன்றைக்கு லீலையாக அண்ணா ஒரு ஸால விருக்ஷத்தைப் பேதித்து தூமகேதுப்போல் பறக்கச் செய்து காட்டினார். அதே சப்தந் தான் இதோ கேட்கிறதும்! தெரிகிறதா?

ஸீதை :—(நீருண்ட மேகங்களுக்கிடையே தோன்றும் சந்திரன்போல் பாஷ்பங்களுக் கிடையே தோன்றும் முகத்தினளாய்) ஆம், லக்ஷ்மண! நீ சொல்வதெல்லாம் சொல்லிக் கொடுத்தாப்போல் அப்படி யப்படியே ஸம்ப விக்கிறது. இன்னும் எந்நேரமாகுமோ தெரிய வில்லையே!

லக்ஷ் :—ஸூர்யாஸ்தமனத்துக்கு இன்னும் இரண்டு நாழிகைப் பொழுது இருக்கிறது. அதற்குள் ஜயவேஷத்துடன் பர்த்தாவை நிச்சயம் காண்பீர்கள்.

ஸீதை :—இதற்கும் அப்புறம் இன்னொரு ஸேனை கிளம்பினால்?

லக்ஷ் :—இரவில் தர்ம யுத்த ஸாம்பிரதாய மில்லை; அப்படி நேர்ந்தாலும் அண்ணாவுக்கு ஜ்யோதிர் வித்தை தெரியும். வேண்டிய திக்கில் பகல்போன்ற பிரகாசத்தை இரவில் உண்டாக்கும் அஸ்திரங்களை அப்யஸித்திருக்கிறார்.

ஸீதை :—ஒரு ஸேனை என்பது ஆயிரம் பேரிருக்குமா?

லக்ஷ் :—ஆயிரமானாலென்ன, பத்தாயிர மானாலென்ன? ஸங்க்யை கண்டு மயங்குகிற வர்கள் குழந்தைகளல்லவா? நெருப்புப்பொறி விழுகிற இடத்தில் பிடி வைக்கோலுக்கும் போர் வைக்கோலுக்கும் என்ன வித்தியாசம்? இடிவிழுகிற இடத்தில் ஒருவன் நின்றாலென்ன, ஆயிரம்பேர் கைகோத்து நின்றாலென்ன? ஸிம்ஹத்துக்கு ஒரு யானையைக் கொல்வதிலும் ஆயிரம் யானைக் கூட்டத்தைக் கொல்வது அதிக சுலபமல்லவா? தரையில் கால் வைத்து எழும்பாமலே யானைகளின் கண்ணிற்படாமல் முதுகுமுதுகாய் அடி வைத்து மஸ்தங்களைப் பிளந்துகொண்டே போகாதா? தங்கள் பிதாவின் தோட்டங்களில் பாக்குமரம் ஏறுகிறவனைப் பார்த்திருக்கிறீர்களா? ஆயிரம் நடுவிலுள்ள மரங்களின் தலைகளையெல்லாம் தாவித் தாவித் தடவிக்கொண்டே போகவில்லையா? இரண்டே மரம் (பார்க்கப்போனால் அதுவுமில்லை, இரண்டையுஞ் சேர்த்து ஒரேமரம்) ஏறி இறங்கிவிட்டு ஆயிரம் மரத்துக் கூலியும் வாங்கிவிடுகிறானல்லவா?

ஸீதை :—(தன்னையும் மறந்து சிரித்துக் கொள்கிறாள்.) என்ன இருந்தாலும், கை சளைத்துப்போகாதா?

லக்ஷ் :—அதுதான் குருநாதருடைய மஹாஸ யாநுக்ரஹம்! தங்களுக்கு இதற்குமேல் நான் சொல்லக்கூடாது, உபதேச மந்திரங்களைச் சொல்லாவிட்டாலும் நான் கண்ணால் கண்டிருப்பதைத் தங்களுக்குத் தைரியமளிக்கவே சொல்லுகிறேன். உதட்டை மூடிக்கொண்டு புருவமத்தி நோக்காய் நிமிர்ந்து நின்று பிராணன்களை ஊர்த்துவமாக்கி மயிரிழையோட்டத்தில் நிறுத்தினானால், நாள் மூன்றானாலும் அன்ன ஆகாரமில்லாமல் கை விளையாடிக் கொண்டேயிருக்கும்; நாங்களிருவரும் சேர்ந்தே கற்றதுதான் இந்த வித்தை.

ஸீதை :—ஸ்திரீஜன்மம் ரொம்ப துச்சம், லக்ஷ்மண! பேச்சோடு ஸரி; வாதுக்கு நிற்கத் தெரியும்; ஆசைக்குக் குறைவில்லை; ஆபத்து வந்தால், ஓட்டம்! ஸ்திரீக்குப் புருஷனை தெய்வமென்று விதித்திருப்பது முற்றிலும் யுக்தமே!—இந்த யுத்தத்தை நாம் தடுத்திருக்கவே முடியாதோ?

லக்ஷ் :—இது விதியின் போக்கென்றுதான் தோன்றுகிறது.

ஸீதை :—இந்த ராக்ஷஸ ஸைநியங்களுக்குப் பர்த்தாவின்மேல் என்ன த்வேஷம்?

லக்ஷ் :—ரிஷிகள்மேல் மாத்திரம் என்ன த்வேஷமாம்? த்வேஷமேது? அவர்கள் ஸ்வ பாவமே அதுதான். யஜமானனுடைய அன்னத்தைப் புஜித்தவர் அவன் இட்ட வேலையைச் செய்யவேண்டாமா?

ஸீதை :—அதோ, பக்ஷிக்கூட்டம் அதிகமாகிறதென்று தோன்றவில்லையா?

லக்ஷ் :—யுத்தம் நிறுத்தப்பட்டிருந்தபொழுது ஸாவகாசமாய் உட்கார்ந்து போஜனம் செய்துகொண்டிருந்த பக்ஷிகள் புதிய ஸேனை

புகுந்ததும் தங்கள் காரியம் தடைபடவே உபய ரக்ஷிளம்பிவிட்டன. அவைகளுடைய கோபமான சீத்கார த்வனியைக் கேளுங்கள்!

ஸீதை :—அதோ ஆகாசத்தில் உருக்கிவிட்ட ஸ்வர்ணரேகைபோல் தீர்க்கமாய் ஜ்வலித்துக்கொண்டும், முகத்திலிருந்து ரக்தபிந்துக்கள்போல் நெருப்புப்பொறிகளைக் கக்கிக்கொண்டும் கிளம்புகிறதே, அதென்ன, சீக்கிரம் பார்த்துச்சொல்! வெகு விநோதமாயிருக்கிறதே அது! என் கிலேசத்தைக்கூடவல்லவா மறக்கச்செய்கிறது!

லக்ஷ் :—ஆம், தாங்கள் சொல்வது ஸத்யத்திலும் ஸத்யம். அதுதான் பர்த்தாவின் ஐந்திராஸ்திரம்; பூகர்பத்தில் பூகர்ப்பத்திலிருந்து வெடித்துவந்த அங்காரக ரூபமே அது! யாரோ ஒரு மஹாரதன்மேலேதான் அது பிரயோகிக்கப்பட்டிருக்கவேண்டும்! இதோடு யுத்தம் முடிந்தது! ஜயலக்ஷ்மி பர்த்தாவின் பாதங்களில் நமஸ்கரித்துவிட்டாள்! (தூரத்தில் மஹர்ஷிகளுடைய சாந்திபடன கோஷமும் தேவலோக வாத்ய முழக்கமும் கேட்கிறது; ஆகாசத்தில் பக்ஷிகளின் கூட்டம் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைகிறது; ஸந்தியாகால மேகங்கள் ஸூர்யனுடைய கண்டத்தில் ரக்த புஷ்பஹாரங்கள்போல் சூழ்ந்து மிதக்கின்றன).

ஸீதை :—(குதூஹலம் தோன்ற) வேதகோஷம்போல் ஸுஸ்வரமாய்க் கேட்கிறதே! ரிஷிகளுடைய கண்டத்வனிபோலிருக்கிறதே! நீ சிரஞ்ஜீவியாயிருப்பாய். லக்ஷ்மண! நீ சொல்லுகிறதெல்லாம் அப்படியப்படியே ஸம்பவிக்கின்றன—இனி நாதன் வருகிற நேரந் தானே?

லக்ஷ் :—அதோதான் வருகிறாரே, குஞ்சர சிசுக்களுக்கிடையே யூதப கஜம்போல்! நமக்கினி இங்கென்னவேலை? புறப்படுங்கள். (இருவரும் குஹையைவிட்டுப் புறப்பட்டு வேகமாய்ச் செல்லுகிறார்கள்.)

(ஸ்தலம் மட்டும் மாறுதல்; பர்ணசாலையின் முன்வாசலில் ரிஷிகள், ரிஷிகுமாரர்களுடைய வேதகோஷத்துடன் வாகைமாலை சூடி ராமன் பிரவேசம்.)

ஸீதை :—(ஆனந்தபாஷ்பம் சொரிய) நாத! (ராமனுடைய மார்பில் முகத்தை மறைத்துக் கொண்டு காயம்பட்ட தோள்களில் தெரியாமல் வைத்துவிட்ட கையைச் சரேலென்று தாழ்த்தி முதுகுப்புறம் சேர்க்கிறாள்; பிறகுச் சற்று வெட்கி ஒதுங்கி நிற்கிறாள்; பிறகு ரிஷிகளை நோக்கி நமஸ்கரித்துவிட்டு ராமனைச் சார்ந்து நிற்கிறாள்.)

ரிஷிகள் :—தீர்க்கஸுமங்கலீ பவ! ஜயவிஜயீபவ!

ராமன் :—பிரியே! (ஸீதையின் முகத்தைத் தொட்டு) பயம்வேண்டாம். ஸுதினம் அஸ்து! ஸ்வஸ்தி பவது! குழந்தாய் லக்ஷ்மண! நீங்களிருவரும் ஸமீபத்திலிருந்து பார்க்கமாட்டவில்லையே என்றுகூட அடிக்கடி விசனம் தோன்றிற்று. நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களென்று தெரிந்தால், எனக்கு உத்ஸாஹம் அதிகமாகும். ஆனால், அது ஸாஹஸத்திலும் அதிக ஸாஹஸம்—மூர்க்க ஸாஹஸமாகும்—அது அனுவசியம்; ஆகையால், அது கூடாதுதான்.

ஸீதை :—(ராமன் காதில்) அன்றைக்கு ஐம்புலங்களைத் தொடக்கூசின கை இன்றைக்குத் தங்களுடைய தோளில் ஏற்பட்டிருக்கிற க்ஷதங்களைத் தெரியாமல் தொட்டுவிட்டதை மன்னிக்கவேண்டும், நாத!

ராமன் :—(ரஹஸ்யமாய்) உன் விரல் பட்டால் க்ஷதங்களுக்கு அமிருதாஞ்சனமிட்டது போலல்லவா?

லக்ஷ்மணன் :—ஏன் வீணாய் துக்கப்படுகிறீர்கள், அண்ணா! (ஸீதையின் பக்கம் நோக்கினவனாய்) தங்களுடைய லீலா விபூதிகளையெல்லாம் ஆகாசத்தில் அவ்வப்பொழுது தோன்றிய லக்ஷணங்களைக்கொண்டே ஊஹமாய்த் தேவிக்குத் தெரிவித்துக் கொண்டேயிருந்தேன். அந்த ஆசுவாஸம்கூட நான் செய்திராவிட்டால், தேவியவர்களுக்குக் காலத்தின் பாரம் இன்னும் கடுமையாகவே தோன்றியிருக்கும். அங்கே தங்களுக்கொரு ஜயம் கிடைத்ததுபோல், இங்கேயும் எனக்கொரு ஜயம் ஏற்பட்டது.

ராமன் :—(ஆவலுடன்) அதென்ன?

லக்ஷ் :—என்னை யுத்தத்துக்கனுப்பாமல் நிறுத்திவைத்ததற்காகத் தங்கள்மேல் தோன்றிய அசூயை என்கிற ராக்ஷஸனை என் ஹ்ருதயபூமியில் ஸம்ஹாரம் செய்தேன். யாருடைய ஜயம் பெரிதென்று இங்கு கூடியிருக்கும் மஹான்கள் சொல்லட்டும்.

ராமன் :—(லக்ஷ்மணனைத் தட்டிக்கொடுத்து) ஸந்தேஹமில்லாமல் நானே ஒப்புக்கொள்கிறேன்; உன்னுடைய ஜயமே துஷ்கரம், லக்ஷ்மண!

ரிஷிகள் :—ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ஜய ஜயராம், ஸீதாராம், ஜயஜயராம்! ஜயவிஜயீபவ. (ரிஷிக்கூட்டம் நிஷ்க்ரமணம்)

லக்ஷ் :—(ராமனுக்கு மட்டும், தனிமையில்) ஸைநியங்களின் ஸங்கியை என்ன இருக்கலாம்?

ராமன் :—பத்தாயிரத்துக்குமேல் இருக்கலாம். நான் திரும்பிவந்தது சிறிது தாமதந்தானே?

லக்ஷ் :—தங்களுடைய பாணங்களின் ஸங்கியைக்கொண்டு பத்தாயிரத்துக்குமேலிருக்கலாமென்றுதான் நானும் ஊஹித்தேன். தாங்கள் திரும்பிவந்தது தங்களை உத்தேசித்துமே சீக்கிரந்தான், தாமதமில்லை; நான் போயிருந்தால் சூர்யாஸ்தமனத்துக்குள் ஜயம் காண்பது ஸந்தேஹமாகலாம். இந்த ஸங்கியைக் கணக்கெல்லாம் தேவியின் காதுக்கு எட்டவேண்டாம்.

ராமன் :—ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனம் செய்வோம்.

லக்ஷ் :—தங்களுடைய விரணங்களுக்கு முதலில் அஞ்சனமிடுகிறேன். (அம்புராவிலிருந்து அஞ்சனமெடுக்கிறான்.)

ராமன் :—அதிருக்கட்டும், நான் புறப்படும்போது என்னவோ சுருதிவாக்கியமென்று காதில் பட்டதே அதென்ன? உன்னை மறுபடி கேட்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டேயிருந்தேன்.

லக்ஷ் :—அது கேவலம் அற்ப கற்பனா சாதுர்யம், அண்ணா! அது இப்போது நமக்குத் தேவையில்லை.

ஸீதை :—சுருதி என்கிற பதத்தில் சிலேஷைப்படப் பிரயோகம் என்று சொன்னாற் போகிறது!

ராமன் :—ச்ச, சிலேஷையா? உனக்கு வேறு வேலையென்ன? (எல்லோரும் நிஷ்க்ரமணம்.)

ஸந்தி 4 ஸம்பூர்ணம்.

வாழ்த்துப்பா.

(ஸ்ரீமதி. டி. எஸ். ஜானகி அம்மாள்.)

வாழிய உலகே! வாழிய உலகே!
வாழிய பெரிதே! வாழிய பெரிதே!
செல்வங் கூறும் சில்ப ஸ்ரீயே!

எனக்குத் தாயாய் இன்மொழி கூறியும்
சோதரியாகச் சொற்பல சொல்லியும்
தோழி யாப்புதுக் கற்பனை கூறியும்
கண்ணேயாகக் கவின்வழி காட்டியும்
குருவேயாகக் கொள்கை காட்டியும்
தந்தை போன்றனுஷ் டானஞ் சாற்றியும்,
முந்திறைபோல முறைமை செய்யும்
சீர்தமிழ் சில்பஸ்ரீயே!
வாழி நீயே! வாழி நீயே!

உலகுக் கொருகதிர் ஒப்ப உலவிக்
குலவுஞ் சீரார் சில்பஸ்ரீயே!
வாழிய பெரிதே! வாழிய பெரிதே!
நன்மதி யூட்டி நன்னெறி காட்டும்
கொங்கார் சில்பஸ்ரீயே!
குவலயஞ் செழிக்கக் கூர்ந்துவாழி!

செழிக்கச் சிறந்து சீரிதின் வாழி!
இரண்டாம் வயதை இனிது பெற்றாய்!
ஆயுமிவ் வாண்டும்,
கவிகல் பனைமுதல் அனைத்துமருளி
வாழிய நீயே! வாழிய நீயே!

கன்னலோ பாகோ கண்டோ சீனியோ
முக்கனி ரசமோ மொழியமு தோவென
இனிக்குங் கவிதாவிமர்ச மேந்தி
இன்புற வாழ்க! இறைவ னருளால்,
புத்தமு தனையாய், சில்ப ஸ்ரீயே!
வாழி வாழிநீ வளம்பல பெற்றே!

கீதப் பகுதி

தியாகராஜ ஸ்வாமிகள் *

(கா. வே. ராமச்சந்திரன்.)

தியாகையரின் பிதாவான ராமப்ரஹ்மம் தஞ்சாவூர் அரண்மனை ராமாயண சாஸ்திரிகள். இவரிடமிருந்து ஐயரவர்கள் சிறுவயதிலேயே ராமபக்தியைப் பித்ரார்ஜிதமாகப் பெற்றார். தியாகையரின் தாயார் அக்காலத்து வைணிகர்களுள் பிரசித்தரான வீணை காளஹஸ்தி ஐயரின் மகள். தன் தாயாரிடமிருந்து ஐயரவர்கள் அரிய சங்கீத ஞானத்தையும் அபூர்வமான கானஸித்திகளையும் பெற்றார். ஐயரவர்களுக்கு கானவித்தையைப் போதித்தவர் அக்காலத்து காயகர்களுள் முக்கியரான வேங்கடஸுப்பையர். இந்த காரணத்தால் ஐயரவர்களது பாட்டு கிரமமாய் வளர்ந்து, விசித்திரமாய் மலர்ந்து, நாடெங்கும் நறுமணம் வீசலாயிற்று.

ஆதிகவியான வால்மீகி பகவானின் ராமசரிதம் தேசகால வித்தியாசமின்றி மஹாகவிகள் மனதையெல்லாம் கவர்ந்தது என்பதற்கு, நமது தேசபாஷைகள் அன்றியும், ஜாவா, ஸயாம், கம்போடியா முதலிய தேசங்களின் பாஷைகளிலும், வேறு உலகபாஷைகள் பலவற்றிலுமுள்ள ராமாயணங்களே சான்றாவன. தமிழ்க் காவியங்களுள் சிறந்ததான கம்பரது ராமாவதாரமும், ஹிந்தியில் சிறந்ததான துளஸீதாஸரது ராமசரிதமானஸமும், வால்மீகி பகவானது ராமகதையை ஆதாரமாகக் கொண்டவைகளே. ஆனால், மஹாகவிகளான கம்பரும் துளஸீதாஸரும் கவிகளே அன்றி காயகர்களல்லர். இவ்விருவருக்கும் சமானமான ராமபக்தியுடைய தியாகையரோ, கவியும் காயகருமான வாக்கேயகாரர். ஐயரவர்கள் இரண்டு விதமான இசைச்செல்வத்துக்கு அதிகாரி ஆவர். ஒன்று, தொன்றுதொட்டு குருசிஷ்ய பரம்பரையாக வந்த புராதனகானம்; இன்னொன்று, அதுவரையில் கேட்கப்படாததும் ஐயரவர்கள் மனதில் நூதனமாய் ஸ்புரித்து மஞ்சுளமாய் அவதரித்ததுமான ஒரு புதிய கானம். ஐரோப்பிய காயகர்களுள் 'பீடோவ'னது விசித்ரமான கற்பனைசக்தியும், 'வாக்ந'ரது ரசனையையும் ஐயரவர்கள் ஒருங்கே கொண்டதால், மேல்நாட்டு வாக்கேயகாரர்களுள்ளும், இவரை ஒத்தவரைக் காணோம். ராமகதையை நாடகப்படுத்தினவர் பவபூதி; ராமகதைக்கு இசை உதவியவர்கள் குசலவர்கள். ஆயினும்

*29—1—1940ல் திருச்சி அகில இந்திய ரேடியோவில் பேசப்பட்டு அனுமதியுடன் அச்சிடப்பட்டது.

பவபூதி தம் நாடகத்தில் கையாண்ட கானத்தின்ஸ்வரூபத்தையாவது, குசலவர்கள் உதவிய கானத்தின் ஸ்வரூபத்தையாவது நாம் அறியோம். ஆனால், பழைய கானத்துக்கு அதிகாரியும், புதிய கானத்தை சிருஷ்டி செய்தவருமான ஐயரவர்கள், தாமே பவபூதியாயிருந்து ராம கதையை நாடகப்படுத்தியும், குசலவர்களாயிருந்து கானத்தை உதவியும், அக்குறைகளையெல்லாம் தீர்த்துள்ளார்கள். 'யதிவிராமங்களுடன்கூடி, நவரஸங்கள் நிரம்பி, வேதஸாரமாயுள்ள ராமகதையை, ஸுஸ்வரங்களாகப் பாடும் தீரன் எவனோ?' என்று ஐயரவர்கள் 'ஸொகஸுகா ம்ருதங்க தாளமு' என்ற கீர்த்தனத்தில் கேட்டுள்ளார். அந்த தீரன் ஐயரவர்களைத் தவிர வேறு யார்?

ராமப்ரஹ்மத்தின் மகனாய் அவதரித்த இந்த தீரர், வேறு ஒருவருடனும் சேராது தனிப்பிரகிருதியாகவே இருந்தார் என்பதில் என்ன ஆச்சரியம்? ஐயரவர்களும் ச்யாமா சாஸ்திரிகளும், முத்துஸ்வாமி தீக்ஷிதரும் ஸமகாலத்தவரே. இம் மும்மூர்த்திகளும் ஒரு குருவிடமே பாடம் கேட்டிருத்தலும் கூடும். புராதனமாய் வந்துள்ள தாக்ஷிணாத்ய கானம், இம்மூவருக்கும் பொதுவானதொரு தனமே. அதன் அதிகாரிகளும் இம்மூவரே. இவர்கள் காலத்துக்குச் சிறிது முன்னர் ஒரு ஆச்சரியமான கானவிகாஸம் தென்னாட்டில் தோன்றியது. அதன் பயனாகத் தோன்றிய மஹா புருஷர்களே புரந்தரதாஸரும் க்ஷேத்ரஜ்ஞரும்; கர்நாடக பத்ததியில் முதல் வர்ணத்தை சிருஷ்டி செய்த ஆதியப்பையரும்; முதல் ஸ்வரஜதியை சிருஷ்டி செய்த வீரபத்ர ஐயரும் வாழ்ந்தது அக்காலத்தே. இன்னும் முத்துவேங்கட மகி, வேங்கடஸுப்பையர், வேங்கடரமணையர், வீணை காளஹஸ்தி ஐயர் முதலிய பெரியோர் வாழ்ந்ததும் அக்காலத்தே. அற்ப சிரமத்துக்குப் பிரதியாக அபார கீர்த்தியை சம்பாதித்த அதிசாமர்த்தியசாலியான ச்யாமா சாஸ்திரிகள், தமது கீர்த்தனங்களில், அந்தப் புராதன கானத்தின் தாள வைசித்ரியங்களை எல்லாம் நமக்கு எடுத்து உதவியுள்ளார். தீக்ஷிதரவர்களோ, அப்புராதன ராகங்களின் அழகையும், அக்காலத்துப் பிரபந்தங்களின் மனோஹரமான மந்த கமனத்தையும், தமது கீர்த்தனங்களில் எடுத்து உதவியுள்ளார். மஹா வித்வானான தீக்ஷிதர் ராகலக்ஷணங்களையெல்லாம் சோதித்து, ராகஸ்வரூபத்தை நிர்ணயம் செய்து பிற்காலத்தவர் ஸந்தேஹியாதபடி ராகங்களுக்குப் பெயரிட்டருளியது, இவர் செய்த மஹோபகாரமாம். ஆனால், கான வித்யாபாரங்கதர்களான ச்யாமா சாஸ்திரிகளும் தீக்ஷிதரும் காயகர்களேயன்றி கவிகளாகார். இரண்டாவது, இவ்விருவரும் ஸம்பிரதாயமாக வந்துள்ள புராதன கானத்தையே வியவஹரித்தபடியால், இவர்கள் திருஷ்டியும் அப்பழைய பாட்டையே விஷயமாகக் கொண்டது. நாதவித்யா மர்மங்களை அறிந்தவரும், ஸ்வரார்ணவத்தின் ரஹஸ்யங்களைத் தெளியக் கண்டவருமான தியாகையரும், அப்பழைய பாட்டின் அதிகாரிகளுள் ஒருவரே. இவரும் அப்புராதன ராக தாளங்களை அபரிமிதமாகக் கையாண்டவரே. அன்றியும் ஐயரவர்கள், தமது நித்யோத்ஸவக் கீர்த்தனைகளில், நமது பெண்மணிகள் அநாதிகாலமாய்ப் பாடிவரும் அதிஸுந்தரமான லாலி, நலங்கு, ஊஞ்சல் முதலிய பாட்டுகளை அனுகரித்து உள்ளார். இன்னும் இவர் 'விதுலகு' என்ற கீர்த்தனத்தில் பழைய இசைநூல் ஆசிரியர்களான பரதர், காச்யபர், ஸோமேச்வரர், சாரங்கதேவர் முதலியோரைக் குறிப்பிட்டிருப்பதால், ஐயரவர்கள் அன்னோர் நூல்களையெல்லாம் ஆராய்ந்ததன்றியும், தம்முடைய காலத்தில் மறைந்திருந்த பல அபூர்வ ராகங்களையும் மறுபடி பிரசாரத்துக்குக் கொணர்ந்திருத்தல் கூடும் என்று ஊஹிக்க இடமுண்டு. ஆனால் ஐயரவர்கள் பல புதிய ராகங்களையும் சிருஷ்டித்து இருப்பதால், இவரது சிருஷ்டி பழையது, புதியது என்ற இருவகை ராகங்களையும் விஷயமாகக் கொண்டது. ராகம் என்பது பாஷையை ஒத்தது. ராகத்தை சிருஷ்டி செய்வது என்பதும், பாஷையைச் சிருஷ்டி செய்வதை ஒத்த செயற்கரிய செயலே. 'தான் ஸேன்' என்ற உத்தர தேசத்துக் காயகர் சில புதிய ராகங்களைக் கற்பித்ததாகச் சொல்வதுண்டு. அவைகளின் ஸ்வரூபத்தை தென்னாட்டாரான நாம் அறியோம். ஐயரவர்களது சிருஷ்டிகளையோ நாம் ஸ்வாதீனமாய் கேட்டனுபவித்தல்கூடும். ஐயரவர்களுக்கும் இதர வாக்கேயகாரர்களுக்கும் உள்ள முக்கிய வித்தியாசம், இவரது நூதன சிருஷ்டிகளே.

தீக்ஷிதர் திருஷ்டிக்கு விஷயம் ராகம்; தியாகையர் திருஷ்டிக்கு விஷயம் ராமன். ஐயரவர்களுக்கு, ராகம் என்பது ராமனை அடையச் செய்யும் ஒரு ஸாதனமே. ஐயரவர்கள் கானத்வேஷியல்ல. பாட்டில் இவருக்கிருந்த ஆர்வம் வேறு யாருக்குமில்லை. பாட்டையே விஷயமாகக் கொண்ட 'நாதோபாஸன', 'ஸ்வர ராகஸுதா', 'வரராக லயஜ்ஞுலு' முதலிய பலபல அற்புதக் கீர்த்தனைகளைப் பாடியவர் வேறு யார்? ஆனால் நாதமாகட்டும், ராகமாகட்டும், ஸ்வரமாகட்டும், இவற்றையெல்லாம் எவனொருவன் தன் ஸ்வரூபமாகக் கொண்டானோ, அவனிடமே இவையெல்லாம் ஐயரவர்களைச் சேர்ப்பிக்கின்றன. அவனையே 'நாததனும் அனிசம்', 'நாத ஸுதா ரஸம்பு இலனு', 'ராகஸுதாரஸ', முதலிய உஜ்வலமான கீதங்களால் ஐயரவர்கள் துதிக்கிறார். 'ராகரஸிக'னும் ஐயரவர்களது ராமன்; அவன் கழுத்தை அலங்கரிப்பது 'ராக ரத்ன மாலிகை'யாம்; ஸுஸ்வரங்களே அவன் பூஷணங்களாம். 'கானலோலன்' அவன்; 'தந்த்ரீ லய ஸ்வர ராக விலோலன்' அவன்; 'முரளிவாதன விநோதன்'. ராமன் நாதமூர்த்தி மட்டுமன்று; அழகுத் தெய்வமும் அவனே. அவன் அழகை நூற்றுக் கணக்கான கீர்த்தனங்களால் ஐயரவர்கள் அனுபவிக்கிறார்கள், 'லாவண்ய ராம கனுலாரா ஜூடவே', 'ஸொகஸு ஜூட தரமா', முதலியவற்றால்; பகவானைவிட பகவானது அழகில் ஈடுபட்டவர் ஐயரவர்கள்.

பக்தியில்லாத கானம் கானம் ஆகாது என்றும், 'ஸங்கீத ஞானமு பக்திவின ஸன்மார்க்கமு கலதே', ஸ்வர ராகஸுதாரஸயுத பக்தியே ஸ்வர்க்கமும் மோக்ஷமுமாம் என்றும், ராகஞான ஸஹிதமான பக்தியே முக்தி என்றும், பக்தி ஸஹிதமான ஸங்கீத ஞானமே ஸாரூப்யம் என்றும் எண்ணிய ஐயரவர்களைக் கேவலம் காயகர் கோஷ்டியில் எப்படிச் சேர்ப்பது? காயகரல்லாதவரும், கேவலம் பக்தர்களுமான த்ருவப்ரஹ்லாதாதிகள் கோஷ்டியில் அவரைச் சேர்ப்பதும் தவறாகும். ஒருகோஷ்டியிலும் சேராமல் தனிப்பிரகிருதியாகவே இருந்த ஐயரவர்கள், கடைசியாக தன்னைப் போலவே சதா பாடிக்கொண்டும், ஹரிநாமத்தையே பஜித்துக்கொண்டும் இருந்த ஒரு விசித்திரமான பிராணியைக் கண்டுபிடித்தார். பிரபஞ்ச ஆரம்பத்திலிருந்து, இவரைப்போல உள்ள பேர்வழி ஒருவரே; அவர் நாரதர். ஐயரவர்கள் பக்திஸாம்யத்தாலும் கானஸாம்யத்தாலும் தன்னை ஒத்த நாரதரை, மித்திரராகவும் குருவாகவும் வரித்ததில் என்ன ஆச்சரியம்? ஐயரவர்கள் கீர்த்தனங்களுள் 'ஸ்ரீ நாரத' 'நாரத குருஸ்வாமி' 'வர நாரத' முதலிய அழகு வாய்ந்தன பல, நாரதரையே விஷயமாகக்கொண்டன.

ஐயரவர்கள் பந்துக்களில் வால்மீகியும் ஒருவர். 'மனமே மறவாதே, வால்மீகி பகவான் வர்ணித்துள்ள ராமசந்திரனை' என்பர் ஒரு சிறு கீர்த்தனத்தில். ஆனால், 'வால்மீகாதி முனுலு நருலு நின்னு வர்ணிஞ்சிரி நாயாச தீருனா?' (வால்மீகி முதலிய முனிவர்களும், கம்பர், துளஸீதாஸர் முதலிய நரர்களும் உன்னை வர்ணித்ததால் என் ஆசை தீருமா?) என்பர் இன்னொரு கீர்த்தனத்தில். இப்படி வால்மீகாதிகளின் நூல்களோடு ஒப்பிடத்தக்கதும், ஐயரவர்களது ஆசையைத் தீர்த்ததும் எது என்றால், முன் ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஆஞ்சனேயர்களோடு ராமன் ஆடிய நாடகத்தை ப்ரத்யக்ஷமாக்கிய ஐயரவர்களது ராமாவதார நாடகமே. மஹாகவி ஜயதேவர்

யதி ஹரிஸ்மரணே ஸரஸம் மனோ
யதி விலாஸ கலாஸு குதூஹலம்
மதுரகோமள காந்தபதாவளீம்
ச்ருணுததா ஜயதேவஸரஸ்வதீம்

என்றதைப்போல, ஐயரவர்களும், 'கீதத்தின் பொருளையும், ஸங்கீதத்தின் ஆநந்தத்தையும் ஒருங்கே இவ்விடத்தில் காண்' என்றது தமது இந்நாடகத்தைச் சுட்டியே. ஐயரவர்களது 'நௌகா சரித்ர'மும், 'ப்ரஹ்லாத விஜய'மும் வெகுவாய் ரூபம் கெடாமலும் பூர்ணமாயும் உள்ளன. ஆனால், ஐயரவர்களது ராமநாடகமோ ரூபம் குலைந்தும், அபூர்ணமாயும், தற்சமயம் நமக்குக் கிடைத்துள்ள கீர்த்தனங்களைக்கொண்டே ஒருவாறு சேர்க்கத்தக்க நிலையிலும் இருக்கிறது. ஆனால், இந்நாடகமே ஐயரவர்களது நூல்களுள் சிறந்ததாம் என்பதற்கு, அக்கீர்த்தனங்களே அடையாளங்களாம். பவபூதி காளிதாஸாதி நாடகங்களில், அக்கவிகள் இட்ட கானத்தை நாம்

இப்போது காணமுடியாது. ஆனால், கானப் பிரதானமான ஐயரவர்களது நாடகத்திலோ வடமொழி நாடகங்களிலும் பிராக்ருத நாடகங்களிலும் இப்போது காணமுடியாமல் மறைந்துள்ள கானஸம்பத்தை எல்லாம் கண்டு களிக்கலாம். நாட்டியத்தைப்போல கானமும் ரஸப்பிரதானமானது என்பதையும், கானத்தால் அர்த்தம் பெருகுவது எப்படி என்பதையும், ரஸத்துக்கும் ராகத்துக்கும் உள்ள ஸம்பந்தம் என்ன என்பதையும், பிற ஸந்தேஹங்களையும் இந் நாடகம் தீர்ப்பதல்லாமல், பிற்காலத்து கவிகாயகர்களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. த்வனி, ஔசித்யம் முதலிய காவியகுணங்களோடு கூடியதும், நவ ரஸங்கள் ததும்புவதுமான இந்த கேயப் பிரபந்தத்துடன், ச்யாமா சாஸ்திரிகள், தீக்ஷிதர் முதலியோரின் கீர்த்தனங்களை எப்படி ஒப்பிடுவது?

ஆனால், ஐயரவர்கள் 'ச்ருங்கார ரஸாத்ய கில ஸார பூரித'மான ராமகதையை கானமாய்ப் பாடும் சக்தி தன்னிடம் உண்டோ என்று ஸம்சயிக்கிறார், 'ஸொகஸுகா' என்ற பாயிரக் கீர்த்தனத்தில். ராமபிரான் நடத்திய அச்வமேத யாகத்தில், முப்பத்திரண்டு நாட்கள் ராமகதையை கானம் செய்த குசலவர்கள் ராமபுத்திரர்களல்லவா? அவர்களைப்போலவே கானம் செய்ய ஆசைகொண்டு, ஆயுள் முழுவதும் பாடிய ஐயரவர்களும் அந்த ராமப்ரஹ்மத்தின் பிள்ளையல்லவா? ஸீதை இவர் தாயல்லவா? 'ஸீதம்ம மாயம்ம ராமுடு மா தன்றி'. 'கானருசியறிந்த குசலவஜனகனே! உனக்கு வெட்கமில்லையா?' என்று ஏசுகிறார், இன்னொரு கீர்த்தனத்தில். பிறகு வில்லைச் சிதைத்து, அகலிகையைக் காத்து, துந்துபியின் காயத்தைப் பல காததூரம் எறிந்து, உபேந்திரனாய் அவதரித்தபோது மூவுலகத்தையும் அளந்த ராமபாதத்தை ஸ்மரிக்கிறார். பாதத்தின் பிரபாவத்தை நினைத்து 'தண்டகாரண்ய ரிஷிகளுக்கு உன் பாதங்கள் மோக்ஷத்தைக் கொடுத்தன; பரதனுக்கோ உன் பாதுகைகள் உன்னையே கொடுத்தன. எவை பெரியன, உன் பாதங்களோ பாதுகைகளோ' என்று தர்க்கித்து உருகுகிறார். 'உன்னினும் இனிதோ வைகுந்தம் என்னும் வான்?' என்பர் ஆழ்வார். 'நீ இருக்க நான் எப்படி அனாதையாவேன்; உனக்கு நாதன் இல்லாமையால் அனாதை நீயே' என்று பரிஹஸிக்கிறார், 'அனாதுடனு கானு' என்ற அழகிய கீர்த்தனத்தில். பொய்க்கோபம் கொண்டு 'நீ கருணையை விக்கிரயம் செய்பவன் என்பதைத் தெரிந்துகொள்ளாதது என் பிழையே' என்பர், 'கொனியாடே' என்ற கீர்த்தனத்தில். பக்தியானது ஐயரவர்கள் மனதில் கடலெனக் கொதித்துக் கொந்தளித்து எழுந்தது. இந்த பக்தியின் ஒரு பகுதி கனராககீர்த்தனங்களாக அவதரித்தது; இன்னொரு பகுதி நயராக கீர்த்தனங்களாக அவதரித்தது; இன்னொரு பகுதி அபூர்வ ராக கீர்த்தனங்களாகப் பிரவஹித்தது; பின்னும் ஒரு பகுதி தேசீ ராக ரூபமாய்ப் பெருகியது; இன்னும் ஒரு பகுதி ஐயரவர்கள் கற்பித்த நூதன ராக கீர்த்தனங்களாக அமைந்தது. இம்மாதிரி ராகங்கள் ஓய்ந்தனவேயன்றி, ஐயரவர்களது பக்தி ஓயவில்லை. இவ்வளவு ராகங்களும் ஐயரவர்கள் செய்த ராமபூஜைக்குப் போதவில்லை என்பதிலிருந்து, அவரது பக்தி எப்பேர்ப்பட்டது என்பது விளங்கும். இந்த மாதிரியான ஆவேசம் மஹாவித்வான்களான தீக்ஷிதர்களிடமாவது, சாஸ்திரிகளிடமாவது காணப்படவில்லை.

ராம கதையை கானரூபத்துடன் வெளியிடும் முயற்சியில், ஐயரவர்கள், ரத்தினச்சிற்பி மாணிக்கத்தையும், மரகதத்தையும் பொறுக்கிப்பொறுக்கிச் சேர்ப்பதுபோல், ராக ரத்தினங்கள் எனத் தகுந்த உத்தம ராகங்களைப் பொறுக்கிப் பொறுக்கி அமைத்திருக்கிறார். மத்தியம அதம ராகங்களைக் கொண்டு ராமனைப் பாடுவது தகுமோ? பிற பாட்டெல்லாம் கானம்; ஐயரவர்கள் பாடியிருப்பதே காந்தர்வமாம். எவ்வளவு ராகங்கள் அவருக்கு வசமாயிருந்தன! அவற்றுள் விசித்திரமாயும் அபரிமிதமாயும் ஐயரவர்கள் கற்பித்த வர்ணமெட்டுகள் எத்தனை! அவர் சிருஷ்டித்த நூதனமான பிரபந்தங்கள் எத்தனை! இவற்றுள் 'பஞ்சரத்னம்' எனப்படும் கேய மஹாகாவியங்கள் ஒருவகை. காம்பீர்யத்தையும் விசித்திர அலங்காரங்களையும் ஒருங்கே பெற்று, ஆச்சர்யமான ஸங்கதிவரிசைகள் சேர்ந்து, சித்திரத் தேர்களோ முத்துப் பல்லக்குகளோ எனத் திகழும் பெரிய கீர்த்தனைகள் எத்தனை! ரஸம் ததும்பும் சின்னஞ்சிறு கீர்த்தனைகள் எத்தனை!

பொங்கும் ஆனந்தத்தை 'எந்த முத்து எந்த சொகஸு', என்ற கீர்த்தனத்தில் காணுங்கள். கோபத்தை 'ஏன் என்னுடன் பேசமாட்டாய்?' என்ற பொருளுள்ள 'பலுகவே ஏமிரா' என்ற கீர்த்தனத்தில் காணுங்கள். ராமனைக் காட்டுக்கு அனுப்பியதால் 'குழந்தாய்! ராம! இங்கு வா' என்றழைக்கும் பாக்கியத்தையும் திருஷ்டியையும் ஒருங்கே இழந்த தசரதன், துன்பம் மேலிட்டு, சித்தப்பிரமையில் கண்ட ராமபிம்பத்தைப் பார்த்து, 'மேருஸமான, தீர, வரத, ரகுவீர, இங்கு வா; உன் நடையழகையும், மெய்யழகையும் நன்றாய்க் காண்பேன்' என்று அழைக்கும் 'மேருஸமான' என்ற கீர்த்தனையில் தசரதனது பரிதாபகரமான நிலையைக் காணுங்கள். தன் மகனை பகவானே என்றறிந்த கோசலையின் மனநிலையை 'உன்னைப் பிரிந்து நான் இருப்பதெப்படி? என் கண் நிறைய உள்ளது உன் அழகே; என் காதில் உள்ளன உன் சரிதங்களே; என் நாவில் உள்ளன உன் நாமங்களே; எங்கும் உள்ளாய், என் தவப்பயனே! உன் கபட வார்த்தைகளும் இனியனவே!' என்று புலம்பும் 'நினுவினா நாமதி எந்து' என்ற கீர்த்தனையில் காணுங்கள். 'ப்ராரப்த மிட்லுண்டகா' என்பது ஸீதையை இழந்த ராமனது துக்கத்தைக் குறிப்பது. ராவணன் தன்னைத் தூக்கிச்சென்றபோது தரையில் இட்ட மீனெனத் துடித்துப் பதைத்து ஓலமிட்டது 'மனஸுலோனி மர்மமு' என்ற கீர்த்தனம். இன்னும் வித்வான்கள் மட்டும் நிர்வஹிக்கக்கூடியதும், பதினெட்டாம் பெருக்கெனச் சுழிகளோடும் சுழல்களோடும் பெருகுவதுமான 'நாஜீவாதார' முதல், மழலைமாறுத நம் குழந்தைகளும் பாடக்கூடிய 'ரமிஞ்சுவா ரெவருரா' வரை எவ்வளவு கீர்த்தன வகைகள் உண்டோ அவ்வளவையும் ஐயரவர்கள் நமக்குக் கொடுத்துள்ளார்கள். கானவித்தையில் அவருக்கிருந்த கற்பனா வைசித்ரியம் வேறு யாருக்கும் இல்லை.

ஐயரவர்கள் புதிதாய்க் கற்பித்த ராகங்கள் எவை என்ற கேள்விக்குப் பதில் சொல்வது எளிதாயில்லை. இப்புதிய ராகங்களைக் கண்டு பிடிப்பதற்குமுன், ஐயரவர்கள் கையாண்ட பழைய ராகங்கள் எவை என்பதை நிர்ணயம் செய்வது அவசியமாகிறது. இம்மாதிரி ஸங்கடம், ராகமுத்திரைகளோடுகூடிய தீக்ஷிதர் கீர்த்தனங்களிலாவது, முத்திரையில்லாத ச்யாமா சாஸ்திரிகள் கீர்த்தனங்களிலாவது கிடையாது. ஐயரவர்களது அபூர்வ ராக கீர்த்தனைகளுக்குத் தற்சமயம் இடப்பட்டுள்ள ராக நாமாக்கள், ஐயரவர்கள் அவைகளுக்கு இட்ட பெயரல்ல. அபூர்வ ராகங்களின் ஸ்வரூபம் தெரியாதவரும், இப்பாட்டுகளை முதல் முதல் அச்சிலிட்டுப் புஸ்தகமாக்கினவர்களுமான சிலர் இட்ட பெயர்களே இவைகள். இப்பெயர்கள் வெகுவாய்த் தவறாகவே உள்ளன என்பதில் சந்தேகமில்லை. பெயர் மாற்றியதால் வந்த அநர்த்தம் என்ன என்று சிலர் கேட்கலாம். பிள்ளையார் என்று எண்ணிப் பிடித்தாலே அது குரங்காய் முடியலாம். குரங்கென்றே எண்ணி பிடிக்க ஆரம்பித்து விட்டால் அது முடிவதெப்படி? 'ஹரினேனெந்து' என்ற கீர்த்தனம், ஐயரவர்கள் காலத்துக்கு முந்தியுள்ள தரங்கிணி என்ற அபூர்வ ராகம். இந்த ராகத்தில் 'மாயே' என்று ஆரம்பிக்கும் தீக்ஷிதர் கீர்த்தனம் ஒன்று உண்டு. தரங்கிணி ராகஸ்வரூபத்தை அறிந்து பாடினால், 'ஹரினேனெந்து' என்ற கீர்த்தனம் கெடாது. ஆனால், ஹரிகாம்போஜீ என்று எண்ணி ஸங்கதிகளையும் ஸ்வரக்கிரமங்களையும் மாற்றிப்பாடினால், தரங்கிணி ராகஸ்வரூபமும் கீர்த்தன ஸ்வரூபமும் மிஞ்சுமா? ஆகையால் நாம் இப்போது அபூர்வராகங்களையும் அவைகளின் ஸ்வரூபங்களையும் சோதித்து அறிவது அத்தியாவசியமாகிறது. இந்த சர்ச்சையில் தீக்ஷிதர் ச்யாமா சாஸ்திரிகள் கீர்த்தனங்கள் பெரிதும் பயன்படுவன. இம்மாதிரி சர்ச்சையின் பயனாகிய எனக்குத் தோன்றிய சில திருத்தங்களை இப்போது சொல்லுவேன். 'மோக்ஷமுகலதா' 'நாததனும் அநிசம்' இவை இரண்டும், ஐயரவர்கள் காலத்து முன்பேயுள்ள கோபிகாவஸந்தம் என்ற அபூர்வராகம். 'ப்ரோவபாரமா', 'நினுவினாநாமதி எந்து' முதலியவை எல்லாம் கன்னடகௌளை. 'சோபில்லு', 'மாமவ ஸததம்', 'இந்தனுசு' இவையெல்லாம் மனோஹரி. 'ஏராமு நம்மிதினோ' என்பது வஸந்தபைரவி. 'என்னடுஜூதுனோ' என்பது கன்னட வங்காளா. 'பாஹிராம' என்பது ஸாமவராளி. 'விநய' என்பது நடநாராயணி. 'ராகஸுதாரஸ', 'ஸார்வபௌம

ஸாகேத' எல்லாம் தேவமனோஹரி. 'ஸ்மாணே ஸுகம்', 'கிரிராஜஸுதா' 'முனுபே தெலியக' எல்லாம் பூர்ணசந்த்ரிகா. காபி எனப்படுவது கோபிகாவஸந்தத்தைப் போன்றதொரு அபூர்வராகம். இப்படியே ஆபேரி, ஈசமனோஹரி, மாதவமனோஹரி, பலஹம்ஸ முதலிய பலபல அபூர்வ ராகங்கள் உருக்குலைந்தும், விபரீதமான பெயர்களுடனும் இப்போது விளங்குகின்றன. இவை சிரத்தையுடன் ஆராய்ந்து தெளியத்தக்கன.

உமர் கயர் என்ற கவியின் மனக்கோட்டையான 'A loaf of bread, a cup of wine and thou' என்றது உலகப் பிரசித்தமாயுள்ளது. உலகப்பிரசித்தமாகாத ஐயரவர்களது லக்ஷ்யம் என்னவென்றால், 'நித்திரையை ஒழித்து, அழகாகத் தம்பூரை சுருதிகூட்டி, சுத்தமான மனதுடன் பகவானை ஆராதிப்பதே!' 'மஞ்சுளமாய் மனதிலிருந்து அவதரிக்கும் ராகங்களாலும் நர்த்தனங்களாலும் பகவானைத் துதி; அவனுக்குப் பிரியமான ஸங்கீத உபாஸனத்தைச் செய்' என்பர், இன்னொரு கீர்த்தனத்தில். 'தும்புருவைப்போல் தம்பூரை எடுத்து பகவத் ஸந்நிதியில் ஆடி அபிநயிக்கும் அவனே தன்யன்' என்பர். 'இந்த பாகவதோத்தமர்கள் ஸுஸ்வரமாய் ராகாலாபம் செய்து, தெருவில் பவனி வரும் வைபவத்தைக் காணுங்கள். கழுத்தில் துளஸீமணி ஹாரங்கள் பிரகாசிக்க, வரிசையாக பகவந் நாமங்களைச் சொல்லி ஒரே மனதுடன் மிருதங்க கோஷத்துடன் ஆனந்தபரவசராய் இடுப்பில் வஸ்திரங்களை இறுகக்கட்டி, விசித்திரமான காலடிகள் போட்டு, கரபல்லவங்களில் ஜ்வலிக்கும் தாளங்களின் ஸுநாதத்துடனும், மதுரமான பாட்டுடனும், புஷ்பங்களை பகவான்மேல் இரைத்துவரும் இவர்கள் என்ன ஆனந்தமாய் பவனிவருகிறார்கள்' என்று ஸப்தஸ்தான உற்சவத்தில் உடன்வரும் பாகவதர்களைப் புகழ்ந்து பஞ்சநதேச்வரரையும் ஹரியையும் சிவ, ராம, நாமகுஸுமங்களால் அர்ச்சித்து, மயிர்க்கூச்செறிந்து மெய்மறந்திருக்கும் அச் சமயம் பூமழை பெய்ததாம். பூமழையும் ஒரு அதிசயமாகுமா? அதிசயங்கள் எவை என்றால், ஐயரவர்களும் அவரது ஆச்சரியமான கீர்த்தனங்களும், அவரது ஈடில்லாத பக்தியுமே. இப்பிரபுவின் பெருமையை உலகத்துக்கு எடுத்துக்காட்டவேபோலும், இவர் பாதஸ்பர்சத்தால் புனிதமான பஞ்சநத க்ஷேத்திரத்தை ஸப்தஸ்வர தேவதைகளும் ஏழு நதிகளாகிச் சூழ்ந்து கிடப்பன!

(இதற்குப் பிறகு பாடப்பட்ட ஸ்ரீதியாகையரின் ராம நாடக கீர்த்தனங்களை 116-பக்கத்தில் காண்க.)

கேசவ கீர்த்தனம்.

(இதுவும் பின்னுள்ள சாரங்கபாணி கீதமும் காலஞ்சென்ற கன்னிச்சமீன் சரபம் உடுமலை முத்துசாமிக் கவிராயர் அவர்களால் இயற்றப் பெற்றன. திருச்சி திரு. டி. கே. கோவிந்தையர் உதவியன. இதுவரை வெளிவராதன.)

இராகம் : பூரிகல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

எங்கேயடா உன் கவனம்

அநுபல்லவி

மங்கள பஜனையிலோ மனமேனு மடப்பயலே (எங்)

சரணம்

சந்த்ரோதய இதய சவுரி கருணை கடாக்ஷம்
மந்த் ரோபதேசகுரு வாக்யமல்லவோ மோக்ஷம் (எங்)
இருப்புப் பெட்டிப் பக்கத்திலோ
எண்ணி வைத்த ரொக்கத்திலோ
கருப்பு வந்த துக்கத்திலோ
கக்கத்திலோ ரொக்கத்திலோ (எங்)
வேசியர் வீதியிலோ
விவரீதச் சேதியிலோ
பேசும்பக் யாதியிலோ
பீதியிலோ வ்யாதியிலோ (எங்)
வித்திறைத்த காட்டினிலோ
மிக்கமலை மேட்டினிலோ
முத்துசாமி பாட்டினிலோ
மூட்டினிலோ சூட்டினிலோ (எங்)

சாரங்கபாணி கீதம்.

இராகம் : காம்போதி தாளம் : ஆதி

பல்லவி.

இந்த வேளையேமுன் வந்து காட்சிநலந்
தந்து ரக்ஷிப்பாயே

அநுபல்லவி

எந்த வேளையிலோ எங்கேயோ சரீரம்
நொந்து வீழ்ந்தாலுன்னைச் சிந்திப்பேனோ என்னை (இ)

சரணம்

சங்கற்ப மனமு மிங்கற்ப மல்லவே
வெங்கற் பண்பிற் கடினம்—அது
பொங்கித்தானுருகப் பங்கிற் போதகுரு
நுங்கிச் சொன்ன சுதினம்
சங்கப்பூணன் முத்து சாமி போற்றுஞ் சித்து
சாரங்கபாணியே பேரின்பம் பேணியே (இ)

ஸ்ரீ ராமகீதம்.

(ஸ்ரீ ராமச்சந்திரன்மேல் காலஞ்சென்ற கன்னிவாடி ஜமீன் சரபம் உடுமலை முத்து சாமிக் கவிராயரவர்கள் இயற்றியன. திருச்சி திரு. டி. கே. கோவிந்தையர் உதவியன. இவை இதுவரை வெளிவராதன.)

1. இராகம் : வராளி—தோடி

பல்லவி.

ஸ்ரீ ராமச் சந்திரன் பஜனை—செய்யத்
தீரும் ஜென்மவினை

அநுபல்லவி.

ஆராதனைபுரி வோராதரவோடு
சீராலுயர் தரு நேராயருள்புரி (ஸ்ரீ)

சரணம்.

தம்பிக்குப் பட்டம் பெறுநலங் தந்து
தாய்க்கு நேர்ச்சி யென்ற
பாட்டனூர்க்குச் சென்ற (தம்பி)

சக்கரவர்த்தி யிட்டமுன்வ
ரத்தை நத்தி நத்தி வளர்
சற்பனைக் கோர் சிற்றனைவ
யிற்றுதித்த புத்ர ரத்ந (தம்பி)

சாசன சுமித்ரை மகிழ
மாசறு மமைச்சர்நகர்
சதுரங்க சேனையலை
எதிர் கொண்ட வேடகுகன்
தாவியுற்ற போதுசித்ர
நீதி சொற்ற பாதுகைப்ர

கோசலை வசிட்டர் முதல்
வாழ்சனர்ப்ர மிக்கவரு
யதிர் கங்கையாறுதனில்
முதிரன்பு பேணிவழி
கூடவேற்பு மேவியிஷ்ட
தாபபத்தி கூரதிஷ்டத்

தம்பிக்குப் பட்டம் பெறு நலந்தந்து
தண்டகாரண்யம் கடு நடைவந்து
பைம்புற் செம்பன்ன சாலை யிருந்து
வம்புக்குங் சின்னம்பலவவள் நொந்து
மானைத் துரத்தியதை வானுக் கனுப்பிவழி
தானந் தடத்தனுகி
சொல்லச் சொல்லப் போய்

ஜானகியுடன்
லக்ஷ்மணன்செய்த
சூர்ப்ப நகைசெய்
போகப்புரிந்து
நோக்கி இளையவனைத்
மாயத் தரக்கர் வினை
நீக்கி

ஒளித்தனைக்கென முன் ஓடித்தவித்து மவமாக்கி எத்துச் சந்நியாசி
தேனைபழிக்கு மொழிச் சீதைக் குயிலைச் சிறைதூக்கி சென்றவனேதான்

தீயவன் கு ரூரலங்கை
ராவணன் ச மூல மம்பு
பாய நொந்து மாய வென்ற
ராகவன் த யாள துங்க

சீலன் பக்த ஜனனுகூலன் வைகுந்தபத
மூலன் திருமேனு நன்னீலன் தேன் காசைச்சமீன்
செம்பதுமை மங்கைவள ரும்புய சுகந்ததுரை
கம்பளம் விளங்குகன சம்பனன் முழங்கு கவி
சித்ர சரபமேனு முத்து சாமிம
னத்தில் விமரிசைநி னைத்த வாறருள்
சித்ர சமரசம கத்வபூஜித
சத்ய விரதன் வரு சத்ரு காலனேர்
தேசுறு பங்காரு சாமி பாண்டிய
பாசபந்த சுந்தர ராஜ பாண்டியன்
திருமாளிகை யிடை மரு மாலிகை புனே
பெருமாள் சுரர்துதி கருணை கரஹரி

2\. இராகம் : தந்யாசி.

பல்லவி.

ராமா எனையாள வர்மமா—ரகு
வம்ச தர்மமா (ராமா)

அநுபல்லவி.

தாமத மின்ன—மாமேனி—லேமன்வரானே (ராமா)

சரணம்.

பாவி நானேன் ருலுங்கூட
பக்தர் கூடம் பஜனைபாட
மேவினனே உன் கோவில் வலம்புரி வந்தே (ராமா)
கான வேடன் வானராதி
கண்டு கோண்ட காட்சி ஜோதி
நானடையேனே தீனதயாபரசீதா (ராமா)
முத்துசாமி நிதம் போற்று
மூலமே நன் னீலந் தோற்றுஞ்
சித்திர மேனி விக்ரம கோதண்டபாணி (ராமா)

சரபம் முத்துசாமிக் கவிராயர்

(திருச்சி திரு. டி. கே. கோவிந்தையர் எழுதியது.)

முத்துசாமிக் கவிராயர் கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப் பேட்டையில் 1863-வது வருஷத்தில் பிறந்தவர். அவர் உடுமலைப்பேட்டையிலுள்ள ஹைஸ்கூலில் சேர்ந்து வாசித்து வருங்காலத்தில், பாடசாலை இன்ஸ்பெக்டர்கள் வரும்பொழுது வந்தனோபசார கீதங்களையும் மங்களங்களையும் தமிழில் தாமே இயற்றி அவற்றை இனிமையாய்ப்பாடி அவர்களுக்கு சந்தோஷமுண்டாகும்படி செய்வார். இவர் 1881-ம் வருஷத்தில் மிடில் ஸ்கூல் பரிக்ஷையில் தேறினர். மேலும் மேலும் படிக்கவேண்டுமென்ற ஆசை அவருக்கு மிகுதியும் உண்டாயினும், அவர் மெட்ரிகுலேஷன் வகுப்பில் வாசிக்கும்பொழுது அவர் தந்தையாருக்கு வியாபாரத்தில் நஷ்டமுண்டானதால் படிப்பை நிறுத்திவிட நேரிட்டது. குடும்ப கஷ்டநிவர்த்திக்காகப் பொருளீட்டற்பொருட்டு அவர் ஊரைவிட்டு வெளியேறினர். அச்சமயம் பழனிஸ்தலம் மாம்பழக் கவிராயர் அவர்கள் 'சந்திரவிலாஸ'த்தை யியற்றி அதை அரங்கேற்றுவிக்கத் தகுந்த பிரபுவை நாடி ஊர்ப் பயணம் செய்துகொண்டிருந்தார். அந்த சமயம் அவரிடம் கையேட்டுக்காரராக முத்துசாமிக் கவிராயர் அமர்ந்து தமிழ் ஜில்லாக்களுக்கெல்லாம் சென்று பல பிரபுக்களுடைய மதிப்பையும் தயவையும் பெற்றார். மாம்பழக் கவிராயரவர்கள் இயற்றும் இனிய கீர்த்தனங்களை முத்துசாமி பாடிக் கேட்கவேண்டும் என்று அந்தக் காலத்தில் தெற்கு ஜில்லாக்களில் சொல்வதுண்டு. இப்படிச் சில வருஷங்கள் கழிந்தன.

அதன் பின்னர் அவர் சிலகாலம் புலவர் புராணம் இயற்றிய தண்டபாணி ஸ்வாமிகளுக்குச் சீடராயிருந்து அவர்பால் சந்த இலக்கணமும் பயின்றார். அதன்பின்பு, அவர் பல ஹைஸ்கூல்களில் தமிழ்ப் பண்டிதராயிருந்தார். 1903-ம் வருஷம் கன்னிவாடி ஜமீன்தார் அவரை சமஸ்தான வித்வானாக வைத்து ஆதரித்து வந்ததை,

> "தானியம் பும்பாடலுக்கு ஞாபகமெங்காளுநிற்க
> வானியம் பூத்தந்த மகாராசன்—வானியஞ்சேர்
> ஆத்தானக் கன்னிநகர் அப்பைய சாமியெனைக்
> காத்தானெனக் காத்தான் காண்"

என்னும் வெண்பாவை நன்றியறிதலுக்கு அடையாளமாகக் கூறியுள்ளார். அவருக்குச் சரபகவி என்ற பட்டம் வித்வகோஷ்டியில் ஜமீன்தாரால் அளிக்கப்பட்டது.

ஒருமுறை ஜமீன்தார் யாதுகாரணம்பற்றியோ கவிராயர்மீது கோபித்துக்கொள்ள, கவிராயர் சமயோசித சாதுர்யமாய்,

> விண்ணிற் கம்மிக் குமுறியிடி
> வீழ்த்தி வெகுபே ருயிரையிந்த
> மண்ணுக் கிரையாப் பண்ணுமென்று
> மழைமேகத்தை வெறுப்பதுண்டோ?
> தண்ணிற் பொலியுந் தடங்கன்னித்
> தலத்தைப் புரக்குந் துரைப்பாண்டியா
> எண்ணிப் பார்க்கிலுன் கோபமெல்லாம்
> நமக்கு............யோகமரோ?

என்று சொல்லிக் கோபத்தை யாற்றினர்.

கன்னிவாடி ஜமீன்தார் காலமாகவே, முத்துசாமிக் கவிராயருக்கு ஆதரவில்லாமற் போயிற்று. அதன்பின் தமிழ் நாடகசாலைகளிற் பிரவேசித்துப் பல நாடகங்கள் இயற்றினர்; எண்ணற்கரிய பாடல்களைச்செய்தார். அவைகள் அனைத்தும் ஏட்டுப்பிரதியாகப் பல இடங்களில் சிதறின. பாசுர சேகரம் என்ற பக்தி ரஸமான நூலும், வேறு சிறு சிறு பாடல்களும் அச்சிடப்பட்டுப் பின்பு மறைந்தன. அவர்இயற்றிய இராம நாடகம் ஒன்றுதான் தற்போது அவர் பெருமைக்கு அறிகுறியாய் விளங்குகின்றது.

பிறகு முத்துசாமிக் கவிராயரவர்களையும் நாடக உலகில் அக்காலத்து பிரசித்தி பெற்று விளங்கிய சகோதரர்களான பிரம்மஸ்ரீ கே. எஸ். அனந்த நாராயணய்யர், கே. எஸ். கோபால கிருஷ்ணையர் (செல்லப்பையர்) இவ்விரு நடிகர்களையுங்கொண்டு, திரு. க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு அவர்கள் ஒரு நாடக கம்பெனியை ஸ்தாபித்தார். முத்துசாமிக் கவிராயர் அக்கம்பெனிக்கு சங்கீதவாத்தியாராக

யிருந்தார். கவிராயர் அக்கம்பெனிக்கு 'ஆரிய கான சபா' அதாவது, (ஆ) அனந்தநாராயணை யரையும், (கான) கோபாலகிருஷ்ணையரையும், (ச) சந்தானகிருஷ்ண நாயுடுவையும் (பா) கவி ராயரின் பாட்டுக்களையும் குறிக்கும். கவிராயரின் அழகிய பாட்டுக்களினாலும், அவ் விரு நடிகர்களினாலும், (காலஞ்சென்ற) ஸ்ரீமான் டி. எஸ். துரைசாமி ஐயரவர்களின் ஓவியம் தீட்டிய சீன் ஜோடிப்புக்களாலும் "ஆரியகான சபா" பிரசித்திபெற்று வந்தது என்பது யாவரும் அறிந்ததே.

எளியநடையில் உயரிய விதமாகக் கவிதை புனைவதில் முத்துசாமிக் கவிராயருக்கு நிகர் எவருமில்லை. அவரது பாடலுக்கே தனிய முகு ஒன்று இயற்கையிலேயே அமைந்திருந் தது. பாடலைக் கேட்டதும் அவர் இயற்றிய தென்று நன்றாகத் தெரியவரும். "மஹாலோபி நாடகம்" என்ற சிறந்த நாடக நூலொன்றை வெகுகாலத்திற்கு முன்னதாகவே இயற்றியி ருந்தனரென்றும், அது அச்சிடப்படாமலே போய்விட்டது என்று தெரிகிறது.

முத்துசாமிக் கவிராயர் சிறிதும் ஆடம்பர மற்றவர்; அவர் கல்வியே அவருக்குத் தெரி யாது; எப்போதும் அடக்கமான குணமுள்ள வர்; சிநேகப்பிரியர்; தயாள மனது படைத் தவர். எவ்வளவோ சம்பாத்தியம் அவர் செய்திருந்தபோதிலும், அவர் காலம் பெரும் பான்மையும் வறுமையிலேயே கழிந்ததென லாம். கடைசியாக, அவர் திருவாரூரில் குரோ தன வருஷம் சித்திரை மாதம் 13-ம் தேதியில் கடவுளது பதமடைந்தார். முத்துசாமிக் கவி ராயருக்குப்பின் "ஆரிய கான சபா" நாடகக் கம்பெனி உடைந்து போயிற்று.

(இவ்வரலாறு மேற்படி ஆரியகான சபாவில் ஓவியக்காரராயிருந்து சமீபத்தில் காலஞ் சென்ற எனது அம்மான் ஸ்ரீமான் டி. எஸ். துரைசாமி ஐயரவர்கள் கூறியதாகும்.)

நாடகப் பகுதி.

தியாகராஜ ஸ்வாமிகள் அனுபந்தம்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் இயற்றிய (அபூர்ணமாயுள்ள) ராம நாடகம்.*

(கா. வே. ராமச்சந்திரன்.)

(111-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனங்களி லிருந்து இந்நாடகத்தை ஊஹித்து, இன்று (29-1-40) நடைபெறும் உற்சவ நிமித்தமாக அதைச் சேர்த்து திருச்சி ரேடியோவில் நடத் துபவர் ஸ்ரீ கே. வி. ராமச்சந்திரன் அவர்கள். நாடகாங்கமான கீர்த்தனைகளிலிருந்து சில கீர்த்தனங்கள் மட்டுமே ஸந்தர்ப்ப விவரணங் களுடன் இங்கு பதிக்கப்பட்டுள்ளன.

'ஜகதாநந்தகாரக' (நாட்டை—ஆதி.) பக வான் ராமசந்திரமூர்த்தி ராவண ஸம்ஹாரத் துக்குப் பிறகு, அயோத்யாநகரப் பிரவேசம் செய்த சமயம், வஸிஷ்டாதிகளும், நகரமாந்த ரும் மங்களாசாஸனமாகப் பாடிய 'ஜகதாநந்த காரக' என்ற மஹாகீதமானது இந்நாடகாரம் பத்தில் வாத்யங்களில் வாசிக்கப்படும்.

* இங்கு விடப்பட்ட நாடகாங்கமான வேறு கீர்த்தனங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

முதல் பகுதி. பாயிரம்.

1. நாடகத்தின் பீடிகையாக அமைந்த கீர்த்தனங்களில் ஒன்று 'ராம கதா ஸுதா' (மத்யமாதி—ஆதி.) இதன் பொருளாவது 'ராம கதை என்ற அம்ருத பானம் மோக்ஷ சாம்ராஜ்யத்தைத் தருவது; கலியைத் தீர்ப்பது; தைர்ய, ஆனந்த, ஸௌக்ய நிகேதனம்; பிறவிக்கடலைத் தாண்டச் செய்யும் ஓடம்' என்பதே.

2. 'ஸுகி எவரோ' (கானடா—ஆதி.) 'ஸ்ரீ ராம நாமத்தின் ருசி அறிந்தவனே ஸுகி. மத த்வேஷமில்லாமல், லோக ஸேவகனாக இருந்து, ஸுஸ்வரமான கானத்துடன் ராம நாம ஸுகத்தை அனுபவிப்பவனே ஸுகி.'

3. 'சோபில்லு' [அபூர்வராகம்—மனோஹரி—ரூபகம்.] இது ஸப்தஸ்வர தேவதைகளின் ஆராதனை.

இரண்டாவது பகுதி.

1. ஸ்ரீராமபாதமா' (கோபிகாவஸந்தம்—ஆதி.) 'வெயிலால் உலர்ந்து, கண்ணீர் உதிர்த்துத் தரையில் கல்லாய்க்கிடந்த அஹல்யையை அனுக்ரஹித்த ராமபாதம் எனக்குக் கிடைக்காதோ?' என்று கௌதமரிஷி உருகுகிறார்.

2. 'ச்யாம ஸுந்தராங்க' (தன்யாஸி—ரூபகம்.) 'தாமஸ ரஹித! ஸுகுணங்கள் நிரம்பியவனே! பூமியில் அவதரித்த ராமச்சந்திர! ஸர்வ சக்தியுடையவன் நீயே! இஷ்டதெய்வமே!' என்று அஹல்யை பகவானை மனமாரப் போற்றுகிறாள்.)

3. 'ராமநீ ஸமானம்' (கரஹரப்ரியா—ரூபகம்.) ராம! 'ஸீதாதேவியின் பக்தி என்ற கூட்டில் உள்ள கிளியே! (என்னைப்போலல்லாமல்) மிருதுவாய், தேன் துளிக்கப்பேசும் ஹரியே! உனக்கு சமானம் யார்?' என்று பரசுராமர் வாழ்த்துகிறார்.

4. 'ஸரி எவ்வரே' (ஸ்ரீரஞ்சனி—ஆதி.) 'பயங்கரமான வனத்தில் உடன் இருப்பேன் என்று ஹடம் செய்து, காட்டிலும் அவனுக்கு ராஜபோகங்களைத்தந்த கனகாங்கி! ஸ்ரீஜானகி! உனக்கு சமானம் யாரம்மா?' என்று அநஸூயை ஸீதாதேவியை வாழ்த்துகிறாள்.

5. 'எந்தநினே' (முகாரி—ரூபகம்.) 'சபரி உன் பாக்யத்தை என்னென்று சொல்லுவேன். சிறந்த தபஸ்வினிகளான ரிஷிபத்னிகளில் ஒருவளுக்கேனும் இந்த பாக்யம் கிடைக்கவில்லையே. அவனைக் கண்குளிரக்கண்டு மதுரமான பழங்களை அவனுக்குத்தந்து, மயிர்க்கூச்செறிவிக்கும் அவன் பாதங்களில் வணங்கி, பரமபதத்தை அடைந்த உன் புண்யத்தை என்னென்று சொல்வேன்' என்று ரிஷியொருவர் போற்றுகிறார்.

6. 'ராரா ஸீதாரமணீமனோஹர' (ஹிந்தோளவஸந்தம்—ரூபகம்.) நீரஜநயன! என் முன் வா! ஒரு முத்தம் தா! (ஸீதை உனக்கு மரவுரியை உடுத்தியிருக்கிறாள்;) நான் உனக்குப் பொன் வஸ்திரத்தை அழகாக உடுத்துகிறேன். (அவள் உனக்கு நெற்றிக்குக்கூட இடவில்லை;) உன் அழகிய முகத்தில் நான் கஸ்தூரி திலகத்தை இடுகிறேன். (முத்துமாலையை இப்படித் தாறுமாறாய்ப் போடுவாளோ ஒருத்தி!) நான் மாலையைத் திருத்துகிறேன். (ஸீதை உன்னை எப்போதாவது பாடினதுண்டா? அனுராகத்துடன்) நான் பாடுகிறேன், இதோ. வா ஸீதை மணாளா'...என்று சூர்ப்பணகை ராமனை அழைக்கிறாள். (இந்த ஹிந்தோள வஸந்தம், ச்ருங்கார ரஸத்துக்கென்றே அமைந்ததொரு ராகம்.)

7. 'ப்ராலப்தமிட்லுண்டகா' (அபூர்வராகம்—ஜம்ப.) 'என் விதி இப்படியும் இருக்க வேணுமா? சபலசித்தனான ஒருவன் கபடமாய் பக்தவேஷம் பூண்டு, ஒருவரையும் சத்ரு என்று எண்ணாத என்னை சத்ரு என்று எண்ணி, என் உபசாரத்துக்குப்பிரதியாக அபசாரத்தைச் செய்யவேண்டுமா?' என்று தீரசாந்தனான ராமபிரான், ராவணன் ஸீதையை அபஹரித்தபோது, துக்கிக்கிறார்.

8. 'மனஸுலோனி' (ஹிந்தோளம்—ஆதி) 'மானரக்ஷக! மனதில் உள்ளதைச் சொல்லாமலே அறிந்து நிறைவேற்றும் மரகதாங்க! இப்போது என் மனதிலுள்ளதை உலகறியக் கதறுவதை நீ அறியமாட்டாயோ? நீ அல்லாது எனக்கு வேறு யார்? (விராதனிடமிருந்து) என்னை நீ காப்பாற்றியது பெரிதல்ல.

இச்சமயம் என் கையைப் பிடித்துக் கொள் வாய்' என்று, முன்பு நகர் நீங்குவதற்கு முன்னரே 'இதுதானே வனம்' என்று கேட்ட ஸீதை, ராவணன் அவளை எடுத்துப்போகையில், பயந்து, துடித்து, ஓலமிட்டது. (இது பயானக ரஸப்பிரதானமான கீதம்.)

9. 'சின்னநாடேனு' (அபூர்வராகம்--ஆதி.) 'செய்யமுடியாத காரியங்களை எல்லாம் செய்வேன் என்று ஏற்றுக்கொண்ட உனக்கு, சிறு வயதில் என்னைக் கைபிடித்தபோது காப்பாற்றுவேன்' என்றதை நிறைவேற்றுவது கடினமோ? இப்போது என்னைக் கைவிட எண்ணினுயோ, ஏற்றுக்கொள்ள எண்ணினுயோ, அறியேன். ஸுகுணவாரிதி! பெருந்தெய்வமே! ரஹஸ்யத்தைக் காப்பாற்றுவாய்' என்று ஸீதை அசோகமரத்தடியில் துக்கம் மேலிட்டுப் புலம்பியது.

10. 'பாஹிராம தூத' (அபூர்வராகம்—ஸாமவாராளி—ரூபகம்) இதில் கணையாழியைக் கண்ட ஸீதை ஹனுமானைப் போற்றுகிறுள்.

11. 'என்னடு ஜூசுதுனே' (அபூர்வராகம்—கன்னட வங்காளா—ஆதி) 'ஸூர்யகுலதிலகனே, பூர்ண சந்திரன்போன்ற உன் முகத்தை இனி எப்போது காண்பேனே. தரையில் கிடக்கும் லக்ஷ்மண, அயோத்தியில் பரதனும், சத்ருக்னனும், ஸுக்ரீவனும், ஹனுமானும் பிரியத்துடன் பேசி உன்னைக் கூப்பிடும்போது உன்னை எங்கு காண்பேனே?' என்று ராமன் இந்திரஜித்தினுல் அடியுண்டு கிடந்த லக்ஷ்மணனைக் குறித்துப் பிரலாபிக்கிறுர். (இது கருண ரஸப்பிரதானமான கீதம்.)

12. 'ராம பாண' (ஸாவேரி—ஆதி). இது ரிஷிவாக்யம்; வீரரஸத்துக்கு உதாரணம். 'மூலபலத்தை அழித்த ராமபாணத்தின் சக்தியை என்னென்று சொல்வேன்! லக்ஷ்மணன் அடிபட்டுக் களைத்தான்; அச்சமயம் ராவணன் அகமகிழ்ந்து கைநிறையச் சர்க்கரை எடுத்து ஊரெல்லாம் கொடுக்கப்போனுன். அப்போது பகவான் எழுந்து லக்ஷ்மணனைப் பார்த்து, 'குழந்தாய்! சிறிது களைப்பாறுவாய்' என்று அனுக்ரஹித்து, கோதண்டத்தை நிறுத்தி இடிவரிசைகளைப்போல நாணொலி எழுப்பிப் பிரயோகித்த ராமபாணத்தின் சக்தியை என்னென்று சொல்வேன்!'

13. 'எவர்ச்சிரிரா' (மத்யமாதி—ஆதி.) இது தேவதைகள் வாக்யம்; அத்புதரஸப்பிரதானமானது. 'ரவிகுலஸோம! ஒரு சரம் பத்து, நூறு, ஆயிரமாகி மின்னல் இடியெனத் திரிந்து, சத்ருக்களை அடக்குவது. இத்தனை சரங்களையும், இந்த வில்லையும் உனக்கு யார் கொடுத்தார்களப்பா? நீ அவதரித்தபோது, இவையும் உடன்பிறந்தனவோ?'

14. 'பஜரே பஜமானஸ ராமம்' (கன்னட—சாபு.) அச்சமயம் மனுஷ்ய, தேவ, கந்தர்வ, வித்யாதர ரிஷிகணங்களெல்லாம் ராம பஜனை நிமித்தமாய் ஒருவரையொருவர் அழைத்துக் கோலாஹலமாய்ப்பாடி வழிபட, 'ராமோ ராமோ ராம இதி ப்ரஜாஞம் அபவன் கதா:' என்றபடி மூவுலங்களும் ராமமயமாகி எங்கும் ராமகோஷமே கேட்கப்பட்டது.

மூன்றுவது பகுதி.

1. 'ராரா மா இண்டிதாக' (அஸாவரி—ஆதி.) இது பதினுன்கு வருஷம் வழிநோக்கிக் காத்துக்கிடந்த கௌஸல்யாதேவியின் வாக்கு; வாத்ஸல்யம் மிகுந்தது. 'ரகுவீர! தசரத குமார! வா; இனித் தாமதத்தைப் பொறுக்க மாட்டேன்.'

2. 'சேதுலார' (பைரவி—ஆதி.) இது பட்டாபிஷேகத்துக்கு முன் ஸீதையின் வாக்கு; ச்ருங்கார ரஸம் நிரம்பியது. 'ஸேதுபந்தன! தேவர்கள் புகழ என் கைகளார உன்னை அலங்கரித்துக் காண்பேன். காலில் பாதசாம்பூட்டி, பொன்னுடை சாத்தி தலையில் திவ்ய புஷ்பங்கள் சூட்டி, (உன் அழகிய முகத்தில் முத்தமிட்டு) இடுப்பில் சதங்கை கோத்து, திலகம் திருத்தி, அளகபூஷணம் சூட்டி, (உன் மார்பை அணைத்து) ஆணிமுத்துக் கொண்டையிட்டு, சந்தனம் பூசி, நீ மகிழ, நான் காண்பேன்.'

3. 'மா ஜானகி' (காம்போஜீ—ஆதி.) இது ஜனகர் வசனம். 'ராஜீவாக்ஷனே! எங்கள்

ஜானகியைக் கைபிடித்து நீ மஹாராஜனானாய்! ராவணனை சத்ருவாகவுடையவன் என்ற கீர்த்தியையும் அடைந்தாய். அன்று அசோகநிழலில், இவள் ராவணனைக் கொல்லாமல் பொறுத்தது, உன் கீர்த்திக்குப் பங்கம் வாராமல் இருப்பதற்கன்றோ?'

4. 'கொலுவையுன்னாடே' (பைரவி—ஆதி.) 'பொன்கதிரைப் பரிஹஸிக்கும் ஸீதாதேவியுடன் சந்திரன் ரோஹிணியுடன் கூடினாற்போல, அழகாகக் கொலுவமர்ந்து இருக்கிறான் கோதண்டபாணி. அவனைச் சேவிப்போம் வாரீர்' என்று நகரஜனங்கள் ஒருவரை ஒருவர் கூவியழைக்கிறார்கள்.

5. 'லேகனா' (அஸாவரி—ஆதி.) 'ஸ்ரீகர! கருணாகர! அவரவர் விரும்பியதைத் தரும் சிந்தாமணியே! ஸீதைக்கு உன் அழகு; லக்ஷ்மணனுக்கு உன் கண்ஜாடை; பரதனுக்கு உன் ஸௌந்தரமுகம்; சத்ருக்னனுக்கு உன் சித்ஸ்வரூபம்; ஹனுமானுக்கு உன் பாதாரவிந்தங்கள்; நித்யானந்தமில்லாமலா இவர்களெல்லாரும் உன்னைச் சூழ்ந்திருக்கிறார்கள்!' இது வந்திகள் பாடுவது.

6. 'இந்தனுத்ஸௌ' [மனோஹரி—அபூர்வ ராகம் ஆதி.] 'உன் அழகையும், பராக்ரமத்தையும், மஹிமையையும் வர்ணிப்பது, பிரமாதிகளுக்கும் ஸாத்யமா?' இதுவும் வந்திகள் பாடுவது.

(பட்டாபிஷேக மஹோத்ஸவத்தில்

பெண்கள் பாடியன.)

1. 'ஹெச்சரிக' (யதுகுலகாம்போஜீ—ஜம்ப.)

2. 'நகுமோமு கலவானி' (மத்யமாதி—ஆதி.)

3. 'உய்யால' (நீலாம்பரி—ஜம்ப).

4. 'க்ஷீரஸாகர விஹார' (ஆனந்தபைரவி—ஜம்ப.)

5. 'பதிகி ஹாரதிரே' (ஸௌராஷ்டி—ஆதி.)

மங்களம்.

'நீ நாமரூபமுலகு.'

அநுஷ்டானப் பகுதி

சதாசிவப் பிரமேந்திரர்.

(வஸிஷ்ட பாரதி.)

சதாகதி யாமனக்கலக்கம் நீங்கிட
மதாதியாம் மோகங்கள் மருவிடாதோ
தோழ்த்தே
நிதானமாம் மோன நிலையில் நிலைத்திடும்
சதா சிவப்ரம்மேந்திர சற்குரு சரணமே.

சோளதேசத்தில் திருவிசைநல்லூர் என்பது தேவாரத்தில் விளங்கிய 274 க்ஷேத்திரத்தில் காவிரியின் வடகரையிலுள்ள 63 தலங்களில் ஒன்று. திருவிடைமருதூர் ஸ்டேஷனிலிறங்கி நேரே ஒருமைல் தூரமுள்ள காவிரியை அடைந்து அதைக் கடந்து, மேற்கே இரண்டுமைல் செல்ல இத்தலத்தைக் காணலாம். இது பெரும்பாலும் வைதீகப்பிராமணர்கட்கு வாசஸ்தலமாயுள்ளது. 250 வருஷங்களுக்குமுன் தஞ்சைமாநகரை ஆண்ட துளஜாராஜா, சரபோஜி மஹாராஜா இவர்களுடைய அபிமானம் பெற்ற கிராமம். இத்திருவிசைநல்லூர் என்ற மஹா அக்ரகாரத்தில் ஆந்திரப்பிராமணர்கள் வகுப்பில் பிறந்த புண்யமூர்த்தி சதாசிவப்பிரமேந்திரர். இளம்பிராயத்திலேயே மார்க்கண்டேயரைப்போல, வித்தை புத்தி ஞான வைராக்யங்களில் அதிதீவிரமாக வளர்ந்துவந்தார். அவ்வூரில் பரமசிவேந்திரர் என்ற சந்நியாசி எழுந்தருளியிருக்க, அவர்களிடத்தில் உயர்ந்த வேதாந்த பாடம் கேட்டு வரும் கோஷ்டியில் இவ்விளைஞரும் போய் கலந்து கொண்டார். ஆசாரியர் சொல்லும்போதே தாம் சந்தேகம் அறத்தேர்ந்து தெளிந்துகொண்டு, மற்றும் உள்ளவர்களைப் பிரசினம் செய்து வாதத்தை எழுப்புவார். அப்பொழுது அவர்கள் சொல்வதற்கு போதிய சக்தி இல்லாமையால், இவர்களிடம் அஸூயை கொண்டு, குருவினிடத்திலும் இவர்மீது குறை கூறுவார்கள். ஆயினும், இவரது திறத்தை அறிந்த ஆசிரியர் உள்ளூர அன்புகொண்டு இவரைக் கண்டியாமலே இருந்து விட்டார். இளம்பிராயத்தில் தாய்தந்தையர்களை இழந்த சதாசிவப்பிரமேந்திரர் அம்மான் கிருஹத்தில் வளர்ந்து வந்தமையால், அம்மான் இவருக்கு விவாகத்தையும் செய்துவைத்தார். ஒருநாள் இவர் வழக்கம்போல அம்மான் கிருஹத்திற்கு வந்து உணவிற்கு வந்து உட்காரும்பொழுது அம்மாமி, 'அப்பா! சதாசிவம்! இன்றைக்கு சாப்பாடு நமக்கு உன் மாமனார்வீட்டில்' என்று சொல்ல அதற்கு இவர் காரணம் கேட்க, 'உன் மனைவி ருதுஸ்நானதினம்; நமக்கு எல்லாம் விருந்து' என்று சொல்ல, உடனே இவர் இடைகழியில் வந்து மேல் வஸ்திரத்தை விரித்துப் படுத்தார்; பசியெடுக்கத் துடித்தார்; 'மனைவி

ருதுஸ்நான தினத்திலேயே நம் பசிக்கு உணவு கிடைக்கத் தடையானுல் கடைசிவரை நமக்கு எப்படியோ' எனச் சிந்தித்தார். உடனே எழுந்தார்; விரித்த துணியை எடாமல்காவேரியைப் பார்க்க நடந்தார்; நீரைப்பருகி நாணல் புதரடியில் கிடந்தார்; எழுந்த பசியை அன்றே ஒழித்தார்.

தியானம்.

மாமனுர் சம்பந்தி வீட்டில் மாப்பிள்ளையைத் தேட, மேல் வஸ்திரத்தை கண்டு அவரைக் காணுமல் கவலைகொண்டு அன்றுமுழுதும் தவிக்கலாயினர். மறுநாள் சிலர் கண்டு பேசியும் இவர்கள் பேச்சு வேறு அவர்கள் பேச்சு வேருயிற்று. தெருவில் சிலநாள் வந்து சுற்றித் திரிந்துகொண்டு இருப்பார்; குருவின் ஸ்தானத்திற்கும் வருவார்; சீடர்களாகிய மற்ற பெரியோர்களைத் தனித்தனி கண்டு வாதம் புரிவார். இதை அவர்கள் ஆசாரியரிடத்தில் தெரிவித்து மிகவருந்தவே, ஒருநாள் ஆசாரியர் அவரைப் பார்த்து 'உன் வாய் அடைக்க' எனக் கூற, அதையே அநுக்கிரஹமாகக் கொண்டு அன்றுமுதல் மௌனநிலையை கைக்கொண்டார்; பிறர் எவ்வகை பேசினும் பதிற் சொல்வதில்லை. ஒருநாள் வீதியில் சாம்பல் மேட்டில் புரண்டுகொண்டு இருப்பதைக் கண்டு பைத்தியம் பிடித்ததாக மற்ற சீடர்கள் ஆசாரியருக்கு அறிவிக்க, அவரும் அச் சீடர்களுடன் வந்து பார்த்து, 'பஸ்மச்சந்நம் இவாநல:,' அதாவது : 'உள்ளே தணல் ஜொலித்துக்கொண்டிருக்கிறது; மேலே சாம்பல் பூத்திருக்கிறது' என்று சொல்லி, அவர் நிலையைஉணர்ந்து ஆனந்தித்து, 'இவனுக்குப் பிடித்த பைத்தியம் நமக்குப் பிடிக்க நாம் புண்ணியம் புரிந்தோம் இல்லையே என்று உருகினர். இடையிலிருந்த வஸ்திரமும் தானே நழுவியது; கௌபீனமும் தானே கழன்றது. சதாசிவ பிரம்மேந்திரர் செய்த அற்புதங்கள் பற்பல; இவர் பிரும்மஸூத்ரவிருத்தி எழுதினர். மத்தியில் பாடிய கீர்த்தனங்கள் பல; இவைகள் எல்லாம் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவருடன்படித்த சகபாடி பிக்ஷாண்டார் கோயில் சிவராம சாஸ்திரிகள். சாஸ்திரிகள் பரம்பரை புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ள சிவஞானபுரம் காட்டில் திரிந்துபோது, மஹாராஜாவுக்கு அநுக்கிரஹம்; தனது நண்பரான சாஸ்திரிகளை குருவாக நியமிக்க நியமனம்; அங்கு நவராத்ரிபூஜா அனுஷ்டானவிதி இவர்களாலே மௌனமாகவே மணலில் எழுதி உபதேசிக்கப்பட்டன. அந்த மணல்களையே தங்க சம்புடத்தில் எடுத்து நிரப்பி வைத்து புதுக்கோட்டை மஹாராஜா பூஜாக்கிரஹத்தில் தக்ஷிணுமூர்த்தி குருகோயில் என்று பூஜித்துவரப்படுகிறது. இன்னும் இவர்கள் செய்த அற்புதங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி ஸ்ரீரங்கத்தில் உள்ள வாணிவிலாஸ அச்சுக்கூடத்தார் பதிப்பித்திருக்கிருர்கள்.

இம்மகானைப்பற்றி சிருங்கேரிபீடத்தில் 50 வருஷங்களுக்குமுன் எழுந்தருளியிருந்த நரஸிம்ஹபாரதி என்ற ஆசார்யமூர்த்திகள் யாத்திரையில் அதிஷ்டானத்தில் தரிசித்து பிரம்மேந்திரஸ்துதி என்ற ஐந்து சுலோகங்களில் அநேக அற்புதங்களை விளக்கி இருக்கிருர்கள். அதில் முக்கியமானது ஒன்று; அது யாதெனில், கையை வெட்டிய ஒரு மகமதியனுக்கு அநுக்கிரஹம் செய்த விஷயம். கரூருக்கு வடக்கே 6 மைலிலுள்ள நெரூர் என்னும் அக்கிரகாரத்தின் வடக்கெல்லைப்புறத்தில் அகண்ட காவேரியின் தென்கரையில் இம்மஹானினுடைய அதிஷ்டானம் (சமாதிக்கோயில்) பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அது பிரிடிஷ் இலாகாவைச் சேர்ந்தபோதிலும், அவ்விடமும் பூஜை உரிமையும் புதுக்கோட்டை அரசர்க்கே உரித்தாக, அவர்களால் ஆராதிக்கப்பட்டு வருகிறது. இவர் உற்சவம் அவ்வூரிலும், கரூர் முதலிய பலவிடங்களிலும் பிரதிவருஷம் வைகாசிமீ சுத்தபஞ்சமியன்று கொண்டாடப்பட்டு வருகிறது. 1923ஆம் ஆவணிமீ நான் கரூருக்கு சென்றிருந்தேன். அங்கு டிபுடி கலெக்டர் நண்பர் ஸ்ரீ. வி. ஸோமசுந்திரம் பிள்ளையவர்களும், முன்ஸீப் ஸ்ரீமலயப்பய்யர் அவர்களும், ஆண்டிப்பட்டி ஜெமீன்தாரும், ராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியாரவர்கள் ஆதரவில் பசுபதீச்வரர் கோயில் பதினறுகால் மண்டபத்தில்கம்பராமாயணப் பிரஸங்கம் இருபது உபந்யாஸத்தில் நடந்துமுடியும் தருணம், இடையில் சதாசிவப் பிரும்மேந்திரருடைய சரித்திரத்தை சிறிதுசொல்ல, அப்பொழுது அங்குள்ள சபையோர்கள் சதாசிவப்பிரமேந்திரர்* சரித்திரத்தையே முழுதும் விரிவாகச்

சொல்லும்படி வேண்டினார்கள்; அப்பொழுது, 'விஷயம் எனக்கு கொஞ்சம்தான் தெரியும். அதிகம் நான் சொல்லுவதற்கு தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை' என்று சொன்னேன். அப்பொழுது முன்சீப் மலையப்பய்யர் அவர்கள், 'என்னிடம் சதாசிவப்பிரமேந்திராருடைய சரித்திரம் இங்கிலீஷில் இருக்கிறது. நான் படித்து அதன் அர்த்தத்தைச் சொல்லுகிறேன்' என்று ஒப்புக்கொள்ள நான் அவர்களிடம் சாவகாசம் உள்ளபொழுது, அவர் படித்து மொழிபெயர்த்துச் சொல்லக் கேட்டேன்.

நான் கர்ண பரம்பரையில் கேட்டதும் புஸ்தகத்தில் இல்லாததுமான விஷயங்களை மூன்று பிரசங்கங்களாகச் செய்தேன். அப்பொழுது அங்கிருந்த கோஷ்டியின் அநுபவம் சொல்லும் தரமன்று. பிறகு அம்மூர்த்தியை ஒருமுறை இருமுறை மும்முறை தெரிசித்தபலனாக, என் குடும்பத்தில் பிரத்தியக்ஷமாய் அநுபவித்தது சொல்ல முடியாததாகும். அந்த உண்மையை அறியாதார் நம்பமாட்டார்கள். எனினும், அக்காலத்தில் வாத்தியாராய் நாகப்பட்டணத்திலிருந்த ஜே. கிருஷ்ண அய்யர், (எனது இரண்டாவது மாப்பிள்ளை) இவ்வநுபவத்தை, நாகப்பட்டணத்தில் இருந்தே என்னை அறியாமல் தாமும் அறிந்தார். இதுவே தக்க சாட்சியாகும். தற்காலம் ஜே. கிருஷ்ண அய்யர் Corporation School Supervisor ஆக இருக்கிறார்.

சதாசிவமூர்த்தியின் பத்தியே என் உள்ளத்தைப்பற்றி இருப்பதால் என் குமாரன் ஒருவனுக்கும் அப்பெரியாரின் பெயரைச் சாற்றி அநுபவித்து வருகிறேன்.

வரகூர் ஸ்ரீ கோபால பாகவதர்.

(வ. வேணுகோபாலன்.)

[குறிப்பு:—வரகூர் ஸ்ரீகோபால பாகவதர் வாழ்ந்த காலம், கி.பி. 1815 முதல் 1877 வரையில். இவர் காலத்திலேதான், சத்திரபதி சரபோஜி மன்னரவர்கள் திருமகனார் சிவாஜி அரசர் தஞ்சையை ஆண்டுவந்தார்.]

நமது தக்ஷிணபாரத தேசத்தில் கானரூபமாக ஹரிகதையை ஆரம்பித்து சிறப்புறச் செய்து காண்பித்தவர் வரகூர் ஸ்ரீ கோபால பாகவதரே. இவர், புராதனமான கீர்த்தனங்களாலும், சுலோகங்களாலும், சங்கீதஞான விசேஷத்தாலும், மிதமிஞ்சிய கிருஷ்ணபக்தியாலும், கிருஷ்ணகர்ணாமிருதங்களாலும், ஸ்ரீநாராயணதீர்த்த குருஸ்வாமிகளது கீர்த்தனங்களாலும், ஸ்ரீஜயதேவமது கீதகோவிந்தத்தாலும், தரங்கம் முதலியவற்றாலும், இதிஹாஸ்புராண விசேஷத்தாலும் ஹரிகதையைச் சோபையுறச் செய்து காண்பித்து, சிறந்த கிருஷ்ணபக்தராக விளங்கியவர். பண்டிதர்களையும் பாமரர்களையும் ஸ்ரீகிருஷ்ணபக்தியில் மூழ்குவித்து, பரவசமடையச் செய்து தக்ஷிணதேச முழுவதும் பரிமளிக்கச் செய்தவர் ஸ்ரீகோபால பாகவதர். தக்ஷிணதேசத்தில், முதன் முதலில் "ஹரிகதை" செய்யும் முறையை அறிவுறுத்தித் திறமையுறச் செய்துகாண்பித்தவர் ஸ்ரீகோபால பாகவதராதலால், தற்பொழுதும் ஹரிகதை செய்யும் பாகவதர்கள் ஸ்ரீ பாகவதரை குருஸ்துதியாக முதன்முதலில்

வணங்கியபின்பே கதைசெய்யத் தொடங்குவார்கள். பாகவதரவர்கள் கிருஷ்ணபக்தர்; சிவந்த நிறமுடையவர்; துளஸீமாலை தரித்திருப்பார்; ஒத்த உயரமும் பருமனும் உள்ளவர்; தூய்மையான வஸ்திரமும், விபூதி தரித்தமேனியுமாய் விளங்குவார்; எப்பொழுதும் பணிவாகவும் சாந்தமாகவுமே பேசுவார்; ஸதா கிருஷ்ணரை ஸ்மரித்துக்கொண்டேயிருப்பார்.

இவர் பிறந்த ஊர்.

ஸ்ரீகோபால பாகவதரின் பெயரைக் குறிப்பிடும்போது, வரகூர் என்ற ஊரின் பெயரும் சேர்த்துத்தான் சொல்லப்படும். இதைப் போலவே, தற்காலத்திலும் ஸங்கீதவித்வான்களையோ, பாகவதர்களையோ, அவரவர்களது பிறந்த ஊரை முன்வைத்தே பெயரையும் குறிப்பிடுகிறார்கள். இவ் வரகூர் என்பது, சோழநாட்டுத் தஞ்சைநகர்க்கு மேற்கே ஏழு மைல் தூரத்திலுள்ளதும், புராதனமானதும், வைஷ்ணவஸ்தலமுமான அந்தணர்கள் கிராமமாகும். அக்கிராமத்தின் நடுவில் ஓர் பெருமாள் கோவில் உள்ளது; தெருவின் கோடியில் வடபாகத்தில், ஒரு சிவன் கோவிலும் உண்டு; பக்கத்தில் கடுங்கால் என்ற ஓர் சிறு ஆறு ஓடுகின்றது; அதன் பக்கலில் காவேரி ஓடுகின்றது. அவ்வூர் உறியடிக்கு (கிருஷ்ண ஜயந்தி) புகழ் பெற்றுள்ளது. முந்நூற்றறுபது வருடங்களுக்குமுன்பு பூபதி ராஜபுரம் என்று வழங்கப்பட்டு, பின்பு, பரமஹம்ஸ பாதாசார்யர்களான யதீந்தர ஸ்ரீநாராயண தீர்த்தருக்கு வராஹரூபமாய் தரிசனம் தந்து முத்தியளித்தமையின், *வராஹபுரி என்று வழங்கப்பட்டது. பெருமாள் திருநாமம் ப்ரஸன்னவேங்கடேசுவரர் என்பது; இவ்வூரில் எல்லோரும் மழவர்நாட்டு ஸ்மார்த்த பிராமணர்கள். ஸ்மார்த்த பிராமணர் வகுப்பில் ஸ்ரீகிருஷ்ணபக்தரான வேங்கடரங்கையர் என்பவர் வாழ்ந்து வந்தார். இவருக்கு ஸ்ரீ கோபாலபாகவதர் புத்திரராக உதித்தார்.

இளமையும் உத்தியோகமும்.

கோபால பாகவதர், இளமையிலேயே நன்றாக கற்கவேண்டிய முறைப்படி வேத அத்தியயனமும், சாஸ்திரவித்பத்தியும் கற்றுக்கொண்டார். மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்; இவரது தந்தையார் வயதானவரானபடியால், குடும்பப்பொறுப்பு இளமையிலேயே இவரைப் பற்றிக்கொண்டது. ஆயினும், வருந்தாமல் கௌரவமுடன், தந்தை சொற்படி நடந்துவந்தார். இவரது வாய்மையும், சீலமும், நல்லொழுக்கமும், கல்வியும் கற்றோருள்ளத்தையும் மற்றோருள்ளத்தையும் கவர்ந்தன. எல்லோரும் இவரிடம் பிரியமுடன் நடந்து வந்தனர்; இவருக்கு நன்றாகப் பேசுந் திறமை மிகுந்திருந்தது. நூற்பொருளைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் திறமையும், பொறுமையும் அவர்களைக் கவர்ச்சி செய்யும். குடும்பப்பொறுப்பு இவரைச் சார்ந்ததாயினும், இவர் அதில் அதிகம் ஈடுபடாமலே இருந்துவந்தார். சிறுவயதிலேயே, தனிமையில் உட்கார்ந்துகொண்டு கிருஷ்ணபஜனை செய்து வருவார். இவருக்கு சங்கீத ஞானம் இயல்பாகவே இருந்தது. இப்படி இவர் சிறுவயதிலேயே பக்தியில் ஈடுபட்டு இருந்து வருங்கால், குடும்பத்தின் உபத்திரவ மிகுதியால் தனது பதினெட்டாவது வயதிலேயே குடும்பநிமித்தமாக அக்கிராமத்திலேயே ஒரு பள்ளிக்கூடம் வைத்து பிராமணப்பிள்ளைகளுக்கு பாடங்கற்பித்து வந்தார். அதனால் வரும் வருவாயைக்கொண்டு, குடும்பத்தைப் பாதுகாத்துக்கொண்டு வந்தார். ஓர் நாள், பள்ளிக்கூடத்துப் பையனொருவன் செய்த குற்றத்திற்காக கோபம்கொண்டு அவனை இவர் அடித்துக் கண்டித்தார். இவர் இவ்விதம் அடித்து கண்டித்ததற்கு, அந்தப் பையனின் தகப்பனார் சம்மதியாமல் பாகவதரைக்கண்டு கோபித்துக்கொண்டார். அதனால் பாகவதர், 'உபாத்தியாயர் தொழில் உதவாது' என்று அன்றுமுதல் பாடம் சொல்லிக்கொடுப்பதை விட்டுவிட்டார். பிறகு, சில பெரியோர்களால் அச்சமயம் கிராமமுன்சீப் வேலைக்கு விரும்பி அழைக்கப்பட்டார். பாகவதரும், அதற்கு உடன்பட்டு, சிலகாலம் அவ் வேலையில் இருந்துவந்தார்.

ஹரிகதை செய்தல்.

இவர் கிராமமுன்சீப் வேலையில் சுமார் இரண்டு மூன்று வருஷங்கள் இருந்துவந்தார். அப்பொழுதும், இவர் தினந்தோறும் கோவிலுக்குப் போகாமல் இருக்கமாட்டார். ஓய்வு

* வராஹபுரி என்பதே வரகூர் என்றாயிற்று.

நேரங்களிலெல்லாம் ஸதா கிருஷ்ணனைத் தியானிப்பதே கடமையாகக்கொண்டிருந்தார். இவரது கிருஷ்ணபக்தியைக் கண்ட எல்லோரும் இவரிடம் அடிக்கடி வந்து, பகவத்விஷயத்தைப்பற்றி விசாரம் செய்துவிட்டுச் செல்வார்கள். பாகவதரும், யாரேனும் வெளியூர்களிலிருந்து அடியவர்கள் வந்தால் அவர்களை ஆராதித்து மகிழ்விப்பார். யாரேனும், 'கிருஷ்ணா! கோவிந்தா!' என்று சொன்னால், அவரை வணங்கி உபசரிப்பார்; அளவில்லாத மகிழ்ச்சி கொள்வார்; கிருஷ்ணபக்தியில் மிதமிஞ்சிய அன்புடையவர் பாகவதர். அச்சமயம், உடல் நலக் குறைவாலும் மூப்பினாலும் வருந்திய இவரது தந்தையார் ஸ்ரீவேங்கடரங்கையர் ஒருநாள் வைகுண்ட பதவியை அடைந்தார். உடனே இவர் அவருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவிட்டு, முன்னைவிட அதிகபக்தியுள்ளவராய், வேறு வேலையில் மனம் செல்லவில்லையாதலால், கிராமமுன்சீப் வேலையை விட்டுவிட்டார். அன்றுமுதல் ஸ்ரீ கிருஷ்ண பஜனையே செய்துகொண்டு ஸ்ரீநாராயணதீர்த்தரால் இயற்றப்பட்டு, அவ்வூரிலேயே அரங்கேற்றப்பட்ட ஸ்ரீகிருஷ்ணலீலா தரங்கிணியை மனனம் செய்து பஜித்துக் கொண்டும், ஸ்ரீஸத்குருஸ்வாமிகள் கீர்த்தனைகள், ஸ்ரீஜயதேவர் கோவிந்தகீதம் முதலியவற்றை எடுத்துச் சொல்லிப் புகழ்ந்துகொண்டும் காலம் கழித்து வருவாராயினர். இவர் கோயிலுக்குச் சென்று, ஸ்ரீகிருஷ்ணபகவான் முன்பு உட்கார்ந்துகொண்டு, நீண்ட நேரம் தியானத்திலேயே இருந்துவிடுவார். தியானத்திலிருந்துகொண்டே ஒருநாள் முழுவதும் எழுந்திருக்காமற்கூட உபவாஸமிருந்துவிடுவது வழக்கம். யாரேனும் இவரையழைத்து பிக்ஷையளித்தால் ஏற்றுக்கொள்வார்; தானாக ஒருவரையும் எதையும் விரும்பிக் கேட்கமாட்டார். சில சமயங்களில் மூன்று நான்கு நாட்கள் சாப்பிடாமலேயே ஹரித் தியானத்தில் அமர்ந்துவிடுவார். இவ்விதம் இவர் இருப்பதை அறிந்த ஊரார்கள் இவரிடம் பயபக்தியுடன் நடந்துகொண்டு மிக்க ஆச்சரியமெய்தினர். இவரது பெருமை பக்கத்து ஊர்களளெங்கும் பரவலாயிற்று; இவர் உள்ளூரிலேயே பகவத் ஸந்நிதானத்தின் முன்பே ஹரிகதை செய்து வந்தார். வெளியூர்களிலிருந்து பக்தர்கள் இவரைக்காண அடிக்கடி வரலாயினர். அப்பக்தர்களைக்கொண்டு பஜனை செய்து, அவர்களுக்கு ஸமாராதனை முதலியவைகளைச் செய்து களிக்கச் செய்வார். பக்தி பரவசத்தாலும், கடவுளிடத்துள்ள அளவுகடந்த அன்பினாலும் இவருக்கு ஒருகுறையும் இல்லாதிருந்தது. ஸங்கீத கானரூப ராக பகவந்நாம கீர்த்தனங்களாலும், சுலோகங்களாலும் ஹரி கதை செய்து, சர்வஜனங்களுக்கும் பக்தியை உண்டாக்கி ஆனந்தமடையச்செய்துகொண்டு, வேறு கவலையில்லாமல் ஸத்காலக்ஷேபந்தை நடத்திவந்தார். வெளியூர் ஜனங்களும் பக்தர்களும் இவரது ஹரிகதையைக் கேட்க வேண்டி திரள்திரளாக வந்துகொண்டிருந்தனர். வருபவர்களையெல்லாம் பாகவதர் அன்புடன் உபசரித்து, ஹரிகதையால் மகிழ்வித்து ஹரிநாம ஸங்கீர்த்தனத்துடன் போஜனமும் செய்வித்து வந்தார். பக்தர்கள் சாப்பிடும் பொழுது "கிருஷ்ணா! ராமா! கோவிந்தா!" என்ற கோஷத்துடன் போஜனம் செய்வார்கள்; இவ்விதம் செய்வது பாகவதருக்கு பரமானந்தத்தை விளைவிக்கும். பாகவதர் இவ்விதம் கதை செய்ய ஆரம்பித்தபொழுது இவருக்கு வயது சுமார் இருபத்திரண்டு வயதிருக்கலாம்; இவருடைய பெருமை எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது இவரிடம் சிஷ்யர்களாக பலர் வந்து சேர்ந்தனர். பாகவதர் சிஷ்யர்களுடன் பக்கத்து ஊர்களுக்கும் சென்று ஹரிகதை செய்து வந்தார்.

இவருடைய சிஷ்யர்கள் மிக்க பயபக்தியுடன் இவரது விருப்பப்படி நடந்துவந்தார்கள். பாகவதர் இவ்விதமாக பல தலங்களுக்குச் சென்று, சிஷ்யர்களுடன் அங்கங்கே ஸ்ரீகிருஷ்ணரது லீலைகளை ஹரிகதாரூபமாக கர்நாடக சங்கீதத்தைக்கொண்டும் கீர்த்தனைகளைக் கொண்டும் மெய்ம்மறந்து தக்க அபிநயங்களுடனும் சொல்லி, ஜனங்களை அதிசயிக்கச் செய்தார். இவரது கிருஷ்ணபக்தியையும், ஹரி கதை செய்யும் திறமையையும் கண்ட பொது ஜனங்களும், பெரியோர்களும் மகிழ்ச்சியுற்று, இவரை உபசரித்தனர்; இவருக்கு சிஷ்யராக இருந்தவர்கள் பலர். பாகவதர், தஞ்சை ஜில்லா முழுவதும் எல்லா ஸ்தலங்களிலும் சென்று ஹரிகதை செய்திருக்கிறார்.

கதை செய்யும் திறமை.

கோபால பாகவதர் வாக்கிலிருந்து வரும் பதங்களெல்லாம் பக்திததும்பும் ஹரிநாம கீர்த்தனங்களாகவே யிருக்கும். இவருக்கு வடமொழிப் பயிற்சி அதிகமுண்டு; இவர் ஹரி கதை செய்யும் காலத்து, நின்றுகொண்டே தான் செய்வார்; சாதாரண பஜனை செய்யும் காலத்திலும் நின்றுகொண்டேதான் செய்வார். கதை செய்யும்பொழுது ஒரு கையில் தம்புராவும், ஒரு கையில் சிப்லாக்கட்டையும் வைத்துக்கொண்டு, கால்களில் கச்சைச் சலங்கைகளும் கட்டிக்கொண்டு, ஆனந்தமான முக விலாஸத்தோடும் தகுந்த அபிநயத்துடனும் செய்வார். இவர் பஜனை, கும்மி முதலியன கோயிலில் செய்யுங்காலத்து, அபிநயத்தோடு கூட ஆனந்த நர்த்தனமும் செய்வார். இவ்விதம் இவருடைய பக்தி அளவுக்கடங்காதபடி விருத்தியடைந்துகொண்டே வந்தது. இவருடைய கதையை கேட்கக் கேட்க, புதிதாக இன்பம் விளைவித்துக்கொண்டே யிருக்கும். இவர் வெளியூர்களுக்குச் செல்லும்பொழுது பஜனை செய்துகொண்டே போவார். கதை செய்யும்போதும் பஜனை செய்யும்போதும், பாகவதருடன் நூறு சிஷ்யர்கள்வரை இருப்பார்கள். அவர்கள் இவருடனே பஜனை செய்து கொண்டே கோஷ்டியாகச் செல்வார்கள். பாகவதருக்கு ஸ்ரீமத் பாகவதம் முழுவதும் மனப்பாடம்; பாகவதம் முழுவதையும் ஹரிகதையாகச் செய்துகொண்டே யிருப்பார். கதையானது ஆரம்பமுதல் இறுதிவரையில் தொடர்ந்து, ரத்தினங்கோத்த ஹாரத்தைப்போன்று முறையாக இருக்கும். கேட்போர் ஆரம்ப முதல் இறுதிவரையில் வெறுப்பென்பது இல்லாமல், இவர் மேற் சொல்லப்போவதை ஆவலோடு எதிர்பார்த்தவண்ணம் இருப்பார்கள். இவருடைய கதையோ, பஜனையோ, ஸங்கீத நிரம்பியதாகவே இருக்கும். இவர் ஆரம்பத்தில் ஹே கிருஷ்ணா! என்று தொடங்கி, கீர்த்தனம் பாடும்போதே மந்திரத்தாற் கட்டுண்ட பாம்புகள்போல் சபையினர் மெய்ம்மறந்து விடுவார்கள். இவர் வீண் பதப் பிரயோகங்களைச் செய்யவும், பகவத்விஷயமல்லாத விஷயத்தைக் கூறவும்மாட்டார். இவருடைய வாக்கிலிருந்து வெளிவரும் நீதிகளும், சுலோகங்களும் கேட்போர் மனதைப் பிணித்து, அவர்களை நன்முறையில் நடந்துகொள்ளும்படி செய்யும். கதாபிரசங்கம் முழுவதும், ஸ்ரீகிருஷ்ணபக்தியே பரிமளிக்கும். இவருடைய கதையை, பல மஹாவித்துவான்களும், பிரபுக்களும், பெரியோர்களும் பன்முறை கேட்டு, இவரது பக்தியன்பை உண்டு அதனால் மிக்க சந்தோஷமடைந்தனர். கோபால பாகவதருடைய கதாபிரஸங்கத்தின் நோக்கம், பொதுஜனங்களுக்குப் பக்தியை உண்டுபண்ணி அவர்களை நல்வழியில் செலுத்தவேண்டும் என்பதே. பக்திரஸம் ததும்பும் விஷயங்களை இவர் சொல்லும்பொழுது எத்தகைய கன்னெஞ்சமும் கரைந்துருகும்படி செய்வார். கேட்போர் கண்ணீர் உகுத்து மெய்சிலிர்த்து ஆனந்த பரவசமாவார்கள். இவரைப் பயபக்தியுடன் உபசரித்துவந்த பக்தர்களும் பெரியோர்களும் பலராவார்.

பாகவதரின் குணமும் பிறநிகழ்ச்சிகளும்.

ஸ்ரீகோபால பாகவதர், பகவந்நாம விக்கிரயஞ்செய்து திரவியார்த்தமாகக் கதை செய்பவரல்லர். ஹரிகதை நிமித்தமாக இவர் யாரிடமும் எதையும் விரும்பியதில்லை. இவர் தந்தை இறந்தவுடன், தனக்கு ஸம்ஸாரபந்தம் நீங்கினதாக மகிழ்ந்து அன்றுமுதல் உஞ்சவிர்த்தி செய்தே காலக்ஷேபம் செய்துவந்தார். உலகத்தில் பகவத்பக்தி ஒன்றையே பொருளாக மதித்தவர். இவருக்கு ஹரிகதையின் பொருட்டாக பல பிரபுக்கள் சம்மானமாக பெருந்தொகையை அளிக்க முன்வந்தபொழுது, அதை பாகவதர் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் பிராமணர்களைத்தவிர மற்றெவர்களிடமும் உபகாரம் பெற்றதில்லை; இது பாகவதருடைய விரதம். இவர் உஞ்சவிர்த்தி செய்வதன் காரணம், சிரமத்தின் பொருட்டாக அல்ல. பாகவதரின் கனவில் ஓர்நாள் ஸ்ரீகிருஷ்ணபகவான் தோன்றி, 'நீ உன் பக்தர்களுடன் உஞ்சவிர்த்தி எடுத்தே அன்றாட வாழ்க்கையை முடித்தல்வேண்டும்' என்று அருளினராம். அதன்படியே இவருடைய கோஷ்டியான நூறு பக்தர்களுடன் பஜனை செய்துகொண்டே வெளியூர்களிலும், உள்ளூர்களிலும் உஞ்சவிர்த்தி எடுத்து காலக்ஷேபத்தை நடத்தினார்.

ஒருசமயம், பாகவதர் தனது சிஷ்யர்களான நூறு பக்தர்களுடன் கோஷ்டியாக பல ஊர்களிலும் தங்கிப் பஜனை செய்துகொண்டே பிரயாணம் செய்துகொண்டு மன்னார்குடிக்குச் சென்றார்கள். மன்னார்குடியிலுள்ள ராஜகோபால ஸ்வாமிகள் சந்நிதியிலும், வீதிகளிலும் பஜனை செய்தார். பாகவதர் பஜனை செய்து வீதியில் செல்லுகையில், அங்கிருந்த சகல சாஸ்த்ரவித்பன்னரும், லோகப்ரஸித்தருமான பிரம்மஸ்ரீ ராஜு சாஸ்திரிகளவர்கள் பாகவதரின் பஜனை கோஷ்டியையும், பக்தியையும், பாகவதரின் பாகவதஞானத்தையும் கண்டார். இவ்வளவு இளமையில் இவ்வித பக்தியையும் வித்பத்தியையும் நான் கண்டதில்லை என்று திகைத்து, மனமகிழ்ந்து தனது ஸகபாடியான சுவாமிகள் ஒருவரைப் பார்த்து, "ஆஹா! பார்த்தீரா! என்னுடைய சாஸ்த்ரவித்பத்தி பெட்டியில் இருக்கிறது. கோபால பாகவதருடைய பக்தியும் வித்பத்தியும் எங்கும் பிரகாசிக்கின்றது" என்று சொல்லி கோபால பாகவதரைப் பார்த்து, "நீ ஸாக்ஷாத் கோபாலனேதான்" என்று புகழ்ந்து அவர்களை உபசரித்தாராம்.

ஒருசமயம் பாகவதரவர்கள் தம் சிஷ்யர்களுடன் புறப்பட்டு தஞ்சை நகர்க்குப் பிரயாணமானார். போகும்பொழுதே சில ஊர்களில் தங்கி பஜனை முதலியன செய்து, பின்பு தஞ்சையை அடைந்தார்கள். தஞ்சையிலிருந்த பெரியோர்களால் வரவேற்கப்பட்டு, ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோவில், ஸ்ரீராஜகோபால ஸ்வாமி கோவில் முதலிய இடங்களில் ஹரிகதை செய்தார். அப்பொழுது சபையிலிருந்த பெரிய ஸங்கீத வித்வான்களும், பண்டிதர்களும் பாகவதரின் பக்திக்கும் கதைக்கும் மெச்சிப் புகழ்ந்தனர். அப்பொழுது தஞ்சைக்கு அதிபதியாயிருந்த சிவாஜி ராஜா அவர்களும்வந்து, இவரது கதையையும் பக்தியையும் கண்டு மகிழ்ந்து, இவருக்கு சம்மானமாக ஓர் பெருந்தொகையை தாம்பூலத்துடன் தகுந்த மரியாதையாக கொடுத்தற்கு இவரிடம் வந்தார். உடனே பாகவதர் அரசரை நோக்கிப் பணிவுடன், "அரசரே! நான் கேவலம் பணத்தை உத்தேசித்து கதைசெய்ய முன்வரவில்லை. பகவானது பக்திபிரபாவம் சகலருக்கும் தெரியவேண்டும் என்பதே எனது நோக்கம். இந்த சம்மானத்தை நான் ஏற்றுக்கொள்ளத்தகாதவன். ஆதலால் ஸ்ரீகிருஷ்ண பஜனை செய்கின்ற பக்தர்களுக்கு அன்னமளித்து உபசரித்தால் போதுமானது" என்று சொன்னார். அதுகேட்ட அரசர், சிறிது வருத்தமடைந்தாராயினும், அவரது பெருந்தன்மைக்கும் பக்திக்கும் மகிழ்ந்து வியப்புற்று, அவ்விதமே ஒப்புக்கொண்டு, சில நாட்கள் வரையில் பாகவதரைக்கொண்டும் மற்ற பக்தர்களைக்கொண்டும் பஜனை செய்வித்து, எல்லாருக்கும் ஸமாராதனை செய்வித்து உபசரித்தார். பாகவதர் சம்மானவிஷயமாக அரசனிடம் கூறியதுபோலவே பல இடங்களிலும் கூறி 'தனது நோக்கம் என்ன' என்பதை தெரிவித்தார். இதனால் இவருடைய புகழ் எங்கும் பிரகாசித்தது. பாகவதர் தஞ்சைக்கு வந்திருந்தகாலத்தில், சிவாஜியின் தந்தையான சரபோஜிராஜா அவர்களது குருவும் துறவியுமான ஆந்திரபிராமணர் ஸ்ரீசேதுபாவா ஸ்வாமிகள் என்பவர் அங்கு இருந்தார். அப்பொழுது கோபால பாகவதரின் ஹரிகதா காலக்ஷேபத்தையும், பக்தியையும் நேரில் கண்ட ஸ்ரீசேதுபாவா ஸ்வாமிகள் மனம் மகிழ்ந்து, பாகவதருக்கு இப்பொழுது உபதேசம் செய்வித்தால், நல்ல பக்குவமான நிலையை அடைவார் என்று எண்ணி பாகவதரோடு அளவளாவினார். அப்பொழுது பாகவதரும் பாவாஸ்வாமிகளைப்பற்றி முன்னமேயே நன்கு கேள்விப்பட்டவராதலால், அவரைக்கண்டு சம்பாஷிக்க நேர்ந்ததுபற்றி மனமகிழ்ந்து, அவரோடு அளவளாவினர். ஸ்ரீசேதுபாவா ஸ்வாமிகளது சம்பாஷணையிலிருந்து பாகவதர் பக்தியில் அதிகப்பற்றுடையவராய் தனக்கு உபதேசம் செய்துகொள்ள விருப்பமிருப்பதையும் தெரிவித்தார்.. சுவாமிகளும் பாகவதருக்கு முறைப்படி உபதேசம் செய்வித்தார். சேதுபாவா ஸ்வாமிகளைத் தாம் குருவாக அடைந்ததுபற்றி பாகவதர் ஸந்தோஷம் கொண்டு சிலநாள் அங்கு தங்கினார். சேதுபாவா ஸ்வாமிகள் சங்கீதத்தில் சிறந்த வித்துவான்; ஸ்ரீகிருஷ்ண பக்தர். சில தினங்கள் கழிந்தபின்பு, பாகவதர் வரகூருக்குப் பிரயாணப்பட்டு குருவிடம் விடை பெற்று தமது சிஷ்யர்களுடன் வரகூர் வந்துசேர்ந்தார். பாகவதர் பெரும்

பாலும் வாகூரிலேயே தமது சிஷ்யர்களுடன் ஸத்காலக்ஷேபம் செய்துகொண்டு வாழலுற்ருர். ஸதா கோவிலில் பஜனை செய்வதும் கதை செய்வதுமாக காலத்தைக் கழித்தார்.

இவர் காலத்திலிருந்துதான் சிறப்பாக வாகூரில் உத்ஸவங்களும், கும்மி, கோலாட்டம், பஜனை முதலியவைகளும் ஏற்பட்டன. இவர் ஸ்ரீதீர்த்தநாராயணருடைய உத்ஸவபத்ததிப் பிரகாரமாகவே உத்ஸவத்தை நடத்திவந்தார். அந்த ஸ்ரீகிருஷ்ண கர்ணமிருத விசேஷமே இன்றும் அவ்வூரில் பரிமளித்து வருகின்றது.

பாகவதர் ஸ்ரீசேதுபாவா ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்றுக் கொண்டதிலிருந்து மிக்க மேன்மையுற்ருர். பொன் மலருக்கு வாசனையுங்கூட இருந்தால் எவ்விதமோ அப்படி இன்னும் விசேஷ பக்தியும் ஹரிகதையில் புதிய சோபையும் உண்டாயிற்று.

இவருக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் பிரத்யக்ஷம் என்று பெரியோர்கள் சொல்லுகின்றனர். இவரிடம் முக்கிய சிஷ்யர்களாக இருந்தவர்கள் ஸ்ரீசீதாராம பாகவதர் என்பவரும் நரஸிம்ஹ பாகவதர் என்பவருமாவர். இவருடைய பிற்காலத்தில் தக்ஷிண தேசத்தில் கோபால பாகவதரின் புகழை நிலை நிறுத்தி பரிமளிக்கச் செய்தவரும் ஹரிகதையில் ஒப்பில்லாப் புகழைப் பெற்றவரும் நரஸிம்ஹ பாகவதர் அவர்களே. இவரை அறியாதவர் இருக்கமாட்டார். இவர் காலமாகி வெகுகாலமாய்விட்டது. நரஸிம்ஹ பாகவதர் குருபக்தியில் சிறந்தவர்; கோபால பாகவதரின் அந்தியகாலம் வரையில் உடனிருந்து பணிவிடை செய்தவர்.

பாகவதரின் பிரிவு.

ஸ்ரீபாகவதரவர்கள் தக்ஷிண தேச முழுவதிலும் ஹரிகதை செய்து புகழ்பெற்று, எங்கும் பகவத் பக்தியை விருத்தி பண்ணினர். பாகவதர் சுமார் அறுபத்திரண்டு வயதுவரை இருந்ததாகத் தெரிகிறது. இவர் தமது நிர்யாண தினத்தைத் தெரிந்துகொண்டு முதல் நாளே வெளியூர்களிலுள்ள அடியார்களையும், சிஷ்யர்களையும் வரவழைத்து வைத்துக் கொண்டு தனது அந்திய காலத்திலும், பகவந்நாம கீர்த்தனங்களுடனும் பஜனைகளுடனும் ஸ்ரீகிருஷ்ண ஸ்மரணையுடனும் இருந்து பிராண வியோகமடைந்தார். தற்பொழுது ஹரிகதை செய்பவர்கள் முதலில் கோபால பாகவதரை குருஸ்துதி செய்து கதையைத் தொடங்கும் முறை, அவர்களது குருபக்தியையும் அன்பையுந்தெரிவிக்கின்றது. ஸ்ரீகோபால பாகவதருடைய உருவப்படமும் ஸ்ரீநாராயண தீர்த்த ஸ்வாமிகளின் உருவப்படமும் வாகூர் கோவிலில் வைக்கப்பட்டு ஆராதிக்கப்பட்டு வருகின்றன. கோபால பாகவதரின் புத்திரர் ராதா கிருஷ்ண பாகவதர் என்பவரும் ஹரிகதா காலக்ஷேபம் செய்துவாழ்ந்து வந்தார். இவர் காலமாகியும் வெகு காலமாகிவிட்டது.

புஸ்தக விமர்சனம்

தமிழ்ப் புலவர்கள் வரலாறு: பதினேழாம் நூற்றண்டு :—(படங்களுடன்) பண்டித, ச. சோமசுந்தர தேசிகர் எழுதியது. **1939.** விலை ரூ. **1—4—0.**

"ஒவ்வொரு நூற்றண்டிலுமுள்ள தமிழ்ப் புலவர்களின் வரலாற்றை முறையே எழுத வேண்டும் என்ற கருத்து ஆசிரியர் மனதில் வெகு காலத்திற்கு முன்பே உண்டாயிற்று. **16**-ம் நூற்றண்டு தமிழ்ப் புலவர்கள் வரலாறு என்ற புத்தகத்தை **1936**-ல் எழுதி வெளியிட்டார்கள். இப்போது **17**-ம் நூற்றண்டுப் புலவர்களைப்பற்றிய வரலாறு ஒன்று எழுதி அச்சியற்றி முடித்து உள்ளார்கள். ஆனல், இவ் வரலாறு வெளியிடுவதற்குமுன் ஆசிரியர்

உலகவாழ்வை நீத்தமை பெரிதும் வருந்தத் தக்கது'' என்று ஆசிரியரின் மகனார் S. இராமலிங்கம் பதிப்புரையில் கூறுகிறார். இந்நூல் 46 புலவர்களைப்பற்றிக் கூறுவது. இவர்களுள் 11 புலவர்களின் பெயர் ஊர் முதலியன அறியக்கூடவில்லை. ஏனைய 35 புலவர்களிலேயும் பலரைப்பற்றி, இந்நூலின் உதவியின்றேல், யாதும் அறிய இயலாது. குமரகுருபரர், மணவாள தாசர், அந்தகக்கவி வீரராகவர், சிவப்பிரகாச சுவாமிகள், கடிகை முத்துப்புலவர், படிக்காசுப்புலவர், உமறுப்புலவர் முதலிய சிலரைப்பற்றிய சிலவிவரங்களே தனிப்பாடற்றிரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி முதலிய தொகுதிகளாலும், புலவர் சரிதத்தாலும், அவர்கள் இயற்றிய நூல்களின் பதிப்புக்களிலேயுள்ள முன்னுரைகளாலும் அறியக்கூடும். அவ்விவரங்களையெல்லாம் சீர்தூக்கி தாம் அரிதிற்கண்ட குறிப்புக்களோடு சேர்த்து ஒப்பிட்டு ஆராய்ந்து முடிவு கூறியுள்ளார்கள். தாம் கண்ட முடிவுகள் பிறர் கொண்ட முடிவுகளுக்கு முரணாக இருப்பின், பிறருடைய கொள்கைகளை எடுத்துக் காட்டி தாம் அவற்றிற்கு மாறாகக் கொள்வதற்குக் காரணங்களையும் காட்டுகின்றனர் இவ்வாசிரியர். இவ்வாறு ஆராய்ச்சி முறையிலே தம்முடைய துணிபுகளை நிர்த்தாட்சிணியமாகக் கூறுவதாலேதான் ஆராய்ச்சி மேன்மேலும் சிறப்புற்று உண்மை துலங்குவதற்கு ஏதுவாகும் அன்றோ? மீனாட்சியம்மை குறம் முதலிய மூன்று நூல்களை குமரகுருபரர் இயற்றவில்லை என்று மஹாமஹோபாத்திய ஐயரவர்கள் கூறுகிறார்கள். குறத்திலுள்ள வாழ்த்துப்பாவிலே அந்நூலை ஆதரித்த பிரபு 'கச்சிநகர்த் திருமலை பூபதி' என்றிருப்பதை எடுத்துக் காட்டி, ''ஐயரவர்கள் சொல்வது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை'' என்பர் இந்நூலாசிரியர். ஐயரவர்களும் இக்குறிப்பினைக் கவனித்திருக்கிறார்கள் என்பது அவர்களது அடிக்குறிப்பால் அறியலாம். எனவே, திருமலை நாயக்கரால் ஆதரிக்கப்பெற்ற வேறொருவர் இந்நூலுக்கு ஆசிரியராக இருக்கலாம் என்றே ஐயரவர்கள் கருதினார்களாதலின், இவ் வாசிரியரது கொள்கை திடப்படவில்லை. பாசவதைப்பரணியை இயற்றியவர் ''ஸ்ரீவைத்தியநாத தேசிரென்றும் இதனை இயற்றியதற்காக அவர் சில மானியங்களைப் பெற்றனரென்றும் கூறுவர். இந்த விவரம் எனக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதிகளாலும் வேறு வகையாலும் தெரியாமையால் இதைப்பற்றி நான் ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை'' என்று மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் கூறியுள்ளார்கள். இந்நூலாசிரியர் ''இந்நூலும் மைலம் பிள்ளைத் தமிழும் பாடியதற்காகவே ஜமீன் சூனம்பேட்டிலுள்ள நிலமும் அளமும் ஆசிரியரது பரம்பரையினர் அனுபவித்து வந்தனர் என்பது ஒன்றே...போதியதாகும்'' என்றும் ''இந்நிலமும் உப்பளமும் இவருடைய சந்ததியாரிடமிருந்து கி.பி. 1894-ம் ஆண்டில் கைமாறியது'' என்றும் கூறுவதாலும், இவ்வாசிரியர் அந்த ஸ்ரீவைத்தியநாத தேசிகரவர்களது பரம்பரையினராதலாலும் இவர் கொள்கை பொருந்தியதென்று தோற்றுகிறது.

இன்னும் அநேக இடங்களில் நூல்களையும் ஆசிரியர்களையும்பற்றிய ஐயங்களையும் தவறுகளையும் இவ்வாசிரியர் தக்க காரணங்களைக் கொண்டு நீக்கி உண்மையை நிலைநாட்டியுள்ளார்கள். உதாரணமாக, ''தண்டலையார் சதகம் சாந்தலிங்கக் கவிராயரால் பாடப்பட்டது' என்றும், ''மான் விடுதூது குழந்தைக் கவிராயர் செய்தது'' என்றும், ''இரசைவடமலையப்ப பிள்ளையின்மேல் புலவராற்றுப்படை பாடியவர் திருமேனிக்கவிராயரன்று, சிறிய ரத்னக் கவிராயரே'' என்றும் கூறுவதைக் காட்டலாம். சென்ற டிசம்பர்மாதம்வரை பிற ஆராய்ச்சியாளர் பத்திரிகைகளிலும் நூல்களிலும் எழுதியுள்ளவற்றை யெல்லாம் தொகுத்தும் ஆராய்ந்தும் தாம் புதிதாக ஆராய்ந்து அறிந்தவற்றைச் சேர்த்தும் இந்நூலைச் சிறப்பித்துள்ளார்கள். இதற்கு ஒரு சான்று சமீபத்திலேயே திருத்தமுற அச்சேறிய சீதக்காதி நொண்டி நாடக ஆசிரியரையும் இவர் இந்நூலிலே குறிப்பிடுவதாகும். இந்நூலிலே வரும் நொண்டி, தான் இந்துவாயிருந்து முகமதியனனதாகக் கூறுவதினின்றுமே போதும், ''இவர் முகமதிய மார்க்கத்தினர் என்பது இந்நூலால் வெளியாகின்றது'' என்பர். ஆயினும், இக்கூற்று இன்னும் ஆராய்தற்குரியது என்பதே என் கருத்து.

அகஸ்திய தாஸன்.